# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ ஆனிமீ : 1911-௵ ஜூலைமீ { பகுதி I


## ஸுக துக்கங்கள் (2)

### PLEASURE AND PAIN

வெளிவஸ்துக்களி லிருந்துவரும் ஸுகதுக்கங்களின் ஸ்வரூபத்தை முன்னர் ஒருவாறு எடுத்துக் கூறினோம். இந்த ஸுகங்களின் பேதங்களை விஸ்தாரமாகத் தைத்ரீய உபநிஷத்தில் அளவிடப் பட்டிருக்கிறது. வேதாத்யயனம் செய்து மேன்மை அடைந்து வருபவன் இவைகளை க்ரமமாக அடைந்து வருவான் என்றும் அங்கு குறிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் சில விஷயங்களை ஸுகம் என்றும் துக்கம் என்றும் நம்மால் பகுத்தறிய முடியாது. ஈச்வரஸ்ருஷ்டி பொதுப்படையாக நிற்பதாதலால், வெளிவஸ்துக்கள், ஜீவஸ்ருஷ்டி (ஒவ்வொருவர் மனோநிலை தேஹநிலை) யால் ஒரு ஸமயத்தில் ஸுகம் தருவன வாகவும், வேறோர் ஸமயத்தில் அவைகளே ஒருவனுக்குத்துக்கம் தருவனவாகவும்; ஒரே வஸ்து ஒரேஸமயத்தில் பலருக்குப் பலவிதமாகவும் காணப்படும். உதாரணமாக ஜலத்தை எடுத்துக் கொள்வோம். க்ருஷி ஸ்நான பானாதிகளுக்கு உபயோகப்படுங்கால் அது ஸுககரமாகவும், ஆற்றுவெள்ளமாக வந்து பெரிய அபாயங்களுக்குக் காரணமாகுங்கால் அது துக்ககரமாகவும், நாவறண்டவர்களுக்கு அது ஸுகமாகவும், தாகமில்லாதவர்களுக்கும் சில வ்யாதிஸ்தருக்கும் அது துக்ககரமாகவும் இருக்கும். இம்மாதிரியேதான் பஞ்சபூதங்களும் அவைகளாலாகிய ப்ரபஞ்சம் முழுவதும். 'வேண்டாப் பெண்சாதி கால்பட்டால் குற்றம், கைபட்டால் குற்றம்;' 'மனங்கொண்டது மாளிகை;' 'உனக்குச்சிரிப்பு எனக்குவயிற்றெரிச்சல்' என்னும் பழமொழிகள் ஸுக துக்கங்கள் என்பவை வெளிவஸ்துவைச் சேர்ந்தவையல்ல; மனம்போன போக்கே என்பதை நன்கு விளக்கும். இந்த ரஹஸ்யத்தை உணர்ந்து 'மனம்போன போக்கே போகவேண்டாம்'. அதாவது ஸுகநிலைகளும் வஸ்துக்களும்வேண்டும், துக்கநிலைகளும் வஸ்துக்களும் வேண்டாம் என்ற விருப்பு வெறுப்புக்கு வீணாக ஆளாகக்கூடாது என்றார் பெரியோர்கள்.

இவ்வாறு ஸுகவிருப்பும் துக்க வெறுப்பும் இல்லாமல் பழகிவந்தால் வாழ்க்கையின் நோக்கம் யாது என்ற கேள்வி பிறக்கும். எதைக்கோரி ஸாதிக்க இந்த வாழ்நாளைச் செலவிடுவது? ஒன்றையும் கோராது நிஷ்காம்யமாக இருப்பது என்பர் சிலர். இது ஸாதாரணமாக அஸாத்யமான நிலை. மேலான விஷயங்களைக் கோராது மனம் கீழான நிலையைவிட்டுவிடுவது என்பது வீண் பேச்சே! ஆதலால் நமது கோரிக்கையை மாற்றிவிடவேண்டும். இதுவரையில் 'எனக்கு ஸுகமே வரவேண்டும்! என்னை துக்கம் அணுகவேகூடாது!, ஈச்வரா உமக்கு என்னவேண்டுமானாலும் ப்ரார்த்தனையாகச் செலுத்திவிடுகிறேன்!' என்று கடவுளிடம் கேட்பதை விட்டுவிடவேண்டும். இவ்வாறு செய்து வந்ததினால் உலகில் மாறிமாறி வந்துகொண்டிருக்கும் தன்மையையுடைய ஸுகதுக்கங்களால் பகவானைச் சிலஸமயம் துதிக்கவும், சில ஸமயம் வெறுக்கவும் நேரிடும். இந்தப் பக்தி செட்டியார் (வ்யாபாரி) பக்தி. ஸுகதுக்க ரஹஸ்யம் உணர்ந்தவர்கள் மஹாபக்த சிரோமணியான ப்ரஹ்லாதர் நரஸிம்ஹ மூர்த்தியிடம் கேட்ட மாறு பக்தி என்னும் வரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, ஆராதனை செய்யுங்கால் கடவுளை நோக்கி. 'பரம்பொருளே! உலகில் ஸுகதுக்கங்கள் மாறிமாறி வந்துகொண்டிருக்கின்றன. அவைகளுள் வருவது வருமே ஒழிய, வாராது வருந்தி யழைத்தாலும் வாராது. மேலும் என்னை எந்தஸமயத்தில் எந்த ஸுகதுக்கங்களைக்கொடுத்து சீர்திருத்தி வ்ருத்திபண்ணி ஆட்கொள்ளவேண்டும் என்பது உமக்குத் தெரியாதா? ஆதலால் ஸுகம் வருங்கால் அதில் மூழ்கி மயங்கிக்கிடக்காமலும், துக்கம் வருங்கால் உணர்விழந்து தட்டழிந்து பதறாது பொறுமையுடன் நிற்கவும் வேண்டிய மனோதிடத்தைக் கொடுக்க உமது பக்தி என்னிடம் மாறாதிருக்கவேண்டும். எக்காலத்திலும் என்மனம் ஒரேவிதமான அமைதியுடன் உண்மைப்பொருளை உள்ளபடி உணர்ந்து தெளிந்திருக்கும் மாறா நிலையைத் தந்தருள வேண்டும்' என்று தான் ப்ரார்த்தனை செய்துகொள்ளவேண்டும்.

ஸுகதுக்கஸ்வரூபத்தை நன்றாக மனனம் செய்து முன்கூறியபடி ப்ரார்த்தனை செய்து பழகிவந்தால் நாளடைவில் மனம் சாந்தி பெற குரு உபதேசத்தால் பரமபதம் கைகூடிவிடும்.


மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

# விவேக போதினி

தொகுதி 4] விரோதிகிருது௵ ஆனிமீ [பகுதி 1


## சுக்லாம்பரதர வ்யாக்யானம்

### FIRST HINDU PRAYER EXPLAINED

शुक्लाम्बरधरं विष्णुं शशिवर्णं चतुर्भुजं
प्रसन्नवदनंध्यायेत् सर्वविघ्नोपशान्तये ॥

செய்யும் கார்யங்களெல்லாம் இடையூறின்றி ஸரிவர நிறைவேறும் பொருட்டு, அவரவர்கள் தங்கள் தங்கள் இஷ்டதேவதையை முதலில் த்யானம் செய்வது வழக்கம். இவ்வாறு விக்நங்களை விலக்குவது மஹாகணபதியின் ப்ரஸாதம் என்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அவரது ஸ்வரூபத்தை த்யானம் செய்ய இந்த ச்லோகம் உதவியாயிருப்பதால் எல்லோரும் இதை முதலில் சொல்வது வழக்கம். இந்த ச்லோகத்திற்குக் கணபதிபரமான அர்த்தம் தவிர ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் ஆகிய இவர்கள் பரமாகவும் உள்ளபொருள்கள் இருக்கின்றன. இவைகளை இங்கு நன்றாக எடுத்து விளக்கி, நம்முன்னோர்கள் இவ்வாறு ஒரே வாக்யத்தால் அநேக மூர்த்திகளைத் துதித்து அவைகள் உள்ளிருந்து ப்ரகாசிக்கும் பரம்பொருள் ஒன்றே என்ற ரஹஸ்யத்தை இவ்வாறு வெளியிட்டிருக்கின்றார்கள் என்பதை எடுத்துக்காட்டுவோம்.

பொதுக்குறிப்பு.—**सर्वविघ्नोपशान्तये** எல்லா விக்நங்களையும் அடக்குதற் பொருட்டு. **ध्यायेत्** த்யானம் செய்யவேண்டும். **विष्णुम्** ஸர்வவ்யாபகர். இப்பதங்களது பொருள் எல்லாவிதப்பொருள்களுக்கும் பொது.

### 1. ப்ரஹ்மாபரமான பொருள்

குறிப்பு:— **शुक्लाम्बरधरम्** —சுக்லம்= இந்த்ரியம் ; (த்ரவம்) அம்பரம்= ஆகாயம் ; தர= பூமி. ஆதியில் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கும் போது முதலில் ஜலத்தை உண்டாக்கி அதில் ஒருவிதையை உண்டு பண்ணி, அதை ப்ரகாசமுள்ள ஓர் அண்டமாகும்படி செய்து, அதிலிருந்து ஆகாயம் பூமிமுதலியவைகளை ஸ்ருஷ்டித்தார் என்பது, புராணம் வேதம் முதலியவைகளில் காணப்படுகிறது. ஆகவே இந்தப் பதத்திற்கு இந்த்ரியம் (ரேதஸ்) மயமான ஆகாயம் பூமி ஆகிய இவைகளை உடையவர் என்பது பொருள்.

**शशिवर्णम्**—சம்= ஸுகம் ; சிவ= மங்களம் ; ந= கொடுப்பது. ஆகவே ஸுகம் மங்களம் முதலியவைகளைக் கொடுப்பவர் என்பதாயிற்று.

**चतुर्भुजम्**—நான்கு களை அனுபவிக்கிறவர்—(புஜ்= உண்ணு. இதிலிருந்து தான் போஜனம் என்பது வந்திருக்கிறது.) அதாவது நான்கு யுகங்களையும் அனுபவிப்பவர் ; அல்லது நான்கு புருஷார்த்தங்களையும் அனுபவிப்பவர் என்பதாகும்.

**प्रसन्नवदनम्**—வெளுப்பான தேஜஸ்ஸோடு வெண்பட்டைஉடுத்திக்கொண்டு வெண்டாமரையில் வீற்றிருக்கும் ஸரஸ்வதீதேவி என்று பொருள்படும். அல்லது அநுக்ரஹத்தோடு கூடிய(ப்ரஸந்ந) முகத்தை(வதனம்) உடையவர் என்று ப்ரஹ்மாவுக்கு விசேஷணமாகவும் கூறலாம்.

பொழிப்புரை:—த்ரவமயமான ஆகாயம், பூமி இவைகளில் எங்கும் வ்யாபித்தவரும், நான்கு கைகளை (புருஷார்த்தங்களை) அனுபவிக்கிறவரும், எல்லோருக்கும் ஸுகம் மங்களம் முதலியவைகளைக் கொடுப்பவரும், அநுக்ரஹ முகத்தை (வெண்காந்தியுடன் கூடி ஸரஸ்வதியை) உடையவருமான, ப்ரஹ்மதேவரை, இடையூறுகளெல்லாம் விலகிப் போவதன்பொருட்டு த்யானிக்க வேண்டும்.

### 2. விஷ்ணு (க்ருஷ்ண) பரமான பொருள்.

குறிப்பு.—**शुक्लाम्बरधरम्**—சுக்லை என்பவள், யது மஹாராஜாவின் பெண்சாதி. அவளை **அம்பாவாக** (தாயாக) உடையவர்கள் யாதவர்கள் முதலியோர். ரம் என்பதால் அவர்களைத் தன்னிடம் வைத்துக்கொண்டிருக்கும் **கோவர்த்தனகிரி** என்பதாயிற்று. **தரம்** என்பதால் அந்தக் கிரியைத் தரித்த(தாங்கின)க்ருஷ்ண என்ற பொருளுண்டாகும். அதாவது யது மஹாராஜன் மனைவியான சுக்லையிடம் தோன்றிய யாதவர்கள் நிலயமாகிய கோவர்த்தனகிரியை தரித்த கிருஷ்ண பரமாத்மா என்பது இப்பதத்தின் பொருள்.

**शशिवर्णम्**—சசி சந்த்ரன் ; வர்ணம்= எழுத்துக்கள். அது **விது** என்பது. ஆகவே விது என்பதைப் பெயராக உடையவர் என்று இந்தப் பதத்திற்குப் பொருள். விது என்னும் பதத்திற்குக் கோசப்படி விஷ்ணு என்றும் சந்திரன் என்றும் அர்த்தம். ஆதலால் இந்தப் பதத்திற்கு முடிவாகச் சந்திரனுக்கு ஏற்பட்டுள்ள எழுத்துக்களைத் தன் பெயரிலுடைய விஷ்ணு என்பது பொருள்.

**चतुर्भुजम्**—கீதை அத்யாயம் 15-ச்லோகம் ‘நான் வைச்வானரனாகி (அக்னியாகி) ப்ராணிகளின் தேஹத்தை நிலயமாகக் கொண்டு நான்கு விதமான ஆஹாரங்களை ஜீர்ணமாக்குகிறேன்’ என்று பகவான் தமது விஷயமாகச் சொல்லிக்கொள்கிறார். ஆகவே இப்பதத்திற்கு நான்குவித ஆஹாரங்களை அனுபவிப்பவர் என்ற சிறப்புப் பொருளையும் இங்கு எடுத்துக்கொள்ளலாம்.

**विष्णुम्**= விஷ்ணுவாயும்.

பொழிப்புரை.—கோவர்த்தனகிரியைத் தரித்தவரா

யும், சந்தானுக்கேற்பட்ட விது என்னும் பெயரை உடையவராயும், நான்கு கைகள் (நான்கு வித ஆஹாரங்களை ஜீர்ணிக்கும்சக்தி) உடையவர் ஆயும், விஷ்ணுவாயும், எப்பொழுதும் மேலான அனுக்ரஹத்தோடுவிளங்கும் மூர்த்தை உடையவராயும், இருக்கும் க்ருஷ்ண பரமாத்மாவை, விக்நங்கள் எல்லாம் தொலையும் பொருட்டு த்யானிக்கவேண்டும்.

### 3. சிவ பரமான பொருள்

குறிப்பு.—**शुक्लाम्बरधरम्**—வெளுப்பு வஸ்த்ரம் உடையவர். வெளுத்ததிக்குகளையே வஸ்த்ரமாகஉடையவர். இதனால்தான் பரமசிவனுக்குத் திகம்பரர் என்ற பெயர் ஏற்பட்டது.

**शशिवर्णम्** சந்த்ரகாந்தியை உடையவர். சந்த்ரனைச் சிரத்தில் இவர் அணிந்தவராதலால் இவருக்கு இக்காந்தி பொருந்தும் என்னலாம்.

**चतुर्भुजम्**—நான்குகளை சாப்பிடுகிறவர் அதாவது ஸம்ஹரிக்கிறவர் என்றுபொருள். அண்டஜ(முட்டையிலிருந்து உண்டாவன) ஸ்வேதஜம்(வேர்வையிலிருந்து உண்டாவன) உத்பிஜம் (பூமியைப் பிளந்துவரும் முளையில் உண்டாவன) ஜராயுஜம் (கர்ப்பப் பையிலிருந்து உண்டாவன) ஆகிய நான்குவகை ப்ராணிகளையும் ஸம்ஹரிக்கிறவராதலால் இது சிவனுக்குப் பொருத்தம் உடையதே.

**प्रसन्नवदनम्**—தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தில் ஸநகாதி யோகிகளுக்கு மிகுந்த கருணையுடன் கூடிய முகத்துடன் வேதாந்த ரஹஸ்யத்தை உபதேசித்தவராகையால் பரமசிவத்தை இவ்வாறு கூறியது.

பொழிப்புரை:—வெளுப்பான திக்குகளை வஸ்த்ரமாக உடையவராயும், ஸர்வ வ்யாபியாயும், சந்த்ரகாந்தியை உடையவராயும், நான்கு விதமான ஜீவராசிகளை முடிவில் ஸம்ஹரிக்கிறவராயும், (ஸநகாதி யோகிகளிடம்) அனுக்ரஹ முகத்தோடுகூடினவராயும், உள்ள பரமசிவனை, விக்நங்கள் எல்லாம் நீங்கும்பொருட்டு, த்யானிக்க வேண்டியது.

### 4. விநாயகர் ப்ரமானபொருள்

குறிப்பு.—**प्रसन्नवदनम्**—மதம் பிடித்த யானை முகத்தை உடையவர். 'ப்ரஸந்நே மத்தவாரண:' என்பது நிகண்டு.

பொழிப்புரை.—வெள்ளை வஸ்த்ரம் உடுத்திக்கொண்டு,ஸர்வவ்யாபியாகி,வெளுப்பான சரீரம் நான்கு கைகள் ஆகிய இவைகளை உடைய மதயானை முகத்தோடுன மஹாகணபதியை,எல்லாவிக்நங்களும் சாந்தியாகும்பொருட்டு த்யானிக்கவேண்டியது. (இதுதான் ஸாதாரணமான பொருள்.)

நண்பர்களே! இந்த ஒரு ச்லோக பூர்வமாக ஒவ்வொருவரும் தமது இஷ்டதேவதைகளைத்தடையின்றி முதலில் த்யானம்செய்து பின்னர் இந்த ச்லோக மூலமாக மனனதித்தியாஸனங்களிலும் பழகிவரலாம். நமது பெரியோர்களுக்கு மூர்த்தித் த்வேஷமேஇல்லை என்பதற்கு இதுவும் ஒரு ஸாக்ஷி. நா. ராமனுஜ சாஸ்திரி.

## முக்ய உபநிஷத்துக்கள்

## THE PRINCIPAL UPANISHADS

### X. ப்ருஹதாரண்யக உபநிஷத்து (3)

### THE BRIHADARANYAKA UPANISHAD

அத்யாயம் 3. (9)—சாகல்யர் யாக்ஞயவல்க்யரை நோக்கித் தேவதைகள் எத்தனை என்ன, அவர் முறையே 3,306, 33, 6, 3, 2, $1\frac{1}{2}$, 1 என்று ஒழுங்காகக் குறைத்துக் கூறிவந்தார். இவைகளுள் ஒவ்வொரு எண்ணிக்கையும் பின்னர் வரும் தேவதா எண்ணிக்கையின் ரூப பேதங்களே ஒழிய வேறல்ல. 8 வஸுக்கள், 12 ருத்ராள், 11 ஆதித்யாள், இந்த்ரன், ப்ரஜாபதி ஆகிய இவர்களே 33 தேவதைகள். ப்ரபஞ்சம் முழுவதும், அக்னி, ப்ருதிவி,வாயு, அந்தரிக்ஷம், ஆதித்யன், ஸ்வர்க்கம், சந்த்ரன், நக்ஷத்ரங்கள் ஆகிய இவ்வெட்டிலேயே தாங்கி நின்று வஸிப்பதால் இவ்வெட்டும் வஸுக்கள் என்னப்படும். 5 ஞானேந்த்ரியங்கள் 5 கர்மேந்த்ரியங்கள் மனம் ஆகிய 11-ம் ருத்ரர்கள். இவைகள் தேஹத்தை விட்டுப் பிரியுங்கால் நம்மைவருத்திஅழப்படுத்துவதால் இவைகளுக்கு ருத்ரர்கள் என்று பெயர். 12 மாஸங்களே ஆதித்யர்கள். இவைகள் கழியுங்கால் ஆயுஸ் முதலியவற்றை எல்லாம் கூடவே இழுத்துச் செல்வதால் இவைகளுக்கு இப்பெயர் வந்தது. இடியே இந்த்ரன், ப்ரஜாபதி யக்ஞமே, அது உபயோகமான ஜந்துக்கள். முற்கூறிய 8 வஸுக்களில் முதல் ஆறனுள் இவை எல்லாம் அடங்குமாதலால் தேவதைகள் 6-ஆகின்றன. இவைகள் திரிலோகங்களுள் அடங்குவதால் தேவதைகள் மூன்று. இவைகள் அன்னம் ப்ராணன் ஆகிய இவைகளுள் அடங்குவதால் தேவதைகள் இரண்டு. இவைகள் எல்லாம் வீசும் திறமையால் வளர்க்கும் தன்மை உடைய வாயுவுள் அடங்க இது $1\frac{1}{2}$-ஆகும். எல்லாம் ப்ராணனுள் அடங்குவதால் தெய்வம் இது ஒன்றுதான். இது தான் ப்ரஹ்மம். இதைத் தத் என்று அழைப்பார்கள்.

இதன்பின்னர் சாகல்யர் உண்மையை உணர்ந்த

வன் லக்ஷணங்களைக் கூறி வருகிறார். "பூமி, காமம், வர்ணம், ஆகாயம், தமஸ், தேஜஸ், அப்பு, ரேதஸ், ஆகிய இவைகளைத் தேஹமாகக் கொண்டு; அக்னி, புத்தி, கண், காது, ஹ்ருதயம், கண், ஹ்ருதயம், ஆகிய இவைகளை லோகங்களாக (ஸ்தானங்களாகக் கொண்டு,) மனத்தையே ஜ்யோதியாகக்கொண்டு, எங்கும் உள்ள புருஷனை உள்ளபடி உணர்ந்தவனே ஞானியாவான் என்று சாகல்யர் கூற அதற்கு யாக்ஞயவல்க்யர் "இது எனக்கு நன்றாகத் தெரியும், இந்தப் புருஷன் தான் முறையே தேஹி, காமி, ஸூர்யனுள் உள்ள புருஷன், ச்ரோதா, அக்ஞானி, ப்ரதிபிம்பம், தண்ணீர் ஸூர்யன் ஆகிய இவையுள் இருப்பவனே. இவனுக்கு இந்த அவஸரங்களுக்கு யார் தூண்டும் தேவதையாக விருப்பது சொல்லும் உமக்குத் தெரிகிறதா பார்ப்போம்" என்று கேட்டார். அதற்குச் சாகல்யர் "தேவதைகள் முறையே அழிவற்ற வஸ்து, ஸ்த்ரீ, ஸத்யம், தேசம், மாணம், மூச்சு, வருணன், ப்ராஜாபதி ஆகிய இவர்களே" என்று கூறினார்.

மேலும் விடாது சாகல்யர் கேட்கத்தொடங்குகிறார். 'திசைகளையும் அவைகளின் தேவதைகளையும் அவைகள் ஸ்தானத்தையும் கூறும்' என்றார். யாக்ஞயவல்க்யர் பதில் கூறுகிறார்.—

| திக்குகள் | தேவதை | ஸ்தானம் | | |
|---|---|---|---|---|
| | | வெளி | உள் | முடிவு |
| கிழக்கு | ஆதித்யன் | கண் | வர்ணம் | மனம் |
| தெற்கு | யமன் | யக்ஞம் | தக்ஷிணை } சிரத்தை } | மனம் |
| மேற்கு | வருணன் | அப்பு | ரேதஸ் | மனம் |
| வடக்கு | ஸோமன் | தீக்ஷை. | ஸத்யம் | மனம் |
| உச்சி | அக்நி | வாக்கு | ... | மனம் |

'எல்லாம் மனத்துள் அடங்கும்' என்று யாக்ஞவல்கியர் கூற 'மனம் எங்கே இருப்பது?' என்று சாகல்யர் கேட்டார். 'இது நம்முள்தான் இருக்க வேண்டும்' என்றார். 'நாமும் நமது மனமும் எங்கே தாங்கி நிற்பது?' என 'ப்ராணாதி வாயுக்களில் நிற்பது', என 'அவைகளின் இருப்பிடம் யாது' என்று விடாது கேட்டார் சாகல்யர். அப்பொழுது ஓங்கித் தைர்யமாக அடித்தார் யாக்ஞவல்க்யர். "இவை எல்லாம் ஸமானன் என்னும் வாயுவைப்போல எங்கும் பரவிநிற்கும் அந்தர்யாமியில் அடங்கும். மற்றைய வஸ்துக்களை இதல்ல இதல்ல என்று நீக்கிச் சேஷிக்கும் வஸ்துவை உணர வேண்டும். அது அழியாதது, மனத்திற்கு எட்டாதது, தாக்கற்றது, பந்தாஹிதமானது முற்கூறிய தேவதைகள் முதலியனவெல்லாம் இதுவே. எங்கே இந்த வஸ்துவைப்பற்றி விஸ்தரியும் பார்ப்போம்," என சாகல்யர் மேற்கூற முடியாது விழித்தார். உடனே யாக்ஞவல்க்யர் எல்லோரையும் நோக்கி 'ஸகல விஷயங்களிலும் செடிகளைப்போலவே ஜந்துக்களும் இருக்கின்றன. மரங்கள் மாண்டபின் அவைகளின் விரை வேர் முதலியவைகளிலிருந்து உண்டாகின்றனவே. அதுபோல ஜந்துக்கள் எதிலிருந்து மரணத்தின் பின் உண்டாகின்றன?' என்று பொதுவாகக் கேட்டு, எல்லோரும் மௌனமாக இருப்பதைக் கண்டு 'இவைகள் உண்டாவதற்கு ஆதாரம் முன்னர் கூறிவந்த சிதானந்த ப்ரஹ்மமே இதுதான் ஸகல கர்மங்களுக்குப் பலன் தருவது. இவ்வாறு அதில் நிலைபெறுபவனே அதை உள்ளபடி உணர்ந்தவனாவான்' என்று கூறி முடித்தார்.

அத்யாயம். 4:—(1)&(2) ஜனகர் ஒருகாலத்தில் தமது ஸபையில் ந்யாயம் விசாரிக்க வந்து உட்கார்ந்தார். அப்பொழுது அங்கு வந்த யாக்ஞவல்க்யரை நோக்கி 'நீர் பசு முதலியவைகளைப் பெற வந்தீரா? அல்லது ரஹஸ்ய விசாரங்கள் செய்ய வந்தீரா?' என்று ஜனகர் கேட்டார். 'இரண்டிற்கும் தான்' என்றார் யாக்ஞவல்க்யர். உடனே இருவருக்கும் வேத விஷய

மான ஸம்பாஷணைகள் தொடங்கின. அதில் யாக்ஞவல்க்யர் ஜனகரை நோக்கி 'நீர் முன்னரே அறிந்திருக்கும் ரஹஸ்யங்களைக் கூறிவிடும். மேல் விஷயங்களை நான் வெளியிடுகிறேன்' என்றார். அதற்கு ஜனகர் "நான் சிலரிடம் இருந்து கேட்ட விஷயங்களை ஒழுங்காகக் கூறுகிறேன். வாக்கு, ப்ராணன், பார்வை, கேட்டல், மனம், ஹ்ருதயம், ஆகிய இவைகளே ப்ரஹ்மம் என்று அறிந்தேன்'என்றார். இவைகளைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டார். அதற்கு யாக்ஞவல்க்யர் கூறுகிறார்.—

| ப்ரஹ்மம் எனப்பட்டவை. | தேஹம் | நிலை. | சிறப்பு. |
|---|---|---|---|
| வாக்கு | நாக்கு | ஆகாயம் | ஞானம் |
| ப்ராணன் | மூச்சு | ஆகாயம் | ப்ரியம் |
| பார்வை | கண் | ஆகாயம் | ஸத்யம் |
| கேட்டல் | காது | ஆகாயம் | அனந்தம் |
| மனம் | மனம் | ஆகாயம் | ஆனந்தம் |
| ஹ்ருதயம் | ஹ்ருதயம் | ஆகாயம் | ஸ்திதி |

இவைகளை இவ்வாறு கருதுவதால் ஒவ்வொன்றும் திடப்பட்டு மேலான நிலை கைகூடும்' என்றார். மேலும் ஜனகர் அவரை இவ்விஷயங்களைத் தமக்குப் போதிக்கும்படி வேண்ட அவர் யோக சாஸ்த்ர விஷயங்களை எடுத்துக்கூறிப்பின் முன்னர் சாகல்யருக்கு முடிவில் அந்தர்யாமி விஷயத்தை எடுத்துரைத்தவாறு இங்கும் போதித்தார்.

(3) & (4) வேறோர் ஸமயம் யாக்ஞவல்க்யர் ஜனகரிடம் வர முன் ஏற்பாட்டின்படி ஜனகர் அவரிடம் கேள்வி கேட்கத் தொடங்கினர். அப்பொழுது யாக்ஞவல்க்யர் 'மனிதன், ஸூர்யன், சந்த்ரன், அக்னி, சப்தம், ஆத்மா ஆகிய இவைகளுள் முறையே பின்னது முன்னதுகள் இருக்கும் தேஜஸ் என்றும், முன்னது அடங்கி விடுங் காலத்திலும் பின்னது ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்' என்றும் எடுத்துரைத்து ஆத்மாவின் அவஸ்தாத்ரய விலக்ஷணமாக இருக்கும் தன்மையைப் பின்வருமாறு எடுத்து விஸ்தரிக்கிறார். இந்த்ரியங்களால் சூழப்பட்டு ஹ்ருதயத்துள் நிலைபெற்றிருப்பவன் ஆத்மா. இவனே ஸ்வப்ன ஸுஷுப்தியாகிய நிலைகளில் உள்ள மாறுபாடுகளோடு தாக்கற்று அப்பாற்பட்டு நிற்பினும், இவன் அவைகளோடு ஸம்பந்தப்பட்டது போலக் காணப்படுவான். தேஹ ஸம்பந்தத்தால் இவனுக்கு இவ்வாறு அனுபவங்கள் ஏற்படுகின்றன. இது நீங்குங்கால் இவன் இவைகளிலிருந்து விடுபடுகிறான், ஸ்வப்நாவஸ்தைக்குப் போகுங்கால் முன்னுள்ள அனுபவாதிகளைக் கொண்டு சென்று தனது ஸ்வந்த தேஜஸ்ஸாலே அவைகளை மறுபடி உண்டாக்கி அப்பொழுது காண்கிறான். இவன் வயதுக்கேற்ப முன் அனுபவங்கள் இவனுக்கு இருக்கும். பால்ய வயஸுகளில் பெரும்பாலும் பூர்வ ஜன்மானுபவங்களும், யௌவனவயதில் இஹஜன்ம அனுபவங்களும், வ்ருத்தாப்யத்தில் வரும் மறுஜன்ம விஷயக் குறிகளுமே இவன் மனதில் குடிகொண்டிருக்கும். இந்த ஸ்வப்நாவஸ்தையில் காணப்படுபவைகள் எல்லாம் உண்மையான வைகளல்ல. இந்த அவஸ்தையில் ஆத்மா ஓடியாடும் விஷயங்கள் மாத்ரம் நன்கு விளங்குமே ஒழிய ஓடியாடுபவன் வெளிப்படையாக விளங்கமாட்டான். கேவலம் விழிப்பில் உள்ள அனுபவங்கள் மாத்ரமே ஸ்வப்நத்தில் வரும் என்று கூறிவிட இடமே இல்லை.

ஸுஷுப்தி அவஸ்தையில் வஸ்து ஸம்பந்தம் பெரும்பாலும் நீங்கிவிடும். அங்கு இவன் தாக்கற்றே ஸாக்ஷியாக விருக்கிறான். மீன் முதலிய ஜந்துக்கள் ஓடியாடித்திரிந்துவருவதுபோல ஆத்மா விழிப்பு கனவு ஆகிய இவைகளில் திரிந்து, அவைகள் ஓய்ந்து தமது இருப்பிடம்

சேர்ந்து சும்மாவிருப்பதுபோலதூக்கத்தில்வந்து அமருகிறான். இந்த ஸமயத்தில் ஸுகதுக்காதிகள் எல்லாம் நீங்க ஒருவித விடுதலை ரூபமான அமைதி உண்டாகிறது. இந்தஸமயத்தில் இவன் ஒருவித விஷயத்தையும் உணராதிருந்தபோதிலும், உணரும் விஷயமும் கருவியும் ஒடுங்கியிருப்பதால் உணராமலிருக்கிறானே ஒழிய உணரும் சக்தி இவனைவிட்டுப்போய்விடவில்லை. இந்த ஸமயத்தில் தான் மாத்ரமாகச் சற்றுச் சேஷிக்கிறான். விழிப்பிலும் கனவிலும்தான் வெளிவஸ்து இருப்பதால் இவன் அதை உணருகிறான். தூக்கத்தில் உணர்பவன் பெருங்கடல்போல ஒன்றுபட்டு இரண்டற்று நிற்கிறான். உண்மை வஸ்துவாகிறான்' என்று மூன்றும் அவஸ்தையின் சிறப்பை எடுத்துக்கூறினார்.

பின்னர் தைத்ரீயம் ஆனந்தவல்லியில் கூறியபடியே ஆனந்த பேதங்களை எடுத்துக்கூறி ஹிர[illegible]ானந்தத்திற்கும் ஸுஷுப்தி ஆனந்தத்திற்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகிறார். 'இம்மாதிரி விழிப்பிலிருந்து தூக்கத்திற்கும், தூக்கத்திலிருந்து விழிப்பிற்கும் மாறி மாறி வந்துகொண்டு தேஹம், வயது வ்யாதி, முதலியவைகளால் தளரும் வரையில் ஆத்மா காலங் கழிக்கிறான். முடிவில் மரத்திலிருந்து பழம் விழுவதுபோல மறுபடி புதுவாழ்க்கைக்கு வந்து சேருகிறான். இவன் இம்மாதிரி பிரியுங்கால் இந்த்ரியாதிகள் இவனுடன் சேர்ந்து ஸுஷுப்தியைப்போன்ற ஓர் உணர்ச்சி நீக்கத்தை உண்டாக்க இவன் ஹ்ருதயத்துள் முழுகுகிறான். இவ்வாறு செய்ய ஒவ்வொரு கருவியிலிருந்து இவன் ஒதுங்குங்கால் அந்தந்த இந்திரிய சக்தி ஓய்ந்துகொண்டே வர ஹ்ருதயம் புரண்டு ப்ரகாசமாகி இவன் ஆத்ம ஜ்யோதிஸ் அதைவிட்டு ஏதாவது ஒரு அங்கத்தின்வழியாக வெளி ஏற ப்ராணனாகிய மூச்சும் உடனே நீங்கும். உடனே அது அவன் ஞானம், கர்மம், முன் ஏற்பட்டிருக்கும் அப்பாஸானுபவ விஷயங்கள் இவைகளைக் கவர்ந்துகொள்ளும். புல்லில் ஊர்ந்து செல்லும் புழுவானது தேஹத்தை வளைத்து முன்னுள்ள புல்லொன்றைப் பிடித்துக்கொண்ட பின்பே எவ்வாறு பின்னுள்ள புல்லைவிடுகிறதோ அவ்வாறே ஆத்மாவும் மற்றொரு தேஹத்தைப் பிடித்துக்கொண்டே முன் தேஹத்தை விட்டுவிடுகிறது. தங்கத்தைக்கொண்டு தட்டான் புதிதுபுதிதான அழகிய உருவங்களை ஸ்ருஷ்டிப்பதுபோல ஒரு தேஹத்தை விட்டு மற்றொரு தேஹத்தைக்கொண்டு தன் விருப்பத்திற்கேற்ற உருவங்களை அமைத்துக்கொள்ளுகிறது. இந்த ஆத்மாதான் எல்லாவித த்வந்த்வங்களும் அடங்கிக்கிடக்கும் ப்ரஹ்மம். தேஹஸம்பந்தம் இருக்கிறவரையில் இந்த ஆத்மா ஸத்கர்மத்தால் சுத்தனாகவும் அசுத்த கர்மத்தால் அசுத்தனாகவும் ஏற்படுவான். ஆசைகளுக்குத் தகுந்தபடி புத்தியும், அதற்குத்தகுந்தபடி கர்மம் நடக்க அதற்குஏற்றபலன் அவனுக்குக்கிடைக்கும். இதற்கு ஏற்ப அநுபவலோகத்தில் தங்கிவிட்டு ஆத்மா மறுபடி லோகத்திற்கு வருகிறது. ஆசை நீங்கியவன் ஆத்மா தன் நிலையிலேயே ஒருவித த்ருப்தியை அடைந்து போக்கு வரவு என்பதே இல்லாது ப்ரஹ்மமே யாகிறது.

ஆதலால்மனத்தில் குடிகொண்டிருக்கும் ஆசாபாசங்கள் சின்னபின்னமாகச் சிதறிவிட்டால் அப்பொழுதே அழியும் குணமுள்ள ஜந்து அழிவற்றவனாகிறான், ப்ரஹ்மத்தை அடைகிறான். பாம்புச்சட்டைப் புற்றின்மேல் விழுந்து கிடப்பதுபோல, தேஹம் வேறாகி நிற்க அடங்கியிருந்த ஆத்மா ப்ரஹ்மமாகிய ஏக ஜ்யோதியாகிறது." இதன் பின்பு இந்நிலையை அடைந்தவனிடம் " ஸ்வதந்த்ரம், ஸோஹம்பாவனை, ஸர்வமும் தன்னுள் அடங்கும் தன்மை, அழிவற்ற ஆனந்தநிலை, நிர்பயத்வம், பூஜ்யதை, ஸர்வஸாரத்வம், நிராசைமுதலியன குடிகொண்டிருக்கும்" என்று கூறினார். 'இந்த நிலையை அடையும் வழி ஸூக்ஷ்மமானது. இந்த நிலை அக்ஞானத்திற்கு அப்பாற்பட்டது. இதை அனுபவித்து உணரவேண்டும். இதில் பேதமே இல்லை. பேதம் காண

பவனுக்குப் பிறப்பிறப்பு மாறாது. இந்தநிலையை எவ்விதத்திலும் நிரூபிக்கமுடியாது. இதை உணர ஞானநிஷ்டையில் பழக வேண்டும். சாஸ்த்ரப்படிப்பு தர்க்கம் முதலியவைகள் எல்லாம் வீண் தொண்டைத்தண்ணிக்குக்கேடே ஒழிய வேறல்ல. இது ஸர்வேச்வரன், கர்மங்களால் தாக்கப்படாதது. இதை ப்ராஹ்மணர்கள் ஸத்அனுஷ்டானங்களால் அடைய முயலுகின்றனர். இதை அடைய எண்ணியே எல்லாவற்றையும் அவர்கள் தயங்காது விட்டுவிடுவார்கள்.' ஆசைகளை எல்லாம் நீக்கி நேதி (இதல்ல) என்ற மார்க்கத்தால் மேன்மை பெற்று ப்ராஹ்மத்தை அனுபவித்து த்வந்த்வாதீரர்களாகிறார்கள். ஆத்மாவையும் மற்று எல்லாவற்றையும் அந்தப்ராஹ்மம் என்றே காண்கிறார்கள். இது எல்லாவற்றையும் விழுங்கித் தனித்து நிர்பயமாகவிருக்கும்'என்று முடிவான நிலையைத் தகுந்த மேற்கோள்கள் மூலமாக யாக்ஞவல்க்யர் பரவசமாகி விளக்கினார். இவ்வாறு கூறிவருகையில் இடை இடையே ஜனகர் அவருக்கு எண்ணிறந்த வெகுமதி கொடுக்க யத்தனிக்க அவைகளை எல்லாம் கவனியாது ஆனந்த பரவசராக எல்லாவற்றையும் இவர் சொல்லிமுடித்தார்.

(5)&(6) இதன்பின்னர் 2-ம் அத்யாயம்(4, 5) ப்ராஹ்மணத்திலிருக்கும் யாக்ஞவல்க்ய மைத்ரேயி ஸம்வாதமாகிய 'ஆத்மா ப்ரியவஸ்து'என்ற விஷயமும், குருபரம்பரையும்காணப்படுகின்றன.

**அத்யாயம் 5.**—(1) இந்த அத்யாய ஆரம்பத்தில் இந்த உபநிஷத் சாந்திமந்த்ரம் காணப்படுகிறது. 'அது (ப்ரஹ்மம்) பூர்ணம் இது (அந்தர்யாமி) பூர்ணம். இந்தப் பூர்ணம் அந்தப் பூர்ணத்திலிருந்து வருகிறது. இந்தப் பூர்ணத்தின் பூர்ணத்தை உணர்ந்து விட்டால் அந்த பூர்ணமே மிஞ்சி நிற்கும்.' ஓங்காரமே (ஓம்) இந்த ப்ரஹ்மம். இதன் மூலமாக எல்லாவற்றையும் உணரலாம்.

(2) ப்ராஜாபதிக்கு மூன்றுவிதக் குமாரர்கள். அவர்கள் தேவர்கள், மனிதர்கள், அஸுரர்கள் என்பவர்களே. இவர்கள் ப்ரஹ்ம லோகத்தில் சிஷ்யர்களாகக் குருகுலவாஸம் செய்தனர். தேவர்களை நோக்கி ப்ரஹ்மா '**தா**!' என்றுஉபதேசித்தார். அவர்கள் அதை '**தமயந்தா** (அடங்கியிரு)' என்று பொருள் படுத்திக் கொண்டனர். மனிதரை நோக்கி அவர் '**தா**' என்றார். அவர்கள் அதைத் **தத்தா** (கொடு)' என்று கொண்டனர். அஸுரர்களை நோக்கி அவர் '**தா**' என, அவர்கள் '**தயதாம்** (தயையாயிரு) என்று அறிந்தனர். இந்த **தா தா தா** என்னும் சப்தம்தான் இன்னும் இடியில் முழங்கிக்கொண்டு நம்மை முற்கூறிய மூன்றுஸத்கர்மங்களையும் செய்யத் தூண்டுகிறது.

(3—10):—ப்ரஜாபதியை ஹ்ருதயமாகவும், ஹ்ருதயத்தை ஸத்யமாகவும், த்யானம்பண்ணும் விதம், அதன்பலன், ஸத்யம் என்ற பதத்யானம், அதை ஸூர்யனாகவும், கண்களுள் உள்ள புருஷனாகவும் த்யானிக்கும் விதம், மனம் ஹ்ருதயத்துள் இருந்து எல்லாவற்றையும் அடக்கியாளும் விதம்,மின்னலை ப்ரஹ்மமாகப் பாவித்து த்யானம் செய்தல், வாக்கைப் பசுவாகவும், அதன் முலைக்காம்பை வைதிக பதங்களாகவும் அவைகள் தேவதைகள் மனிதர்கள் பிதுர்க்கள் ஆகிய இவர்களுக்கு உபயோகப்படும் பால் ப்ராணன், கன்று மனம் என்று எண்ணி த்யானிக்கும் விதம், ஜாடராக்னியின் ஸ்வரூபம், உயிர் நீங்குங்கால் ஒடுங்கும் வழி ஆகிய இவைகள் வர்ணிக்கப்படுகின்றன.

(11) இவைகளை உணர்ந்து வ்யாதியால் படும் அவஸ்தைகள் தபஸ் செய்யுங்கால் ஏற்படும் துக்கங்களே என மதிக்கவேண்டும். இறந்தவர்களைச் சுடுகாடு கொண்டுபோவதை நாடுவிட்டு வனவாஸம் போவது என்றும், பிணம் எரிப்பதை அக்னியில் பிரவேசம் செய்து புநிதனாவதாக மதிக்கவேண்டும். இதனால் பரமபதம் ஸித்திக்கும்.

(12-15) அன்னம் ப்ராஹ்மம் ப்ராணன் ப்ரஹ்மம் என்ற விஷய ஆராய்ச்சி, உக்த விஷய த்யா

னம், காயத்ரீயை ப்ரஹ்மமாக த்யானம் செய்வது,ஒருவன் கர்மம் ஞானம் ஆகிய இவைகளில் பழகிய பின்னர் மரண காலத்தில் தங்கக்கின்ணத்தை கையில்வைத்துக்கொண்டு ஸூர்ய த்யானம்செய்யும் விதம் ஆகிய இவைகள் விஸ்தரிக்கப்படுகின்றன. பாத்திரத்துள்ளிருக்கும் வஸ்து மறைந்து நிற்பதுபோல ஏகாக்ரப்படாத மனத்திற்கு ப்ரஹ்மம் மறைந்தே நிற்கும் என்பதைக் குறிக்க மரணம் அடைவோன் தங்கப்பாத்திரத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியதுபோலும்.

அத்யாயம். 6:—முதலில் சாந்தோக்ய உபநிஷத் 5-ம் அத்யாய விஷயமாகிய ஜ்யேஷ்ட ச்ரேஷ்ட விஷயமும் இந்திரியங்களுள் தம் சிறப்பு விஷயமாக ஏற்பட்ட சண்டை விஷயமும் கூறப்படுகிறது. இதன் பின்னர் சாந்தோக்ய உபநிஷத்தில் அதே அத்யாயத்திலிருக்கும் சுவேத கேது ப்ரவாஹன ஜைவலி, கௌதமஸம்வாதம் காணப்படுகிறது. இதுவரையில் ஞானம் கர்மம் ஆகிய இவைகளின் முடிவு கூறப்பட்டது. ஞானம் ஒரு விஷயத்தோடு ஸம்பந்தப்பட்டதல்ல. கர்மமோ தேவதைகள் மனிதர்கள் ஆகிய இவர்களது ஐச்வர்யத்தைப் பொருத்தது. ஆகலால் பாபம் ஸம்பந்தமில்லாத தனம் கர்மவிஷயமாகச் சேர்க்கவேண்டும். இதற்காக **மந்தம்** என்னும் ஒரு க்ருது இங்கு விஸ்தாரமாக வர்ணிக்கப்படுகிறது. அதில் ஆகுதிகள் கொடுக்கும் விதத்தையும் காயத்ரீமந்த்ரம் உபயோகப்படும் விதத்தையும் இந்த க்ருது சேஷத்தின் சிறப்பைப்பற்றி அநேக ரிஷிகள் வெளியிட்ட அபிப்ராயங்களையும் இங்கு வெளியிட்டிருக்கிறது. இதன் பின்பு ஸ்திரீகளைப்பற்றிய விஷயங்களும் அவர்களோடு புருஷர்கள் நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும், பெண்சாதிகளிடம் உண்டாகும் புத்ரர்கள் விஷயமாக நடத்தவேண்டிய ஸ்மஸ்காராதி கர்மங்களையும், நன்றாக எடுத்துக் கூறி ஸ்திரீபுருஷ ஸம்பந்தத்தை ஒரு யாகமாகீ வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஸாதாரணமான வைதிகவிவாஹத்தை மோக்ஷ மார்க்கத்தில் இவ்வளவு சிறப்பான பாகம் என்றும் ஸ்திரீ புருஷர் சேர்ந்து வாழ்வது ஆத்ம விஷயத்தில் இவ்வாறு உபயோகப்படுத்த முடியும் என்றும் நம்மவர் மதித்திருந்தனர் என்பது நன்குவிளங்கும். முற்கூறிய கர்மங்களை ஸரிவரச்செய்து முடிக்க நியாயமாக ஸம்பாதிக்கப்பட்ட தனம் எவ்வளவு அவச்யமோ அப்படியே வைதிக தர்மப்படி அங்கீகரிக்கப்பட்ட ஸ்திரீயும் அவசியம் என்பது வெளிப்படும். மேலும் பிரஹதாரண்யக உபநிஷத் (1) (தொகுதி 3-பக்கம் 390-பத்தி-2) இல் காட்டியபடி இந்த விவாஹ விஷயத்தை த்யானித்து ஒருவன் மேன்மை அடைய முயலவேண்டும். ஆகவே ஸாதாரணமான விவாஹ விஷயத்தை ஒழுங்குபடுத்த எண்ணியே இவ்விஷயம் ப்ருஹதாரண்யக உபநிஷத்து முடிவில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் பின்னர், முன்னர் இரண்டுதரம் கூறப்பட்ட குருபரம்பரை காணப்படுகிறது.

இந்த ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் பெரும்பாலும் மஹதார்க்கிக ஞானியான யாக்ஞவல்க்யர் ஸம்வாத மூலமாக அரிய விஷயங்களும் மற்றையவிடங்களில் சாந்தோக்ய முதலிய உபநிஷத்துக்கள் ஸாரமும் அமைந்து கிடக்கின்றன. ஆதலால் இதை மற்றைய உபநிஷத்துக்களின் ஸாரம் என்றேகூறலாம்.

ஓம் தத்ஸத்

---

கல்பவ்ருக்ஷத்தின் அடியில் உட்கார்ந்திருந்த ஒருவன் தான் அரசனாக வேண்டுமென்று விரும்பினான். அதேநிமிஷத்தில் அவன் அரசனாய்விட்டான்; அடுத்த நிமிஷம் ஓர் அழகிய இளம்பெண் தன்னிடம் இருக்க வேண்டுமென்று இச்சித்தான். அந்தப்படியே உடனே ஒரு பெண் அவன்பக்கத்தில் வந்து நின்றாள். பிறகு நம்மை ஏதாவது புலிவந்து விழுங்கி விடுமோ என்று நினைத்தான். ஐயோ! நினைத்த மாத்திரத்தில் அந்தப்படியே ஒரு புலியின்வாயில் அகப்பட்டுக்கொண்டான். கடவுளும் இத்தகைய கல்பதருவைப் போன்றவரே' அவரது ஸந்நிதானத்திலே எவன்தான் ஆதரவற்றவனென்றும் ஏழையென்றும் எண்ணிக்கொள்ளுகிறானோ அவன் தன் எண்ணப்படியே இருக்கிறான்; ஆயின் எவன் தன் குறைகளையெல்லாம் கடவுள் தீர்க்கிறார் என்று நம்புகிறானோ, அவன் தன் எண்ணப்படியே யாவையும் அவரிடத்திலிருந்தே பெற்றுக்கொள்கின்றான்.

## சாதுர்யம்

### TACT

மனிதருடைய கார்யஸித்திக்குக் காரணம் ஸாமர்த்யம். ஸாதாரண ஸாமர்த்யத்தால் மாத்ரமே கார்யங்கள் ஸித்தியாவது துர்லபம். இடம் காலம் முதலியவற்றிற் கேற்ற ஸாமர்த்யத்தால் கார்யஸித்தி ஸுலபமாகும். இங்ஙனம் ஸமயோசிதமான ஸாமர்த்யமே சாதுர்யம் என்பது. கெண்டையைப்போட்டு வராலை இழுப்பதும் காற்றுள்ளபோது தூற்றிக்கொள்வதும் சாதுர்யமே. கல்லைக் குத்துவானேன் கைநோகிறதென் றழுவானேனென்று சும்மா இருப்பதும் மௌனம் கலகநாஸ்தி யென்று சில ஸமயங்களில் பேசாமலிருப்பதும், சாதுர்யமே. "கொக்கொக்கக் கூம்பும்பருவத்துமற்றதன், குத்தொக்குகசீர்த்த விடத்து" என்றது இதுவே. "வினையால் வினையாகிக் கோடல்—யானையீால் யானையாத்தற்று" என்றபடி, கம்புக்குக் களைவெட்ட அழைத்துக் கொண்டுபோய்த் தம்பிக்குப் பெண்கொள்ள முடிவுசெய்வது சாதுர்யமே யன்றோ. இவ்வித சாதுர்யம்லௌகிகஸ்திதிக்கு இன்றியமையாதது. இது சிலருக்கு இயற்கையில் அமைந்திருக்கும். ஸமயோசிதமான ஸாமர்த்திய மாகையால் இதற்குப் பொதுவிதி இல்லை. ஆயினும் சில உபாயங்களை அறிந்திருப்பது உபயோகமாகும்.

எல்லாரியல்புகளு மறிந்து ஒவ்வொருவரிடத்தும் மேதை மரியாதை தவறாமல் உபசாரமாக ஒத்து நடப்பது கஷ்டமல்ல. அதனால் நஷ்டம் ஒன்றும் இல்லை, எல்லாருக்கும் ஸந்தோஷமே உண்டாகும். பணத்தால் விளையாத பல நன்மைகள் இதனால் விளையும். இங்ஙனம் எல்லாருக்கும் ஸந்தோஷம் உண்டாகும்படி நடப்பதை இளமையிற்றானே பழகிக் கொள்ளவேண்டும். வயதேறினபிறகு இந்தவழக்கம் உண்டாவது மிகவும் கஷ்டம். வேறு விசேஷ திறமை இல்லாதவர் அநேகர் இவ்வித ஆசார உபசாரங்களால் லௌகிக ஸித்தி அடைகின்றனர். இவைகளை அனுஸரிக்காதவர்கள் மிக்க திறமை வாய்ந்திருந்தும் வீணாக விரோதிகள் ஏற்பட்டு இடர்ப்படுவாராகின்றனர். மற்றவர்களுக்கு ஸந்தோஷம் உண்டாகும்படி நடப்பது நமக்கு ஸந்தோஷத்தையே உண்டாக்குவது அநுபவத்தில் ப்ரத்யக்ஷமாகும். இங்ஙனம் நடப்பதையே திருவள்ளுவர் பண்புடைமை என்பர்.

இங்ஙனம் நடப்பதில் முக்யமாய் கவனிக்கத் தக்க உபாயங்களுள் ஸம்பாஷணை ஒன்று. எவரெவரோடு எவ்வெதை எவ்வெவ்வளவு பேசலாம் என்பதறிந்து, நமக்குரிய வரம்பிலே நின்று பேசவேண்டும். பேச்சின் நிமித்தமாக வீண்வார்த்தை பேசுவது குற்றம். அதைக்காட்டிலும் பேசாதிருத்தலால் பிழையொன்றுமில்லை. பரிஷ்காரமாய்ப் பேசாமலிருப்பதும் யுக்தமல்ல. ஆவதற்கும் பேச்சே காரணம். அழிவதற்கும் பேச்சே காரணம். ஆகையால் முன்பின் பார்த்து மிதமாய்ப் பேசவேண்டும். மிதமாய்ப் பேசுவதையும் பட்டு கத்தரித்ததுபோல் ஒழுங்காகப் பேசவேண்டும்.

நாம் சொல்வதை மற்றவர்கள் கவனிக்கும் விதமாகச் சொல்லவேண்டும். வித்யாமமதை த்ரவ்யமமதை முதலிய காரணங்களால் பராமுகமாக இருப்பார் சிலர் உண்டு. நாம் அதைப் பாராட்டாமல் விடுவதே நன்மை. மற்றவர்கள் சொல்வதை நாம் கவனமாய்க் கேட்கவேண்டும். கவனமாய்க் கேட்பதனால் அனேக உபயோகமானவிஷயங்களை அறியலாம். நாம் கவனமாய்க் கேட்பவர்கள் என்றறிந்தால் நம்மை உருக்கமுடையவர்கள் என்று கொண்டு, நம்மிடம் அன்பு அதிகரித்து, சிலர் தங்களுடைய கஷ்டநஷ்டங்களை நம்மிடத்தில் முறையிட்டுக்கொண்டு தக்க யோசனை சொல்லும்படி வேண்டுவர். அதனால் அவர்களுக்கு ஹிதமான ஆலோசனைகளை எடுத்துரைத்து நன்மை செய்வதற்கான ஸந்தர்ப்பங்கள் நமக்கு நேரிடும்.

சாராயத்தை வார்த்துப் பூராயம் கேட்பார் சிலர். எச்சரிக்கை அற்றிருக்கிறஸமயம் பார்த்து

ஏதோ ஒன்றைக் கேட்டு, நாம் வெளியிடலாகாத ரஹஸ்யத்தை க்ரஹிக்க முயல்வர் சிலர். ஆதலால் வினாவிடைகளைக்கொண்டு அவர்களுடைய நோக்கத்தை உள்ளபடி அறிந்தே, வெளியிடக்கூடிய விஷயங்களை வெளியிட வேண்டும். மற்றவைகளை அடக்கிவைக்க வேண்டும். மனதில் இருக்கும் ரகசியம், மதிகேடனுக்கு வாயிலே.

கவிகளுடைய கருத்தின் ஆழத்தையும் கண்டறியலாம். மனிதருடைய மனதின் ஆழத்தை உள்ளபடி கண்டறிவது எளிதன்று. நீராழங் கண்டாலும்நெஞ்சாழங் காணமுடியாது. உள்ளும் புறமும் ஒத்திருப்பவர் மிகச்சிலரே. அநேகர் நெஞ்சில் நினைப்பது ஒன்று, வாயினால் சொல்லுவது வேறொன்று. ஆகவே வார்த்தையால் மனத்தை அறிவது அஸாத்யம். வார்த்தையின் அளவாகமாத்ரமே ஒருவனை நாம் சத்ருவென்[illegible]த்ருவென்றும் கொள்ளலாகாது. முகத்துக்கு, முகம் கண்ணாடி. "அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டு முகம்" வஞ்சனையில் பழகி முதிர்ந்தவர்களை முகத்தால் மாத்ரமே அறிவதும் எளிதன்று. முகத்தைக் காட்டிலும் கண்ணானது ஒருவன் கருத்தை நன்குணர்த்தும். "பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்கும் கண்ணின் வகைமை யுணர்வார்ப்பெறின்" மிக்க யூகை உள்ளவர்கள் கண்ணின் குறிப்பால் கருத்தை அறியலாம், அங்ஙனம் அறிந்து அவரவர்களுக்கேற்ற விதமாக வார்த்தை சொல்லுவது கார்யஸித்திக்கு அநுகூலமாகும்.

வ்யவஹாரங்களைப்பற்றி ஸ்நேஹிதர்களோடு தர்க்கிப்பதால் மனஸ்தாபம் முதலிய கெடுதிகள் விளைவது பெரும்பான்மை. நம்முடைய கக்ஷி ஸ்திரப்பட்டாலும் சில ஸமயங்களில் ஸ்நேஹத்துக்கு பங்கம் உண்டாகின்றது. ஸ்நேஹ பங்கம் உண்டாக்கும் விதம் கட்சியை பலம் படுத்துவது மொத்தத்தில் துர்பலமே. தங்கள் கக்ஷி துர்பலமாக இருப்பது விளங்கினாலும் அவர்கள் நம்முடைய அபிப்பிராயத்தை அங்கீகரிக்கிறார்கள் என்பதில்லை. ஆயினும் வாதபலத்தால் வ்யவஹாரங்களை வற்புறுத்துவது நிஷ்ப்ரயோசனம் என்பதும் இல்லை. நம்முடைய கக்ஷியைத் தெளிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டினால் அவ்வளவிலே சிலர் தங்கள் அபிப்ராயம் பிசகானதே என்பதைக் கண்டறிவார்கள். அதுவே போதும். வ்யவஹாரத்தை அந்தமட்டில் விட்டுவிடுவது யுக்தம்.

சில ஸமயங்களில் நம்முடைய நினைவே நம்மை ஸதி செய்கின்றது. ஒருவர் உரைத்த ஒரு செய்தி வேறாக நம்முடைய காதில் விழுவதும் உண்டு. கண்டது பாம்பு கடித்தது மாங்கொட்டையாக எதிரில்நடந்ததைக் கண் தவறாகக் கண்டிருக்கவுங் கூடும். கொண்ட அபிப்ராயம் தக்க ஆதாரமின்றித் தவறுதலும் ஸஹஜம். ஏற்கெனவே உண்மையென்று நாம் உறுதியாகக்கொண்டது தப்பாக இருக்கலாம். ஆகவே பிறரிடம் உரைக்க ஒற்றதை த்ருடமாகக்கொண்டு உரைக்க வேண்டா. உறுதியாகவே இருப்பினும் அதை த்ருடமாகக்காட்டாமல் உரைப்பதே உத்தமம்: அதனால் யாதொரு நஷ்டமும் இல்லை.

கோபத்தால் ஒருவர் வெட்டெனப் பேசினாலும், நாம் பொறுமையோடு சாந்தமாக வார்த்தை சொன்னால், அவர் கோபம் தானே தணிந்துபோகும். கோபத்துக் கிடங்கொடுத்தால் கார்யம் கெடும். பயமுறுத்தியும் பலாத்காரம் பண்ணியும் ஆகாத கார்யங்கள் நயத்தால் ஆகும். நயமொழியால் ஜயமுண்டு.

பேசும்போது கரவடமில்லாமல் தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசவேண்டும். நிஷ்கபடமாய் நேர்மையாகப்பேசுவது நல்லதே. ஆயினும்ஓட்டைவாயாகப் பேசுவதும் ஸரியல்ல. நம்மைப்பற்றியாவது நமது சார்பிலாவது நமக்கு விரோதமாயாவது அதிகம் பேசுவது யுக்தமல்ல. வீண் மனஸ்தாபத்தையும் துக்கத்தையும் விளைவிக்கும் விஷயங்களை இடையிடையிலே சுட்டிப் பேசுத

லாகாது. நிர்நிமித்தமாகப் பரிஹாஸ வார்த்தைகள் பேசி ஸ்நேஹபங்கம் உண்டாக்குவது பேதமை.

இனி வேறு உபாயங்கள் சிலவற்றை ஆராய்ந்து பார்க்கலாம். படாடோபம் உள்ளவர்கள் தம்மிடத்தில் இல்லாத திறமையும் இருப்பதாக நடிப்பர். அவர்களைக் கண்டு அஞ்சுவது யுக்தமல்ல. திறமை மிக்கவர் சிலர் தோற்றப் பொலிவின்றி யிருப்பர். இவர்களை இகழ்வதும் யுக்தமல்ல. நம்முடைய திறமையின் நிலைமை நமக்கே விளங்காமல் இருப்பதும் உண்டு. லௌகிகத்தில் வ்யவஹாரங்களில் பழகும்போது தான் அவரவர்களுடைய திறமையின் நிதானம் ஏற்படும். பிறப்பு கல்வி கேள்வி சுற்றுச்சார்பு முதலிய வேறுபாடுகளே திறமை வேறுபாட்டிற்குக் காரணமாகையால், திறமை குறைந்தவர்களைப் பிறர் இகழ்வதற்கு ந்யாயம் இல்லை. திறமை மிக்கவர்களிடம் அடக்கமாகவும் திறமை குறைந்தவர்களிடம் விநயமாகவும் நடப்பது வசிகரத்துக்குரிய செய்கை.

நம்மை விவேகிகளாகப் பாவித்துக்கொண்டு வெளிப்படையாக ஒருவனை மூடனென்று அவனிடம் எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளுதலாகாது. நம்முடைய அபிப்ராயம் பிசகாக இருப்பினும் இருக்கலாம். எப்படி இருப்பினும் நம்முடைய அபிப்ராயம் பிசகென்றே கொண்டு அவன் நம்மை மூடனென்றே கொள்வான். மனிதர் பிறர் செய்த கெடுதியை மறந்தாலும் மறப்பர். நிந்தித்து அவமதித்த குற்றத்தை எக்காலமும் மறவார். பிறரை இங்ஙனம் அவமதித்து நிஷ்டூரம் உண்டாக்கிக் கொள்வது கார்யஸித்திக்கு ப்ரதிகூலமேதவிர இதனால் ஒரு நன்மையும் உண்டாகாது.

எடுத்துக்கொண்ட கார்யம் இடையூறின்றி இனிது முடியும் என்று உறுதியாக இருத்தலாகாது. நல்லது செய்வதில் காலிடையூறும் வரும். கைக்கெட்டினது வாய்க்கு எட்டாமற் போகிறதும் உண்டு. தருணம் வாய்த்தபோதே தக்கபடி கார்யத்தை முடித்துக்கொள்ள வேண்டும். தூண்டிற்காரனுக்கு மிதப்பின் மேலே கண். தருணம் வாய்க்கிறவரையில் தூங்காமற் காத்திருக்கவேண்டும். தூங்கினவன் கன்று சேங்கன்று. சில கார்யங்களில் தருணம் வாய்க்குமென்று காத்திருப்பது வீணாகும். அலை ஓய்ந்து கடலாடுவதில்லை. அலை மோதும்போதே தலைமுழுகவேண்டும்.

மனுஷ ஸ்வபாவத்தை ஸூக்ஷ்மித்தறிவது மிகவும் உபயோகமான வித்தை. மற்றெந்த வித்தைக்கும் இது குறைந்ததன்று. நம்பத் தகுந்தவர் இன்னார், தகாதவர் இன்னார், என்பதோடு நம்பத்தக்கவரை எவ்வெவ்விதத்தில் எவ்வெவ்வளவாக நம்பலாம், என்பதையும் உய்த்துணர்வது மிகவும் முக்யம். இங்ஙனம் உணர்வது எளிதன்று. இதற்கு அநுபவம் அதிகம் வேண்டும். நமக்கு உடந்தையாய் வேலைசெய்யவும் நமக்குக் கீழே வேலை செய்யவும் அவச்யமானவர்களைத் தக்கபடி தேர்ந்து கொள்வது ப்ரதானம். ஒருவனிடத்தில் ஸந்தேஹம்உண்டாயிருந்தால் அவனை வேலையில் அமர்த்திக்கொள்ளவேண்டாம். அமர்த்திக்கொண்ட பிறகு ஒருவன்மீது ஸந்தேஹம் கொள்ளவேண்டாம். ஒருவன்மீது வைத்தால் முழுநம்பிக்கை வைக்கவேண்டும். முன்பின் பாராமல் நம்பி விடுகின்றவர்களே நம்பி மோசம் போகின்றவர்கள். நாமும் மற்றவர்கள் நம்மை நம்புமாறுநடத்தல்வேண்டும். பரஸ்பர நம்பிக்கை இல்லாவிட்டால் எவ்வித கார்யமும் ஸித்தியாவதில்லை.

மற்றவர்களுடைய விருப்பங்களை இயன்றமட்டில் நிறைவேற்றவேண்டும். இயலாத விருப்பமாயின் 'இது என்னால் முடியாது, என்று சொல்ல பின்வாங்கலாகாது. 'இது என்னால் ஆகும்; என்று உரைப்பது எவருக்கும் ஸுலபமே. ஆயினும் ஒவ்வொருவரும்எல்லா ஸந்தர்ப்பங்களிலும் ஸந்தோஷமாய் அங்ஙனம் உரைப்பது முடியாது. ஆகவே 'இது என்னால் முடியாது' என்றுரைப்

பது பின்னும் கஷ்டமே. ‘இது என்னால் முடியாது’ என்று சொல்லப் பின்வாங்கினவர்கள் அநேகர் அழிவுற்றிருப்பது ப்ரஸித்தம். சில வ்யவஹாரங்களில் ‘இது என்னால் ஆகாது’ ‘இது செய்ய நான் ஸம்மதிக்கமாட்டேன்,’ ‘இதில் நான் ப்ரவேசிப்பது யுக்தமல்ல’ என்றுரைப்பது அவச்யமே. ஆயினும் இவ்வித ஸந்தர்ப்பங்களில் கேவலம் வெளிப்படையாக உரைப்பது மனஸ்தாபமும் நிஷ்டூரமும் விளைவிப்பது யுக்தமல்ல. உரைக்கவானதை லளிதமாக உரைக்கவேண்டும். லளிதமில்லாதவனிடம் போகவும் அவனோடு காரியங்களை நடத்தவும் எவரும் விரும்பார். லாபங்காட்டுகின்றவர்களைக் காட்டிலும் லளிதங்காட்டுகின்றவர்களுக்கே காரியங்கள் கைகூடும். அதனால் உண்டாகிற நன்மை வேறெதனாலும் உண்டாகாது.

அற்பகாரியமானாலும் ஆராய்ந்து பார்த்தே அதில் அடியிடவேண்டும். ஆராய்ந்து பாராதவன் காரியமதான் சாந்துயரந்தரும். நுண்ணிய கருமமும் எண்ணித்துணி. அடியிட்ட காரியங்களை அநுகூலமாக முடிப்பதனால் ஸாவதானமும் நிதானமும்வேண்டும். காரிய ஸம்பந்தமான வ்யவஹாரங்களைப் பொறுமையாய்க் கேட்டறிய வேண்டும். கேட்டபின் சிக்கறுக்கத் தக்கவைகளை ஒழுங்காகச் சிக்கறுக்க வேண்டும். பொறுமைக் கடலினும் பெரிது. ஆத்திரப்படுதல் ஆகாது. ஆத்திரம் அடைந்தாலும் அவசரப்பட்டு அதை வார்த்தையாலும் செய்கையாலும் வெளியிடலாகாது. அவசரக்காரனுக்கும் ஆத்திரக்காரனுக்கும் புத்திமட்டு. பதறிச்செய்கிற காரியம் சிதறிக் கெட்டுப்போகும். பதறாத காரியம் சிதறாது.

நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூலேன் என்றிருக்கலாகாது. ப்ரபஞ்ச நாடகத்தில் அவரவர்க்குரிய வேஷம் அவச்யமே. இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும். ஆடையில்லாதவன் அரைமனிதன். வெளிச்சீர் உட்சீரைக் காட்டும் கண்ணாடி. திட்டமாக உடுப்பவன் திட்டமாக வேலை செய்வான் என்பது பொதுஜன அபிப்பிராயம். டால்டமாரம் போட்டுக்கொண்டு போக வேண்டும், டம்பாசாரியாய்த் திரிய வேண்டும் என்பதில்லை: ஒழுங்காக உடுப்பது போதும். தூரத்தில் இருவர் பேசி நகைத்திருந்தால், நம்மைக் குறித்தே அவர்கள் ஏதோ பேசிக்கொள்கிறார்கள் என்று நினைப்பதும் நம்மையே அவமதிக்கிறார்கள் என்று ஸந்தேஹிப்பதும் ஆகாது. எவராகிலும் நம்மை நேரில் பரிஹாஸம் பண்ணி நகைக்கிறபோது நாமும் அவர்களோடு கூடக் கலந்து நகைத்துச் சமாளிப்பது அவர்களைத் தோற்பிக்கும் உபாயமாம். சமாளிக்க முடியாவிட்டாலும் நாமும்கூட நகைத்து விட்டால், பரிஹாஸம் மூலை மழுங்கிப்போகும். பரிஹாஸம் பண்ணின விடத்துக்கூடக் கலந்து நகைப்பவனை எவரும் விரும்புவர். அவன் ஸாரஸமுள்ள விவேகி என்பது விளங்கும். நம்முடைய குறைவைக் கண்டவிடத்து நாமே நகைத்துவிட்டால் மற்றவர்கள் நம்மைக்கண்டு நகையார்கள்.

ஒவ்வோர் ஸமயத்தில் பிறர் நம்மைக்கண்டு பரிஹஸித்து நகைப்பது ஸஹஜமே. அதனால் நமக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாது. பிறர் நகைப்பதற்கு இடமாகுமே யென்று நம்முடைய அபிப்ராயங்களைக் கைவிடலாகாது. நம்முடைய ஸ்வபாவத்தின்படி நடந்தால் பிறர் நகைப்பதற்கு இடமில்லை. நம்முடைய ஸ்வபாவத்துக்கு வேறாக நடப்பது தான் பிறர் நகைப்பதற்குக் காரணமாவது. பிறர் தம்மை அவமதித்தால் நிஷ்காரணமாக நினைத்துச் சிலர் வீணிலே மனஸ்தாபம் கொள்வதுண்டு. நம்முடைய தாழ்வுக்கு நாமே காரணம். ஒருவருடைய அவமதிப்பால் யாதொரு தாழ்வும் உண்டாகாது.

நாம் கவனித்துச் செய்யத்தக்க காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. ஸரியாக அவைகளை நடத்துவதே கஷ்டம். அப்படியிருக்கப் பிறர் முயலுதலான காரியங்களில் ப்ரவேசிக்கும்படி நாமே வழி தேடுவது உசிதமல்ல. நம்முடைய உதவியை விரும்பினால் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் அழையா விட்டுக்கு நுழையாச் சம்பந்திபோல் நம்முடைய காரியங்களை நன்கு கவனிப்பதே நமக்கு அழகு.

தீ. செல்வக்கேசவராயன்.

# ராஜாங்க முறை

## பிரதமக் கொள்கைகள்

**CIVICS: ELEMENTARY PRINCIPLES**

### 5. பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகள்

**FILIAL DUTIES**

(*All Rights Reserved.*)

சென்ற ஜூன்மாத பத்ரிகையில் நேசத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். அது மாத்திரமே யன்றி இன்னும் சில முக்கிய கடமைகள் உள. அவையாவன. மரியாதை, கீழ்ப்படிவு, நன்றியறிதல் முதலியன.

மரியாதையானது நம்பெற்றோர்கள் நம்மினும் மேன்மையானவர்கள் என்பதை நாம் ஒப்புக் கொள்வதே. இதுவே நம்மைக்காட்டிலும் அவர்கள் சுவபாவமாகவே மிகஉயர்ந்தவர்கள் என்பதை வெளிப்படையாய்க் குறிக்கின்றது. உங்கள் பெற்றோர்களுக்கு நீங்கள் மரியாதை செய்யக் கடமைப்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் உங்களைக் காட்டிலும் வயதில் முதிர்ந்தவர்கள் என்பது மாத்திரமேயல்ல. உங்கள் குழந்தைப்பருவமுதல் உங்களைப்பற்றிக் கவலை யெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நீங்கள் கைக்குழந்தைகளாய் இருந்தபோது அன்புடன் பால் கொடுத்து உங்களை வளர்த்தவர்கள் தாய்மார்களல்லவா? உங்களைப் பிரியத்துடன் எடுத்து அணைத்து முத்தங்கொடுத்துச் சீராட்டினார்களன்றோ? உங்களுக்குத் தூக்கம் வராதபோது, தூங்கும்படி இனிமையான பாட்டுக்களைப்பாடி தொட்டில் இட்டுத்தாலாட்டவில்லையா? நீங்கள் தூங்கும்போதும் உங்களைப்பற்றி ஜாக்கிரதை யெடுத்துக் கொண்டவர்களும் அவர்களே. வருத்தத்தினாலும் வியாதியினாலும் அவஸ்தைப்படும்போது மிக ஆவலோடு கண் கொட்டாமல் உங்கள் துன்பங்களை நீக்குமாறு பாடு பட்டவர்களும் அவர்களே. நீங்கள் தட்டித்தடுமாறி கீழே விழுந்தபோது ஓடி வந்து எடுத்து உதவினவர்களும் அவர்களே. பரலோக பிதாவாகிய கடவுளின் பெயரைக் கற்றுக்கொடுத்தவர்களும் அவர்களேதான். உங்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியும் உங்களுக்கு உடுப்பும் வீடும் தந்தும் ஆதரித்திருக்கிறார்கள். உங்கள் வாழ்நாளில் அவர்கள் உங்களுக்கு நன்மை செய்யாத தினமே காண்பதரிது. நீங்கள் அவர்களுக்கு மரியாதை செய்யவேண்டியதற்கு மற்றுமொரு காரணம் யாதெனில் நம்மை ஆளாநிற்கும் கருணைக்கடலாகிய கடவுளுக்குப் பிரதிநிதிகளாய் இருப்பவர்களும் அவர்களே. ஆனதுபற்றி குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய மரியாதையானது, நன்றியறிதல் என்னும் கடமையேயாகும் என்று உங்களுக்கு நன்றாய் விளங்கும். இவ்வித உணர்ச்சி சுயநயமாத்திரத்தாலே எற்பட்டிருக்க முடியாது. ஒரு சிறுவன் பெரியவனானபோது இனி பெற்றோர்களின் உதவி தனக்கு அவசியமில்லை யென்னும் காரணத்தால் தாய் தந்தையர்களுக்கு மரியாதை செய்யாவிட்டால் அவன் மிகக் கொடும் பாதகனே யென்பது திண்ணம்.

நீங்கள் குடும்பத் தலைவர்களாகும்போது உங்கள் பெற்றோர்கள் உங்களை விசேஷமாகக் கட்டளை யிடமாட்டார்கள். உங்கள் குடும்பத்தை நீங்களே வகிக்கும் காலம் வந்தபோது உங்கள் நடத்தை முழுமைக்கும் நீங்களே ஜவாப்தாரியாவீர்கள். ஆனாலும் அப்போதும் நீங்கள் அவர்களிடம் மரியாதையாய்ப்பு பேசவும் நடந்து கொள்ளவும், முன்னிலும் எள்ளளவும் குறைவின்றிக் கடமைப்பட்டவர்களே. எவ்விடத்திலும் முக்யமாய்க் குடும்பத்தார்கள் கூடும் போதெல்லாம் முதல் ஸ்தானமும் மரியாதையும் அவர்களுக்கே. நம்முடைய பெற்றோர்கள் முன்னிலையில் அவர்கள் அனுமதிகொடுத்தாலும் நாம் ஸமத்வமாக உட்கார நாணுகிறோம். கல்யாண முதலிய விசேஷ நாட்களில் முதல் மரி

யாதை அவர்களுக்குத் தான் செய்கிறோம். அவர்கள் பாதங்களில் அர்ச்சிக்கின்றோம்.

சில அறிவீனர்கள் சிறிது ஆங்கிலபாஷை படித்ததனாலேயே தங்கள் வயது சென்ற பெற்றோர்களை அவமதிக்கின்றார்கள். அவர்கள் தங்கள் பெற்றோர்களை அவமதிப்பதுபோலவே அவர்கள் குழந்தைகளும் பிற்காலத்தில் அவர்களைச் சிறிதும் மதியார்கள் என்னும் எண்ணமே தோன்றுவதில்லை. ஆங்கில பாஷையில் மிகத்தேர்ந்த ஒரு வாலிபர் டெப்டி கலெக்டர் (Duputy Collector) உத்தியோகம் பண்ணிக்கொண்டிருந்தாராம். அவருக்கு அதிகப்படிப்பினால் கண்பார்வை குறைவடைய மூக்குக்கண்ணாடி போட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. பெரிய ஐரோப்பிய துரைமார்கள் செய்வதைப்பார்த்து எப்போதும் சட்டையில் மேல் பொத்தான் போடுமிடத்தில் ஓர் புஷ்பம் அணிந்துகொள்வது வழக்கம். பிறப்பினாலும் சுவபாவத்தினாலும் இல்லாவிடினும் போலி நடையினாலும் வெளித்தோற்றத்தினாலும் ஜாதி ஐரோப்பியராகக் கருதி அவ்வண்ணம் செய்தனர்போலும். கலாசாலையில் படிக்கும்போது லகுவால தோஷத்தினால் சுருட்டுப் புகை குடிக்கும் பழக்கமும் அடைந்தார். இவர் தகப்பனாரோ வெகு சிலர். பக்திக்கும் பெருந்தன்மைக்கும் இருப்பிடம். காலந்தவறாமல் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தே தீர்வர். வேத புஸ்தகங்களை நன்கு உணர்ந்தவர். இத்தகைய பெருமான் ஒருநாள் தெய்வபூஜை செய்துகொண்டிருக்கும்போது அவர்வயிற்றிற் பிறந்த மகனாகிய டெப்டி கலெக்டரைப் பார்க்க ஓர் நண்பர் வந்தார். வந்த கனவான் அவரது தகப்பனாரைச் சுட்டிக் காட்டி அவர் யாவரென டெப்டி கலெக்டரைக் கேட்க, தன் தகப்பன் என்று சொல்லிக் கொண்டால் தன் கௌரவத்திற்கு என்ன பங்கம் வந்து விடுமோவென்று எண்ணி, அவர் தன்வீட்டில் பூஜை சாஸ்திரி என்று விடை யளித்தனராம். இதைப் பார்க்கினும் அவமரியாதையும் பாபமும் உலகினில் உண்டோ? கொஞ்சநாளில் அவ்வாலிப டெப்டி கலெக்டர் தன் வேலையையும் இழந்து, சீர் குலைந்து யாவராலும் அவமதிக்கப்பட்டான்.

நம்முடைய பெற்றோர்கள் மேற்கூறியவாறு சிறப்பு வாய்ந்த சில விருத்தர்களாயிராமல் கோபிஷ்டர்களாயும் நியாயவரம்பு தாண்டியவர்களாயு மிருந்தபோதிலும், அவர்களுடைய வெறுக்கத்தக்க காரியங்களைச் சகித்துக்கொண்டு அவர்களையும் மரியாதையாய் நடத்துவது நமது கடமையாகும். இதுவே நமக்கும் விசேஷ பெருமையைப் பயக்கும். ஏனெனில் நற்குணங்கள் வாய்ந்த பெரியோர்களிடத்தில் யாவரும் எப்போதுமே மரியாதையாய் நடப்பார்கள். சாத்மீகிகளுக்கும் கோபம் மூட்டும்படியான அந்யாயச் செயல்களையும் வைவுகளையும் ஆநந்தமாகவே கொண்டு அவர்களுக்கு இன்பமுண்டாகும்படியான காரியங்களையேசெய்து அவர்களைமரியாதையோடு நடத்தும் மக்களே மக்கள். அவர்களின் நிறையும் பொறையுமே மெச்சத் தகுந்தன. மற்றையோர் தாயின் யௌவனத்தைக் கெடுக்க வந்த மானிடப்பதர்களாவர். இதன் உண்மை அடியில் வரும் சரித்திரத்தினால் நன்குவிளங்கும்.

முன்னொரு காலத்தில் மஹா அலெக்சாந்தர் என்னும் நாமம் பூண்ட சுத்தவீரன் ஒருவர் இருந்தார். இவர் ஐரோப்பா கண்டத்தில் மாஸிடோனியா என்னும் தேசத்தரசர். இவர் போகாத நாடும் அடையாத வெற்றியுமில்லை. இந்த இணையில்லா வீரசிகாமணியின் தாயோ பேராசை யென்னும் பேய்பிடித்தவள். மகாஅகங்காரி. தன் மகனுக்கு இராஜ்யம் ஆளுகையில் மிக்க தொந்திரவு கொடுத்துவந்தாள். இவர் நமது ஆசியாவில் அநேக நாடுகளை ஜயித்துவரும் காலையில் தன் தாயினிடத்துள்ள விச்வாஸத்திற்கும் மரியாதைக்கும் அறிகுறியாக தனக்குக் கிடைத்த மகா சிலாக்யமான வஸ்துக்களை வெகுமதிகளாக அனுப்பினார். அவற்றுடன் ஒரு நிருபமும் தன் தாய்க்கு மிக வணக்கத்துடன் எழுதியனுப்பினார். அதில் தன் அரசாட்சியில் மாத்திரம் தலையிடாதிருக்கும்படியாகவும் தன்னால் நியமிக்

கப்பட்ட தேசாதிபதி தேசத்தை நியாயமாயும் சமாதானமாயும் ஆளும்படி அவருக்கு எவ்வித இடையூறுகள் செய்யாமலிருக்கும்படியாகவும் தன்தாயைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். இதைப் பார்த்தபோது அவன் தாய் கடுமையாகத் திட்டிக் கொடுமையாகப் பதில் அனுப்பினாள். அதை மகா அலெக்சாந்தர் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டாரேயல்லாமல் கோபங்கொண்டு அஸப்பியச்சொல் ஒன்றும் சொல்லவேயில்லை. ஒரு சமயம் அவரால் நியமிக்கப்பட்ட தேசாதிபதி யானவன் அவருடைய தாய் தனக்கு விசேஷ தொந்தரவையும் கஷ்டங்களையும் கொடுப்பதாயும், அவ்விஷயமாகத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடில் தான் அமைதியாக தேசத்தை ஆள்வது அசாத்தியமென்றும் மகா விசனத்துடன் ஓர் கடிதம் மஹா அலெக்சாந்தருக்கு எழுதினர். அவர் அதைப் படித்துப்பார்த்ததும் என்ன மறுமொழி உரைத்திருப்பாரென்று உங்களுக்குத் தோன்றுகிறது? சற்றேனும் தன் தாயைக் கண்டித்தாரோ அல்லது கடுமொழி யேதேனும் புகன்றனரோ, அல்லது தன் தாயின் செயலுக்கு நொந்து தேசாதிபதி இன்புறும் இனியவார்த்தைகள் பகன்றனரோ? இல்லவேயில்லை. தன் தாய் அல்லற்பட்டு அழுது விடும் கண்ணீரின் ஒரு சிறு துளியைத் தான் பார்த்துச் சகிக்கமுடியாதென்றும் அதன்முன்னிலையில் தேசாதிபதியின் பதினாயிரங் கடிதங்களும் தனக்கு ஓர் பொருட்டு அல்லவென்றும், தன் தாய் அவர் எழுதியதுபோல பன்மடங்கு துன்பம் விளைவித்தாலும், ஆநந்தத்துடன் அங்கீகரிக்கத் தயாராயிருப்பதாகவும் பதில் சொல்லியனுப்பினர். ஓர் மஹாராஜன் சுத்த சன்மார்க்கன், இணையில்லாப் போர்வீரன் அப்பேர்ப்பட்ட தன் தாயினிடத்தில் வைத்திருந்த மரியாதையே மெச்சத்தகுந்தது. தெய்வ சம்மதமானது. நியாயமானதுதான்.

ஆகையினாலே உங்கள் பெற்றோர்கள் விஷயமாக எப்பொழுதேனும் உங்கள் மனதில் கோபம் பிறந்தால் அந்த க்ஷணமே இச்சரித்திரத்தை நினைத்துக்கொள்ளுங்கள். கோபத்திற்கு இடங்கொடாமலும் அவமரியாதையான நடை எக்காலும் அணுகாவண்ணம் உங்களைக்காத்து வருவீர்களாக.

C. S. ஸுந்தரம் ஐயர், பி.ஏ., எல்.டி.

# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி யமர்ந்த தேவனை
ஏத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

ஆத்திப் பூமாலையை அணிந்தவராகிய பரமசிவனால் விரும்பப்பட்ட கணபதியை அடிக்கடி ஸ்துதிசெய்து நாம் வணங்குவோம் என்பது இதன் பொருள். இங்கு கணபதியை, ஆத்திமலர் மாலை சூடிய பரமசிவன் அமர்ந்த தேவன் என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் கணபதியிடம் பரமசிவனுக்கு அதிக அன்பு என்பது வெளியாகிறது. கணபதி மூத்தபிள்ளை யாதலாலும், தகப்பனுக்கு மூத்த பிள்ளையிடமே அதிக அன்பு உண்டாவது வழக்கம் ஆதலாலும் இவ்வாறுகூறியது பொருந்தும். மேலும் கணபதி பரமஞான மூர்த்தியாயிருத்தலால் பரமசிவனுக்கு அவரிடம் அன்பு அதிகமாயிருக்கிறதென்பது பின் வரும் கதையால் வெளியாகும்.

முன்னொரு காலத்தில் பார்வதியும் பரமசிவனும் ஏகாந்த ஸ்தானத்தில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் பரமசிவன் தமது குழந்தைகளாகிய கணபதி, ஸுப்ரஹ்மண்யர் ஆகிய இருவரையும் அழைத்து "என்னிடம் அருமையான பழம் ஒன்றிருக்கிறது. யாரொருவர் ப்ரபஞ்சம் முழுமையும் சுத்திவிட்டு என்னிடம் சீக்ரம் வந்து சேருகிறார்களோ அவர்களுக்கு இதைக் கொடுத்துவிடுகிறேன்" என்றார். ஸுப்ரஹ்மண்யர் மிகுந்த ஆவலுடன் தமது மயில் வாஹனத்தின்மீதேறி ப்ரபஞ்சத்தை வலம்வர அதிவேகமாய்ப்புறப்பட்டார். ஸுப்ரமண்யர் தலை மறைந்ததோ இல்லையோ, கணபதி மெதுவாக எழுந்து தம் தாய்தந்தையாகிய லோகமாதா, லோகநாதன் ஆகிய இருவரையும் வலம் வந்து "பழத்தை என்னிடம் தந்துவிடுங்கள். முன்னிருந்த ப்ரபஞ்சங்கள், இப்பொழுது உள்ளன, இனி உண்டாகப்போகின்றன, ஆகிய எல்லாம்

உங்களுள் அடக்கம், நான் உங்களை வலம்வந்த தால் ப்ரபஞ்சம் எல்லாவற்றையும் சுற்றினவன் ஆனேன். ஆதலால் பழம் என்னுடையதே" என்று கூறினர். இம்மாதிரி அற்புத ஞான ரஹஸ்யமடங்கியமொழியால் கணபதியிடம் பரம சிவனுக்கு அதிக ப்ரீதி ஜனித்துவிட்டது.

ஆத்திசூடி எழுதிய ஒளவையாருக்குக் கணபதி யே வழிபடு கடவுள், அதாவது இஷ்டதெய்வம், இவள் கணபதியை விடாது ஆராதித்து வந்தாள். இவள் செய்த நூல்களின் ஆரம்பத்திலெல்லாம் கணபதியையே வணங்குகிருள். இவள் கணபதி பக்தியைப்பற்றி பின்வரும் கதை வழங்கி வரு கின்றது.

ஒருநாள் இவள் கணபதி பூஜை செய்ய ஸங் கல்பம் செய்துகொண்டு உட்கார்ந்தாள். அப்பொ ழுது அவள் இருந்த வழியாக ஸுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான்பெருமாள் நாயனரும், கை லாஸத்திற்குப் போய்க்கொண்டிருந்தனர். இவ ளைக்கண்டதும், "நீயும் வாயேன். சிவதர்சனம் பண்ணிவரலாம்" என்று அழைத்தனர். இவளு க்குக் கணபதியிடமிருந்த பக்தி அதிகத்தால் தன்னால் வரமுடியாதென்று கூறிப் பூஜையை வழக்கப்படி ஸாவதானமாகச் செய்தாள். பூஜை முடிந்ததும், கணேசர் தமது துதிக்கையால் அவளை வெகு லகுவாகத் தூக்கி உடனே கைலா ஸத்திற்குக் கொண்டுபோய் வைத்துவிட்டனர். பின்னர் வெகு நாழிகை கழித்துவந்த நாயனர் இருவரும், தமக்குமுன் ஒளவையார் வந்திருப்ப தைக்கண்டு அவள் பக்தி விசேஷத்தைப் புகழ் ந்து பாராட்டிக்கொண்டாடினர்.

### 1. அறஞ்செய விரும்பு

தர்மத்தைச் செய்ய விரும்பு என்பது இதன் பொருள். அறம் பொருள் இன்பம் வீடு என் பவை புருஷார்த்தங்கள் எனப்படும். இவைகள் புருஷர்கள் அதாவது மனிதர்களால் விரும் பப்படுபவைகளாகையால் இவைகளுக்கு இப் பெயர் வந்தது. இவைகளில் அறம் என்பது மனுதர்ம சாஸ்த்ரத்தில் செய் என்று சொன்ன வைகளைச் செய்வதும், விலக்கியவைகளைச் செய் யாது விடுதலுமே. அதாவது ஜாதிதர்மமும், ஒருவனுடைய ஸ்வதர்மமுமே அறமே என்ப தாயிற்று. இன்னும் பொதுவாக நோக்கில் அறம் என்பது இல்லறம் துறவறம் என்பதாகி, முடி வில் கொடுத்தல் என்பதே அறம் என்பதன் சுருக்கப்பொருளாகும். ஆதலால்தான் ஒளவை யார் புருஷார்த்த ஸ்வரூபத்தைச் சுருக்கமாக விளக்கப் புகுந்தவிடத்து,

> ஈதல் அறம்; தீவினை விட்டீட்டல் பொருள்;
> காதல் இருவர் கருத்தொருமித்—தாதரவு
> பட்டதே இன்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
> விட்டதே பேரின்ப வீடு.

என்று வெளிப்படையாகக் கூறியும் ;

> சாதி இரண்டொழிய வேறில்லை ; சாற்றுங்கால்
> நீதிவழுவா நெறி முறையின்,—மேதினியில்
> இட்டார் பெரியோர் ; இடாதார் இழிகுலத்தோர் ;
> பட்டாங்கி லுள்ள படி.

என்று இதே பொருளை வற்புறுத்தியும் கூறி யுமிருக்கிருள். இதையே ஆத்திச்சூடியில் **தானம்** விரும்பு என்றும் அறனை **மறவேல்** என்றும் கூறி யிருக்கிருள்.

இவ்வாறு தீர்மானம் செய்யப்பட்ட அறத்தை எப்பொழுதும் செய்ய விரும்பவேண்டும். தர்ம சிந்தனை இன்றி மனிதனுகிய ஒருவன் ஒருபொழுதும் இருக்கலாகாது. இந்தச் சிந் தனையில்லாது மனதை விட்டுவிட்டால், கெட்ட வைகளாகிய அதர்ம சிந்தனைகள் வந்து குடி கொள்ள அது இடமுகும். ஆகவே தர்மத்தை செய்ய முடியாமலிருந்தபோதிலும், 'அதைச் செய்ய முடியாமற்போய்விட்டதே! ஸமயம் வாய் த்தால் தர்ம வழியிலேயே நடக்கவேண்டும். நல்ல தருணத்தைக் கைவிடலாகாது' என்று தர்மவிஷயமாகவே நமது மனம் ஸதாபாய்ந்து கொண்டிருக்க வேண்டும். இம்மாதிரி இடை விடாது ஒருவன் மனம் பழக்கப்பட்டிருந்தால் தர்மம் செய்யத்தருணம் வாய்க்கின் அதைச்

செய்யாதுவிடான்; தருணம் வாய்க்காதிருந்தால், தருணத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு அதர்ம சிந்தைக்கு இடங்கொடாதிருப்பான். ஆகவே பகுத்தறிவோடு அறஞ்செயவிரும்புவதே, ஸதாஸன்மார்க்கத்தில் நடப்பதற்கு முக்யமான ஸாதனம்.

மேலும் புருஷார்த்தங்களில், இன்பம் என்பது இஹலோக ஸுகத்தைமாத்ரம் கொடுக்கும்; பொருள் இஹபரஸுகங்கள் இரண்டிற்கும் ஸாதனமாகும்; அறமோ இஹம் பரம் வீடு ஆகிய மூன்றையும் கொடுக்கும் திறனை உடையது. அறத்தோடு கூடி இருந்தால்தான் பொருளும் இன்பமும் ஒழுங்கு தவறாது சீரையும் சிறப்பையும் கொடுக்கும். ஆதலால் அறமே மிகச் சிறந்த புருஷார்த்தம், அதை எல்லோரும் செய்ய விரும்பவேண்டும். இதுபற்றியே திருவள்ளுவரும்.—

செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

அறத்தின் சிறப்பைப்பற்றி மஹாபாரதம் சாந்தி பர்வத்தில் **குண்டதார உபாக்யானம்** என்ற ஒரு கதை இருக்கிறது. முன்னொரு காலத்தில் ஒரு ப்ராஹ்மணன் பொருள் அகப்படாமையால் தர்மத்தால் வரும் சிறப்பை உத்தேசித்து அது வருவதற்காகப் பணம் வேண்டும் என்று இடைவிடாது த்யானித்து வந்தான். எத்தனையோ தேவதைகளை ஆராதித்துப் பார்த்தான்: ஒன்றும் பயன்படாமல் போய்விட்டது. ஒருவரும் ஆராதிக்காது விட்டிருந்த ஒரு மேகாதிபதியான **குண்டதாரன்** என்பவனை மிகுந்த பக்தியுடன் தன் கோறிக்கை நிறைவேறுவதற்காக ஆராதித்தான். இவன் பூஜைக்கு மெச்சி குண்டதாரன் இவன் முன்தோன்றி, 'ஆவலுடன் எதிர்ப்பார்ப்பதாலேயே பாபங்களும், பொறுமையால் கோபமும், மோசத்தால் காமமும் உண்டாகும். ஆனால் செய்ந்நன்றிகொல்வதால் வேறு பாபங்கள் உண்டாகாது; அதுவே மேலான பாபமாக ஓங்கிநிற்கும்' என்று எச்சரிக்கை செய்துவிட்டு மறைந்தான். இந்தத் தர்மோபதேசத்தைக் கேட்டு முன்னிலும் பதின்மடங்கு ப்ராஹ்மணனுக்குக் குண்டதாரனிட மிகுந்த பக்தி அதிகரிக்க, தர்ப்பையைப் பரப்பிக்கொண்டு அவனையே த்யானம் செய்துகொண்டு ப்ராஹ்மணன் படுத்துக்கொண்டான்.

பக்தியின் அதிகத்தால் அன்றிரவு அவன் ஒரு ஸ்வப்நம் கண்டான். அதில் **மணிபத்ரன்** என்ற தெய்வலோகாதிபதி அவரவர்கள் கர்மத்திற்கேற்றபடி சீரையும் சிறப்பையும் அளித்துக்கொண்டும், அவைகளைப் பிடுங்கிக்கொண்டும் இருப்பதைக் கண்டான். இப்படி இருப்பவன் காலில் குண்டதாரன் மஹாவிநயத்துடன் பணிவதைக் கண்டான். மணிபத்ரன் என்ன வேண்டும் என்று குண்டதாரனைக்கேட்க, அதற்கு அவன் 'என்னை ஒரு ப்ராஹ்மணன் மனப்பூர்வமாகப் பக்தி பண்ணுகிறான். அவனுக்கு ஸுகம் ஏற்படும்படியான வழியைத் தேடவேண்டும்' என்று வேண்டிக்கொண்டான். இதைக் கேட்டதும் 'ஸரி அப்படியே ஆகட்டும். அவனுக்கு ஏராளமான ஐச்வர்யத்தைக் கொடுத்துவிடுகிறேன்! எழுந்திரு' என்று மணிபத்ரன் ஸந்தோஷமாகக் கூற, குண்டதாரன், 'மானிட சரீரமும் மனமும் நிலையில்லாது, ஐச்வர்யமும் அப்படியே. ஆதலால் அவன் எப்பொழுதும் அறஞ்செய விரும்பவேண்டும். இதைத்தான் அவனுக்கு ஸம்பாதித்துக் கொடுக்க வேண்டும் என்று எனக்கு விருப்பம்' என்றான். மணிபத்ரன் 'அப்படியே ஆகுக' என்று அநுக்ரஹித்தான். இவ்வாறு ஸ்வப்நம் கண்டதும் ப்ராஹ்மணன் விழித்துக்கொண்டான்.

அவன் மனம் அதுமுதல் தர்மத்திலேயே பாய்ந்தோடியது. விஷயப்பற்றுக்கள் நீங்கின. அவன் தவத்திலேயே முனைந்துவிட்டான். முன் குண்டதாரன் செய்ந்நன்றி கொல்வதைப்

பற்றிக் கூறியது அவனுக்கு ஞாபகம் இருந்ததால், லௌகிக மேன்மை தனக்கு வரும்படி செய்யாது தர்மசிந்தை வரும்படி செய்ததை அவஸரப்பட்டு அபகாரம் என்று எண்ணிவிடாது, நிதானித்தான். பழக்கத்தின் பேரில் ராஜாக்கள் முதலிய மற்றையவர்களைவிடத் தான் ஸுகமான நிலையில் ஞானம் நிறைந்திருப்பதைக் கண்டு குண்டதாரனிடம் நன்றி அறிதலுடன் ஸுகமாக வாழ்ந்து வந்தான். அப்பொழுது குண்டதாரன் மறுபடி அவன் முன்தோன்றி உலகத்தவர் காமக்ரோதம் முதலியவைகளுக்கு ஈடுபட்டுத் திருப்தி வாராது கிடந்து உழலுவதை அவன் ஞானக்கண்ணுக்குப்புலப்படுத்தி, 'நீஅறஞ் சேய விரும்பியதால் நினைத்த கார்யங்கள் எல்லாம் கைகூடும் நிலை உனக்கு வந்துவிட்டது. நீயாகப் பார்த்து ஒருவனை அரசனும் ஆக்கிவிடலாம், குபேரனும்ஆக்கிவிடலாம். நிக்ரஹானுக்ரஹசக்தி உனக்கு வந்துவிட்டது' என்று ப்ராஹ்மணனைப் புகழ்ந்து பேசினான். இதைக்கேட்டு ப்ராஹ்மணன் குண்டதாரனைப் பணிந்து பல விதங்களில் தன் நன்றியறிதலை அவனுக்குக் காட்டி, பெரிய மஹானாகி உலகில் நிச்சிந்தையாக உலாவி முடிவில் பரமபதம் பெற்றான்.

அறம் செய்யவேண்டுமென்ற கருத்துடன் பணத்திற்காகத் தவம் செய்தவனுக்கும் ஸகல புருஷார்த்தங்களும் கைகூடி விட்டனவாம். அப்படி இருக்க நேரிட அறஞ்செய விரும்புவோர்களுக்கு வரும் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ!

---

**மனிதன் பிறக்கும்பொழுதே இருவித ஸ்வபாவமுடைமை.**—மனிதன் இருவித ஸ்வபாவத்துடன் இவ்வுலகத்திற் பிறக்கின்றான். ஒன்று முக்திக்கு ஸாதநமாயிருக்கும் வித்யாஸ்வபாவம்; மற்றொன்று ஸம்ஸாரத்திலும் பந்தத்திலும் அழுத்தும் அவித்யாஸ்வபாவம். ஜநநகாலத்தில் இவ்விரு ஸ்வபாவங்களும் தராசின் தட்டுபோல் ஸமநிலையிலிருக்கின்றன. பிறந்தவுடனே ஸம்ஸாரமானது தன் ஸுகங்களையும் போகங்களையும் ஒரு தட்டிலும், ஆத்மாவானது தனது ஆனந்தத்தை மற்றொரு தட்டிலும் வைக்கின்றன. மனிதனது புத்தி ஸம்ஸாரஸுகங்களை விரும்பும்பக்ஷத்தில் ஸம்ஸாரத்தட்டு பளுவாகிக் கீழே பூமியின் பக்கமாய்ச் சாய்கின்றது; ஆத்மாவை விரும்பும்பக்ஷத்தில் ஆத்மத்தட்டு ப்ரஹ்மத்தின் பக்கமாய்ச் சாய்கின்றது.

# கடற்பஞ்சும் பவழமும்

## SPONGES & CORALS

வியாபாரச் சரக்குகளாக மனிதனால் சேகரிக்கப்படும் பல பொருள்களில் அநேகம் பூமியினின்றும் அநேகம் கடலினின்றும் கிடைப்பனவாய் இருக்கின்றன. சுரங்கங்களினின்று வெட்டி எடுக்கும் பொன் வெள்ளி போன்ற உலோகங்களும், கெம்பு வைரம்போன்ற நவரத்னங்களும் பூமி தரக்கூடிய நிதிகளாகும். பவழம் முத்து இவைகள்போன்ற நவரத்னங்கள், கடலினின்று பிறக்கக்கூடியனவாகும். வியாபாரச் சரக்காக உபயோகித்துவரும் கடற்பஞ்சு (sponge)ம், ஸமுத்ரராஜனது நாட்டில் விளையும் ஒருவகைச் சரக்கே.

பிராணிசாஸ்திர விசாரணையில் இன்று எடுத்துக்கொண்ட விஷயம் கடற்பஞ்சையும் பவழத்தையும்பற்றியே. இவைகள் ஸாமான்யமாகக் கடலில் விளையும்படியான பூண்டு செடிபோன்றவைகளாகப் பாவிக்கப்படுகின்றன. கடற்பஞ்சைப் பாசி என்றும், பவழத்தைக் கொடியென்றும் வழங்குவது நாம் கேட்டிருக்கிறோம். இவைகள் செடிவர்க்கத்தினின்று அல்லது பிராணிவர்க்கத்தினின்று பிறக்கும் சாதனங்கள் என்பதைச் சற்று விசாரிப்போம். கடைகளில் காணக்கூடிய கடற்பஞ்சும் பவழமும் பிராணிகளினின்று பிறக்கும் வஸ்துக்கள்தாம். நமது தேகத்துக்கு உறுதிகொடுக்க எலும்புகள் அமைந்ததுபோல மிருதுவான தேக அமைப்போடுகூடிய கடற்பஞ்சு, பவழம், இவைபோன்ற பிராணிகளுக்குக் கடின பதார்த்தமாக ஏற்பட்ட வஸ்துக்கள் தாம் வியாபாரச் சரக்குகளாகப் பிந்தி வெளியே காண்கிறோம். ஆனால்இப்பிராணிகளின் விசேஷம்என்னவெனில் வேரூன்றிச் செடிகொடிகள் போல நிலை பெயர்ந்து செல்லாது தம் வாழ்நாளைக் கழிக்கக்கூடிய பிராணிகள் ஆகும். இதன் விஷயம் பிந்தி விவரிப்பாம்.

**கடற்பஞ்சின் சரிதை:**—பஞ்சுப் பிராணி

யானது கடலில் மிகுதியாகத் தோன்றினும் நல்ல ஜலம் நிறைந்த ஏரி குளங்களிலும் பெரிய துறவுகளிலும் வளரக் காணலாம். ஆனால் வியாபாரச் சரக்காக விற்கப்படும் பஞ்சு, மத்திய தரைக்கடலி(Mediterranean Sea)னின்று எடுக்கப்படும் கடற்பஞ்சே. மற்ற ஜாதிக் கடற்பஞ்சுகள் பலவிதமாகக் கடலோரங்களில் காணலாம். ஆனால் அவைகளினின்று உபயோகமுள்ள மிருதுவான பஞ்சுச்சரக்குக் கிடைக்கக்கூடியதல்ல. சொரசொரப்பா யிருப்பதனாலும் எளிதில் பஞ்சு போகக்கூடிய நிலைமையிலிருப்பதாலும் மற்றப் பஞ்சுகள் உபயோகத்துக்கு வருகிறதில்லை. நமது குளங்களில் காணக்கூடிய பஞ்சு தொட்டால் உதிர்ந்துபோகக்கூடியதும் தேகத்தில் பட்டால் அரிப்பைக் கொடுக்கக்கூடியதுமா யிருக்கிறது.

இப்பஞ்சுப் பிராணியின் தேகம் எவ்வாறு அமைந்திருக்கிறது. எதன்மேல் வேரூன்றியிருக்கும் என்பதைச் சற்றுக் கவனிப்போம். ஜலத்தின் கீழிருக்கும் பாறைகளோ அல்லது எவ்வித கடின பதார்த்தமோ கிடைக்குமாயின் அதன் மேல் வளர ஆரம்பிக்கும். வளர்ந்த கடற்பஞ்சு ஒன்றைப்பரிசோதித்துப் பார்க்கும்போது தேகம் முழுவதும் சிறு துவாரங்களால் நிறைந்து அவைகளுடன் சில பெரிய துவாரங்களும் இடை இடையே யிருக்க நாம் காணலாம். சிறிய துவாரங்கள் வழியாக ஜலம் உட்புகுவதையும் பெரிய துவாரங்கள் வழியாக வெளியே வருவதையும் காணலாம். இப்படித் தனது தேகத்திற்குள் ஏற்பட்ட ஜல ஓட்டத்தினாலேயே பிராணிக்கு வேண்டிய பிராணவாயுவும், ஆகாராதிகளும் கிடைப்பன வாகும். தேகத்திற்குள் காணப்படும் அறைகள் வயிற்றுக்கு ஸமமாகச் சொல்லலாம். அதன் உள்தோல் அமீபாவைப் போன்ற செதில்களால் நிறைக்கப்பட்டிருப்பதால் ஜலத்தோடு உள்ளே கொண்டுவரப்பட்ட நுட்பமான ஜீவராசிகளைப் பிடித்திழுத்து ஜீரணித்துக்கொள்ள சக்திவாய்ந்தவைகளா யிருக்கிறது. தேகத்திற்கு வேண்டாத கழிவு பதார்த்தங்களை வெளியே விலக்குவதற்குப் பெரிதாகக் காணப்படும் சில துவாரங்களே ஸாதனங்களா யிருக்கின்றன. உள்தோல் என்ற காரணத்தினாலேயே வெளித்தோல் ஒன்று இருக்கிறதென்று நம்ப இடமுண்டாகிறது. வெளித்தோல் ஸாதாரண செதில்களால் நிறைந்து தேகத்திற்கே தற்காக்கும் நமது தோல் போன்ற ஓர் போர்வையாகவும் ஸ்பர்ச உணர்ச்சியோடு கூட மற்றப் பிராணிகளின் தேகத்தில் பட்டால் அரிப்பு எடுக்கக் கூடிய சில சுணை முட்பைகளோடு நிறைந்திருக்கின்றன. பின் கூறப்படும் ஸாதனத்தினாலேயே அநேகம் பிராணிகள் பஞ்சைப் பிடித்துத் தின்ன பிரியமில்லாம லிருக்கின்றன. ஊட்டத்தினால் உடல் வளரும் என்பதற்கிணங்க வளர்ந்துகொண்டு வரும் கடற்பஞ்சு மக்கட்பேறு என்ற ஸாதனத்தை எவ்வாறு நடத்துகிறது என்பதும் கவனிக்கத்தக்கது. நான எழுதியபடி அமீபாவைப்போலத் தேகம் இரண்டாகி அதனாலேயே மக்கட்பேறு அடைவதில்லை. ஆனால் பஞ்சின் உட்பாகத்தினின்று கரு உண்டாகி நீந்திப்போய் ஸவுகரியப்பட்ட இடத்தில் தங்கி, வேர் ஊன்றிப் பஞ்சாக வளரும்.

**கடற்பஞ்சைச் சரக்காக்கும் விதம்.**—முத்து குளிப்பவர்கள் சிப்பிக்காக மூழ்குவதைப்போலக் கடற்பஞ்சுக்காகவும் மத்தியதரைக் கடலில் மூழ்கி எடுக்கிறார்கள். கொண்டுவரப்பட்ட பஞ்சு ஜலத்தில் ஊறவைத்து அழுகவேண்டும். பிறகு தேய்த்துக் கழுவி எஞ்சிநிற்கும் மிருதுவான பஞ்சைச் சரக்காக ஏற்றுமதி செய்கிறார்கள்.

**பவழத்தின் சரிதை.**—பவழத்திலும் பல வகையுண்டு. ஆனால் சிவந்த வியாபாரச் சரக்காகக் கொண்டுவரும் பவழத்தைத்தான் பவழமென்றும் சொல்வது வழக்கமாக இருக்கிறது. துவாரங்களும் குழல்களும் நிறைந்த சிவந்த பவழப்புத்தும் வெண்ணிறத்தோடுகூடி பலவிதமாய்க்காணப்படும்கற்பவழங்களும் கொம்பு பதார்த்தத்தால் ஆக்கப்பட்டுப் பல கிளைகளோடுகூடி

செடிமாதிரியாகவும் விசிறிமாதிரியாகவும் காணக்கூடிய கொம்புப்பவழமும் பவழவர்க்கத்தைச் சேர்ந்தவைகளே. மேற்கூறியவைகளில், கொம்புப்பவழத்தின் உபயோகம் இன்னதென்று அறியப்படவில்லை. மற்ற வெள்ளை ஜாதி கற்பவழங்களோ சுண்ணாம்பு செய்ய காளவாய்க்குக் கொண்டுபோகும் சரக்காக இருக்கின்றன. முதலில் கூறப்பட்ட கெட்டியான செம்பவழந்தான் நற்பவளம். அதே செந்நிறத்தோடுகூடி பவழப்புத்து காணினும் எளிதில் நொருங்கிப்போகக்கூடிய நிலைமையில் இருப்பதால் வியாபாரச்சரக்காவதில்லை. ஆனால் நற்பவழத்தையும், பவழத்தையும் எடுத்து இந்நாட்டுத் தமிழ்வைத்தியர்கள் பஸ்பம் முதலியவை செய்வதற்கு உபயோகிக்கிறார்கள்.

**பவழப்பிராணியின் தேக அமைப்பு.**—பவழப்பிராணியின் தேகஅமைப்பு சற்றேறக்குறைய பஞ்சுப்பிராணியினதுபோல ஆகும். இரண்டு தோலால் அமைக்கப்பட்டு வெளித்தோல் ஸ்பர்சத்தோடு கூடிய கவசமாகவும், உள்தோல் ஆகாரத்தை உள்ளடுத்து ஜீரணிப்பதற்கு ஸாதனமாகவும் மக்கட்பேறு மலக்கழிவு முதலிய தொழில்களையும் நடத்தவேண்டிய பாகங்கள் அமைந்துள்ள இடமாகவும் இருக்கிறது. தேகத்தில் உட்புறத்தில் ஒரு அறை ஒரு வாயோடு கூடி காணப்படும். மலபதார்த்தங்கள் வெளி ஏறக்கூடிய ஆஸனத்துவாரம் இதற்குப் பிரத்தியேகமாகக் கிடையாது.

பஞ்சைப்போலத் தேகமாத்யந்தம் துவாரங்கள் இல்லாமையால் இவ்வாயின் வழியாகத்தான் ஜல ஓட்டம் உட்செல்லவும் வெளிவரவும் வேண்டியிருக்கிறது. இந்த ஜல ஓட்டத்தினாலேயே பிராணிக்குவேண்டிய பிராணவாயுவும்ஆகாரமும் கிடைக்கிறது. இப்பவளப்பூச்சிகளுக்கு வாயைச் சுற்றி ஜெவந்திப்பூ (சாமந்திப்பூ) இதழ்கள் போன்ற கைகளும் வரிசையாக இருக்கின்றன. அக்கைகள் எப்போதும் ஆடிக்கொண்டிருக்கும். அப்பிராணியை நாம் தொடும்பக்ஷத்தில் மலர்ந்துகாணப்படும் பவழமலர்ந்த கைகளைச்சுருக்கி மொட்டைப்போல ஆகிவிடும். பிறகு, கொஞ்சநேரத்திற்கெல்லாம் மலர்ந்து முன்போல இருப்பதைக்காணலாம். இந்தக் கைகளிலும் தேகத்தின் வெளிப்புறத்திலும் நச்சுச்சுருள்கள் அமைந்த செதிழ்கள் நிறைந்துள்ளன. மற்றப்பிராணிகள் நெருங்கித் தொடவரும் காலத்தில் இச்சுருள்களின் முனைகளால் குத்தப்பட்டு அரிப்பும் எரிச்சலும் பொறுக்கக்கூடாதபடி விலகிச் செல்லும். பவழப்பிராணிகளில் ஆண் பெண் என்ற விவரம் கிடையாது. உள் அறையினின்று உற்பத்தியாகும் கரு ஒரே பிராணியிடத்தில் பிறக்கும் இருவகைச் செதில்களின் ஐக்கியத்தினால் உத்பவிக்கும். ஆண் உருப்பு பெண் உருப்பு இவை இரண்டையும் ஒரு பிராணியிடமே காணப்படுமாயின் அவ்வகைஅமைப்பை (Hermaphrodite) அர்த்தநாரீ என்று சொல்லலாம். வெகுதூரம் நீந்திச் சென்று தக்க இடம் கிடைத்தபோது தங்கி வேர் ஊன்றிப் பவழப் பிராணியாக வளர்கிறது. இவ்வகை உற்பத்தியைத் தவிர்த்து வேறுவிதமாகவும் பவழப்பிராணி வளர்வது உண்டு. ஒரு பூச்சியே இரண்டாகப் பிளந்தும் அடியிலிருந்து கிளைத்தும் பல பூச்சிகளாவதுண்டு. ஆனால் இவ்வகைப் பூச்சிக்குடும்பங்கள் (colonies) ஒன்றையொன்று ஒட்டியே நிற்கும். அதனால்தான் நற்பவழம்போன்ற பவழக்கிளையைப் பரிசோதிக்குங்கால், தண்டு கிளைகள் நிறைந்து பல புஷ்பங்களோடு காணப்படுகிறது. குடும்ப ஐக்கியமாக வாழும் இனத்தைச் சேர்ந்தது என்பது அதன் பார்வையினாலேயே விளங்கும். பூக்கள் வெண்மை நிறத்தோடிருக்கும். ஆறு இதழ்கள் காணப்படும். ஒவ்வொரு பூவும் ஒவ்வொரு பூச்சி. ஒன்று மற்றவைகளோடு சிவந்த தோலினாலேயே ஸம்பந்தப்பட்டு நிற்பதால் ஒன்றின் ஆகாரம் மற்றொன்றுக்கும் பசியில்லாமல் செய்து விடுகிறது. ஒவ்

வொன்றும் தன்தன் தொழிலைச் செய்துவருவதால் அவைகளுக்குப் பசி என்பதும் பிணி என்பதும், மூப்பு என்பதும் இல்லை. மனித இனத்திலும் இவ்வாறு தொழிலை ஊக்கத்துடன் ஒவ்வொரு குடும்பத்திலும் நடத்தும்பக்ஷத்தில் ஒருவன் ஏழையென்றும், இன்னொருவன் பணக்காரன் என்பதும் இன்றி ஸகல ஆன்மகோடிகளும் பசி, மூப்புத் துன்பமின்றி அநேக காலம் வாழக்கூடும் என்பது எமது துணிபு.

முன் கூறிய கருத்தரித்து உண்டாகும் மக்கட்பேறினால் ஓரிடத்தில் வளர்ந்து பெருகி நிற்கும் பவழக்குடும்பம் அதேயிடத்தில் சங்கை அதிகரித்தால் ஆகாரம் குன்றி மடிந்துபோகாதபடி ஏற்பட்ட ஓர் ஸாதனமாகும். எருக்குப் போன்ற செடியில் உற்பத்தியாகும் விதை தன் அடியிலேயே விழுந்து முளைத்து ஆகாரமின்றி இறந்து போகாதபடி மயிர்க்குச்சுகளால் அமைந்த குடையைக் கொடுத்து விசாலித்த பூமியில் தூர இடம் தேட அனுப்பும் தன்மைப்போல் ஸ்தாவர வஸ்துபோல் நிலைபெற்று வளரும் பவழப் பிராணியும் வெளியே நீந்திச் செல்லக்கூடிய திறமையுடன் குழந்தைகளைப்பெற்றுப் பலவிடங்களிலும் சென்று குடியேற்ற நாடுகளை ஸம்பாதிக்க ஏற்படுத்துகின்றது. இதனாலேயே கிணற்றுத் தவளைபோலிருக்கும் நம் நாட்டாருக்கு ஓரிடத்திலேயே இருந்து பெருகி செல்வம் குன்றி சீர்கெடுவதைப் பார்க்கிலும் குடியேற நாடுகளைத் தேடிச் சென்று பாவி நாமும் முன்னுக்குவர வேண்டியது அவசியம் என்று தோன்றும், என்று நம்புகிறேன். மேலே படித்த சிறு பிராணிகளின் சரித்திரம் வேறு எவ்விதமான புத்திமதிகளைக் கற்பிக்காமல் போனபோதிலும் குடும்ப ஐக்யத்தின் ஸமாதான தர்மத்தின் உயர்வையும், குடியேற்ற நாடுகள் தேடுவது அளவுக்குமிஞ்சிப் பெருகும் எந்த ஜாதியாருக்கும் அவசியம் என்பதையும் கட்டாயம் நாம் அறியலாம்.—

N. S. ஜம்புநாத ஐயர், B.A., L.T., F. Z. S.

## சீனருக்குள் வழங்கிவரும் ஒரு பழங்கதை

## A CHINESE FOLKLORE

ஒரு அரசனிடத்தில் ஒரு சித்ர வேலைக்காரனும் ஒரு தச்சனுமிருந்தார்கள். அவர்களிருவருக்கும் என்ன காரணத்தினாலோ விரோதமுண்டாயிருந்தது. ஒவ்வொருவனும் மற்றையவன் எப்போது ஒழிவானென்று காத்திருந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் சித்திரவேலைக்காரன் அரசனிடஞ்சென்று "பிரபுவே, தங்களுடைய தகப்பனராகிய பெரிய ராஜாவானவர் தாமிருக்கும் தெய்வ லோகத்திற்கு என்னைவரும்படி கட்டளையிட்டார். அவரது கட்டளைப்படியே நான் தெய்வலோகஞ் சென்று அவரைத் தரிசித்தேன். அவரனுபவிக்கும் இன்பஸுகங்களை என்னால் எடுத்துரைக்கமுடியாது. நான் அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு திரும்பி வருகையில், அவர் தங்களிடம் கொடுக்கும்படி இந்தக்கடிதத்தைக் கொடுத்தார்." என்று வெகு விநயத்துடன் ஒரு கடிதத்தை நீட்டினன்.

அக்கடிதம் வருமாறு.—

எனது பிரிய குமாரனுக்குச் சகல நன்மையுமுண்டாகுக. நான் ஸ்வர்க்கத்தில் பலவித இன்பங்களை யனுபவித்து வருகிறேன். இப்போது இவ்விடத்தில் ஒரு கோயில் கட்ட உத்தேசித்திருக்கிறேன். ஆகையால் உன்னுடைய சமஸ்தானத் தச்சனை விரைவாக அனுப்பிவை ; உன்னுடைய க்ஷேமத்தைக் கோறி இங்கே பல கைங்கரியங்கள் செய்து வருகிறேன். அநேக ஆசீர்வாதம்.

இங்ஙனம்,
உனது ப்ரிய பிதா.

அரசன் கடிதத்தைப் படித்துப் பார்த்துப் பொய்யென்றுணராமல், மெய்யாகவே தன் தகப்பனிடமிருந்து வந்ததாக மதித்து வெகுவாய் ஆனந்தித்துஅக்ஷணமே தச்சனை அழைத்து வரும்படி கட்டளையிட்டான்.

தச்சன் சமஸ்தானத்திற்கு வந்ததும் அரசன் அவனைப் பார்த்து "நமது தகப்பனர் தெய்வலோகத்திலிருப்பது உமக்குத் தெரியுமல்லவா? அவர் இப்போது அங்கே ஒரு புதிய கோயில் கட்ட யத்தனம் செய்திருக்கிறாராம். அதற்கு நீர் அவசியம் போகவேண்டும். இதோ அவரிடமிருந்து நமக்கு வந்த திருமுகம்." என்று சொல்லி, சித்திர வேலைக்காரன் கொடுத்த கடிதத்தைக் காட்டினன்.

தச்சனும் கடிதத்தை நன்றாய்ப் படித்துப் பார்த்து "இது அஸாத்தியமான காரியம். இதுவரை, நமதரசனுக்கு மூளையுண்டென்றிருந்தோம். இன்றுதான் இவனுடைய மூடத்தனம் வெளியாகியது. இவ்வளவும் சித்திர வேலைக்காரனுடைய சதியாயிருத்தல் வேண்டும். ஆயினும் எல்லாம் வல்ல கடவுள் நமக்கு நல்ல யுக்திகளைக் கற்பித்து இந்த ஆபத்தினின்றும் விடுவிப்பார்." என்று தன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு அரசனைப் பார்த்து "ஒரு விண்ணப்பம். மஹாராஜாவின் ஆக்ஞையை நிறைவேற்ற சிறிதும் நான் பின்வாங்குபவனல்ல. தெய்வலோகம் போவதற்கு மாத்திரம் வழி காட்டிக்கொடுத்தால் மற்றைக்காரியங்களைத் திருப்திகரமாய்ச் செய்து முடித்து விடுகிறேன்" என்றான்.

அரசன் இன்னது செய்வதென்று தெரியாமல் சித்திரக்காரனை ஸ்வர்க்கலோகத்திற்கு வழி காட்டும்படி ஆக்ஞாபித்தான். அவனும் "மஹாராஜ்! பெரியராஜாவானவர், தச்சனை, அவனுடைய ஆயுதங்களுடன் ஓரிடத்தில் உட்காரவைத்து அவனைச் சுற்றிலும் விறகுக் கட்டைகளையடுக்கி அவைகளின் மேல் நெய்யை யூற்றி மேளவாத்திய முழக்கத்துடன் அக்கட்டைகளுக்குத் தீயேற்றினால் அப்போதுண்டாகும் வெளிச்சத்தில் தெய்வலோகமார்க்கம் தென்பட மரக்கட்டைகளினின்று கிளம்பும் புகையாம் குதிரையின் மேல் தச்சன் ஏறிக்கொண்டு தமது மாளிகைக்கு நேரே வந்துவிடுவான், என்று சொன்னார். இதை நான் கேட்டபடியே இங்குரைத்தேன்" என்றான்.

அரசனும் பெரிய ராஜாவின் கற்பனைப்படியே நடத்தல் தகுதியென்று தச்சனுக்குக் கட்டளையிட்டான். பின்பு தச்சன் அரசனைப்பார்த்து "மகாராஜாவே! இன்னும் ஒரு விண்ணப்பம். எனக்குச் சிறிது சாவகாசம் கொடுத்தல் வேண்டும். எனக்கு அவசரமான சொந்த அலுவல்கள் சில இருக்கின்றன. அவற்றை நிறைவேற்ற மாத்திரம் அனுமதி கொடுக்கவேண்டும். அவைகள் முடிவுபெற ஒருவாரஞ்செல்லும். வார முடிவில் தெய்வலோகம் போகச் சித்தமாகி வருகிறேன்." என்றான். அரசனுமிசைந்து அநுமதி கொடுத்துவிடத் தச்சன் தன் வீடு சென்று தன் மனைவியிடம் அரண்மனையில் நடந்தவைகளை ஆதியோடந்தமாய்ச் சொன்னான்.

பின்பு பலவித யோசனைகள் செய்து கடைசியாக இந்த ஆபத்தினின்றும் தப்புமிமித்தம், தன் வீட்டிலிருந்து, தன்னை அக்கினிப் பிரவேசம் செய்விக்க நியமித்திருக்கும் இடத்திற்கு ஓர் சுரங்கம் வெட்டித் தனக்குட்கார நியமித்திருக்கும் இடத்தின்கீழ் ஒரு சலவைக் கல்லை வைத்து அதை ஒருவருமறியாமலிருக்க மண்ணால் மூடிவிட்டான். அரசனும், ஏழாநாள் தெய்வலோகத்திற்குத் தச்சனை யனுப்புவதற்காகத் தன் நகரத்தார் ஒவ்வொருவரும் ஒருகட்டு விறகும் ஒரு படி நெய்யும் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்று பறையறைவித்தான். குறித்த தினத்தில் விறகும் நெய்யும் தவறாமல் வந்துசேர்ந்தன. பின்பு அரசன் தச்சனை அவனுடைய ஆயுதங்களுடன் உட்காருவித்து அவனைச்சுற்றி விறகுக் கட்டைகளை யடுக்கி அவைகளின்மேல் நெய்யை யூற்றி அவைகளுக்கு நெருப்பிடுவித்தான். சமஸ்தான வித்வான்களிற் சிலர் மத்தளம் அடித்தனர். சிலர் வீணை வாசித்தனர். குழல் ஊதினர் சிலர். வேறு சிலர் இனியகுரலுடன் கீதம்பாடினர். புகையும் ஜ்வாலையும் உயர்ந்து வீசின. தச்சனும் மெதுவாய்க் கல்லை யகற்றித் தன்னுடைய ஆயுதங்களுடன் சுரங்கத்தின் வழியே வீடு சேர்ந்தான். புகையும் ஜ்வாலையும் ஆகாயமளாவி வீசுகையில் சித்திரவேலைக்காரன் அவைகளைச் சுட்டிக்காட்டி "அதோ பாருங்கள், தச்சன் தேவலோகம் செல்லுகிறதை!" என்று கூவினான். அங்குக்கூடியிருந்தோரெல்லோரும் தச்சன் தேவலோகம் சேர்ந்தானென்றே சொல்லிக்கொண்டு தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

இது நடந்த ஒருமாதம்வரை தச்சன் தன் வீட்டினின்றும் வெளிப்படாமல், தன்மேனி வெளுக்குமாறு தினந்தோறும் பாலில் ஸ்நானஞ்செய்து வந்தான். ஒரு மாதம் முடிந்தவுடன் உயர்ந்த ஆடை யாபரணங்களணிந்துகொண்டு தெய்வலோகத்தினின்று பெரிய ராஜா தன் மகனுக்கு எழுதியதாக ஒரு கடிதத்தையும் எழுதுவித்துக்கொண்டு அரசனிடஞ் சென்றான்.

அரசனும் தச்சனை முறைப்படி யேற்று ஓரிடத்தில் இருக்கச்செய்ய, தச்சனும் தான் கொண்டுவந்த கடிதத்தை நீட்டினான். அது வருமாறு:—

"எனது அருமை மைந்தனுக்குச் சகல நன்மையுமுண்டாகுக. நான் உனது தர்ம பரிபாலனத்திற்கும் பிதிர்வாக்கியத்தைப் பிரீதியுடன் நிறைவேற்றியதற்கும் மிக மகிழ்ந்தேன். உன் நாட்டிலிருந்து வந்த தச்-

சன் நிருமித்த கோயில் வெகு நேர்த்தியா யமைந்திருக்கிறது. அதற்கொப்பான கோயில் இந்நாட்டிலில்லையென்றே சொல்வது தகுதி. அவனது வேலைத்திறமையை இங்குள்ளவரனைவரும் மெச்சினோம். அவனுக்குத் தக்க பரிசுகொடுத்து அவனைக் கனப்படுத்துவது உனது கடமையாகும்.

இனி, கோயிற் சுவர்களின் மேல் சித்திரங்களெழுத வேண்டும். ஆகையால் தச்சனை யனுப்பியவாறே சித்திர வேலைக்காரனை யனுப்பிவைக்கவும்.

அனேக ஆசீர்வாதம்.

இப்படிக்கு

உனது ப்ரிய பிதா."

அரசன் கடிதத்தைப் படித்து மகிழ்ந்து தச்சனை வெகுவாய்க் கௌரவித்துக் கொண்டாடிப் பல பரிசுகளுடனும் அவனிருப்பிட மனுப்பிவைத்தான். பின்பு சித்திர வேலைக்காரனை யழைத்து வரும்படி கட்டளையிட, அவனும், தச்சனுடைய வெண்ணிறம் ஆடையாபரணங்கள், அரசனிடம் அவன் பெற்ற வரிசைகள் முதலியவற்றைக் கண்ணுற்று மயங்கி உண்மையறியாதவனாய், வாஸ்தவத்தில் தச்சன் தேவலோகஞ் சென்று வந்தவன்தானென்று உறுதிகொண்டு, அரண்மனைக்கு வர, அரசனும் தச்சனுக்கு விதித்தபடி இவனுக்கும் தேவலோகஞ்செல்ல ஏழுநாள் தவணை விதித்தான். குறித்த தினத்தில் சித்திர வேலைக்காரனும் தன் தொழிற்கருவிகளுடன் வந்து சேர்ந்தான். முன்பு, தச்சனுக்குச் செய்ததுபோலவே இவனையும் மணையில் வைத்துச் சுற்றிலும் மரக்கட்டைகளை யடுக்கி நெய்வார்த்துத் தீயிட்டனர். தீயும் கொழுந்து விட்டெரியவே சித்திர வேலைக்காரன் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், 'குய்யோ முறையோ' வென்று அலறி யடித்துக்கொண்டு வெளியே ஓடிவந்தான். வந்தும் பயனில்லை. அங்கிருந்தோ ரெல்லாம் ஸங்கீத வித்வான்களிடம் கவனமாயிருந்தபடியால் இவனுடைய கூக்குரலைக் கவனிப்பாரின்றி, வெளியேறிய மறு நிமிஷமே மாண்டான்.

"கெடுவான் கேடு நினைப்பான்" "புத்திமான் பலவான்".

S. R. அனந்தநாராயணய்யர்.

# *சக்திதத்வ போதினி

## PHYSICS PRIMER

## XXII உஷ்ணம்: பரவும் விதம்

## HEAT: ITS TRANSMISSION

உஷ்ணம் இவ்வாறு உண்டாகும் இடத்திலிருந்து சுற்றுமுற்றும் பரவுகிறது என்ற விஷயத்தைப்பற்றி முதலில் ஆராயப்புகுவோம். இது மூன்றுவிதமாகப் பரவிவரும் என்பது வெளியாகும். அவையாவன (1) ஊடுருவிப்பரவல் (இரும்புக்கம்பியை நெருப்பில் சொருகினால் அதன் மறுநுனி சூடாவது இவ்விதத்தால்தான்.) (2) உடன் சென்றுபரவல் (அடுப்பில் வைத்த தண்ணீர் சூடாவது இதனால்தான்.) (3) நேர்கப்பரவல் (ஸூர்யனிடமிருந்து உஷ்ணம் பரவிவருவது இதனால்தான்) ஆகிய இவைகளே. இவைகளின் லக்ஷணங்களை விஸ்தாரமாக ஆராயப்புகுவோம்.

1. ஊடுருவிப் பரவல்.—இம்மாதிரி பரவுவதில் உஷ்ணம் எப்பொழுதும் ஒரு வஸ்துவின் உள்ளூரவே பரவிச் செல்வது. உஷ்ண உத்பத்தியில் இருக்கும் பாகம் அதிகச்சூடாகவும் சொருகப்பட்ட வஸ்துவின் மற்றைய பாகங்கள் தூரமாகப் போகப்போகச் சூட்டில் குறைந்தும் காணப்படும். சொருகும் வஸ்துவை எந்தப் பக்கம் நோக்கிப்பிடித்தாலும் அதன்ஊடுருவி உஷ்ணமானது ஒரேமாதிரியாகப் பரவிப்போகும். ஒவ்வொரு வஸ்துவுக்கும் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவிவிடும் சக்தியில் வித்யாஸம் உண்டு. பொதுவாக உலோகங்கள் உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிடும் சக்தி வாய்ந்தன. பாதரஸம் தவிர மற்றைய த்ரவபதார்த்தங்களும் வாயுபதார்த்தங்களும் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடும் சக்தியில் மிகத் தாழ்ந்தவை. திடபதார்த்தங்களிலும் உலோகங்களைத் தவிர மற்றையவைகளில் சில உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிட, சில இந்தச் சக்தியில் மிகத் தாழ்ந்தவைகளாகவும் காணப்படும்.

உலோகங்களுள்ளேயே ஒன்று மற்றொன்றைவிட உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடும் சக்தியில் மாறு

* இதுவரையில் இயற்கை அற்புதங்கள் என்ற தலைப்பின் கீழ்வந்த விஷயங்களே இவை. இது முதலில் வெவ்வேறான இயற்கை அற்புதங்களை எடுத்துக் காட்டி அவைகளின் காரணங்களை உணருவதற்கு வேண்டிய ப்ரகிருதி தத்வசாஸ்திரத்துள் புகுந்துவிட்டது.

பட்டிருக்கும் என்பதைப் பின்வரும் சோதனையால் காட்டலாம். ஒரு இரும்புக்கம்பியையும் அதே நீளமுள்ள செப்புக்கம்பியையும் ஒரு நுனியில் இணைத்து ஒரேகம்பி போலாக்குவோம். இதை இரண்டு கட்டைகளை வைத்துக் கொஞ்ச உயரத்தில் நிறுத்தி இணைத்திருக்கும் மத்தியபாகத்திற்கு ஸரியாகச் சாராய விளக்கைப் பொருத்தி வைப்போம். இணைத்த



விடத்திலிருந்து ஸமதூரத்தில் இருபுறத்திலும் கம்பிகளின்மேல் ஒவ்வொரு சிறு நிபாக்னித் துண்டை வைத்துவிட்டு, சாராயவிளக்கை ஏற்றிவிடுவோம். கொஞ்ச நாழிகை கழித்ததும் செம்புக் கம்பியிலிருக்கும் நிபாக்கினி ஊடுருவிப் பரவிவரும் உஷ்ணம் தாக்க எரியும். பின்னர் கொஞ்ச நாழிகை கழித்துத் தான் இரும்புக்கம்பியின் மேலிருக்கும் நிபாக்கினி அதனுள் ஊடுருவிப் பரவும் உஷ்ணத்தால் எரியும். இதனால் செம்புள் உஷ்ணம் ஊடுருவிப்பரவுவதுபோல இரும்புள் நன்றாகப்பரவாது என்பது தெரியவரும். வெள்ளியின் வழியாகத்தான் உஷ்ணம் வெகு சீக்கிரமாக ஊடுருவிப்பரவும்.

பொதுவாகத் த்ரவங்களின் வழியாக உஷ்ணம் ஊடுருவிப் பரவாது என்பதைத் தண்ணீர் விஷயத்தில் பரீக்ஷை செய்து காட்டுவோம். ஒரு சோதனைக் குழாயை எடுத்துக்கொண்டு அது நிறையத் தண்ணீரை விட்டுச் சாய்த்துப் பிடிப்போம். தண்ணீர் வெளியே ஒழுகுவது நின்றதும் அதன் மேல்பாகத்தைச் சாராய விளக்கால் சுடவைப்போம். மேல்பாகம் நன்றாகக் கொதிக்கும். அப்பொழுது அடிப்பாகத்தில் பிடித்திருக்கும் நமது கையில் உஷ்ணமே தட்டாது. இதனால் உஷ்ணம் தண்ணீர் வழியாக ஊடுருவிப்பரவுவதில்லை என்பதாயிற்று. இம்மாதிரியேதான் மரத்தின் விஷயத்திலும். ஒரு தணலை அதன் மறுபக்கம் எரியாதிருக்குங்கால் அங்குப் பிடித்துக்கொண்டெடுப்பதே இதற்கு உதாரணம். இம்மாதிரி இருக்கும் இரும்புத் துண்டைக் கையால் தொட முடியுமா!

இங்கு உஷ்ணத்தை நன்றாக ஊடுருவிப் பரவவிடும் ஸாதாரண வஸ்துக்களுக்கும் அவ்வாறு பரவ விடாத வஸ்துக்களுக்கும் ஓர் அட்டவணை கொடுத்து அவைகளின் விஷயமாகச் சில குறிப்புக்களைப் பின்னர் எழுதுவோம்.

| நன்றாக ஊடுருவிப் பரவ விடும் வஸ்துக்கள். | ஊடுருவிப் பரவ விடாத வஸ்துக்கள். |
|---|---|
| 1. உலோகங்கள் (வெள்ளி முதலியன) | 1. த்ரவங்கள் (ஜலம்) |
| 2. பாதரஸம் | 2. வாயு பதார்த்தங்கள் (ஸாதாரண வாயு) |
| 3. நிலம் | 3. மரம் ; மரப்பொடி |
| 4. கருங்கல் | 4. கம்பளி அல்லது மயிர் |
| | 5. கண்ணாடி |
| | 6. வெள்ளைத்துணி |

குறிப்பு (1) பாதரஸம்.—இதற்கு இந்தச் சக்தி இருப்பதால்தான் இது உஷ்ண அளவையில் நன்றாக உஷ்ண ஏற்றத்தாழ்வைக் காட்டும் திறனுடையதாக இருக்கிறது.

குறிப்பு (2) வாயு.—இதனுள் உஷ்ணம் ஊடுருவிப் பரவுவதில்லை. இந்தக்காரணம் பற்றித்தான் அதிக உன்னதமாக இருக்கும் ஊர் தாழ்ந்திருக்கும் ஊரைவிடக் குளிர்ச்சியாக இருக்கிறது. மேலே இருக்கும் வாயுவைவிட கீழே இருக்கும் வாயு அடர்த்தியில் அதிகப்பட்டிருக்கிறது. ஆதலால் இரண்டு ஊர்களிலும் ஸூர்யனிட மிருந்து பூமி பெரும் உஷ்ணம் ஒரேமாதிரியாக விருந்தும் மேலே உள்ள ஊரிலிருக்கும் உஷ்ணம் கீழே உள்ள உஷ்ணத்தைவிட சீக்கிரம் வெளியே வாயுவின் வழியாகச் சிதறிப்போய் விடுகிறது. இதனால் மேலே உள்ள ஊர் தாழ்ந்த ஊரைவிட அதிக குளிர்ந்ததாகவிருக்கிறது.

குறிப்பு (3) மரம் : மரப்பொடி.—எரிகிற கொள்ளிக்கட்டையை எரியாது நெருங்கியிருக்கும் பாகத்தைப் பிடித்துத் தூக்கமுடியுமாதலால் மரம் உஷ்ணத்தை ஊடுருவிப் பரவவிடாது என்பது வெளியாகும். இருட்டிலிருக்கும் பெட்டியில் சாவி ஒட்டையைக் கண்டுபிடிக்கக்கையால் தடவினால்போதும். சாவி ஒட்டையைச் சுற்றியிருக்கும் உலோகபாகம் சுற்றும் உள்ள மரபாகத்தைவிடக் குளிர்ச்சி உடையதாகவிருக்கும். உலோகம் உஷ்ணத்தைச் சீக்ரம் ஊடுருவிப் பரவ விடுவதால் நமது தேஹ உஷ்ணத்தைச் சீக்கிரம் எடுத்துப்போய்விட மரபாகத்தால் அவ்வாறு செய்ய முடிவதில்லை. ஆதலால் உலோகத்தைத் தொட்ட பாகத்தில் உஷ்ணக்குறைவு அதாவது குளிர்ச்சியும், மரத்தைத் தொட்டபாகத்தில் உஷ்ணம் குறையாமையும் காணப்படும். இதனால் முற்கூறிய உணர்ச்சி ஏற்படும். மரப்பொடியைப் பனிக்கட்டி உருகி நஷ்டமாகாதிருப்பதற்காக அதைச்சுற்றிப்போட்டு மூடிவைக்கிறார்கள். வெளி உஷ்ணத்தை இப்பொடிகள் தம்முள் ஊடுருவிப்பரவி பனிக்கட்டியைச் சென்று தாக்கவிடாது.

குறிப்பு (4) கம்பளி : மயிர்.—கம்பளியும் மரப்

பொடி போன்றதுதான். அதைப் பனிக்கட்டியின் மேல் சுற்றிவைத்து வெளி உஷ்ணத்தை உள்ளே பரவவிடாதபடி காப்பதற்கு உபயோகப்படுத்தலாம். இதே கம்பளியை நமது தேஹத்தின்மேல் போர்த்துக்கொண்டு நமது உஷ்ணம் வெளியே சிதறிப்போய் குளிர் நமக்கு உண்டாகாமல் காக்கலாம். பொதுவாக உஷ்ணத்தை ஊடுருவிப்பரவவிடாதவஸ்துக்கள் வெளியிலிருந்த உஷ்ணத்தை உட்புறமும், மாறாகவும் பாயவிடா. கம்பளிகள் ப்ராணிகள் மயிரால் ஆக்கப்படும் வஸ்துவாகையால் மயிருக்கும் இந்தக்குணம் உண்டு. இதனால்தான் ஜந்துக்களுக்கு மயிரையும் அடர்ந்த ரோமத்தையும் கடவுள் போர்வையாக அமைத்திருக்கிறார். இவ்வாறு அமையாவிடில் ப்ராணிகள் குளிர் தாங்க முடியாது இறக்கவேண்டியதுதான். ஒரு கம்பளிச் சொக்காய் ஓரங்குலம் கனமாகப் போட்டுக்கொள்ளுவதைவிட இரண்டு கம்பளிச் சொக்காய் அரை அரை அங்குலத்தில் போட்டுக்கொள்வது மேல். இரண்டாவது சொக்காய்கள் விஷயத்தில் ஒரு அங்குலம் கம்பளியும், அவைகள் இடையே உள்ள ஸாதாரண வாயுவும் உள் உஷ்ணம் வெளியே சிதறாதபடி தடுக்கின்றமையால் அது மேன்மையானது என்று கூறினோம்.

குறிப்பு 5: கண்ணாடி:—கண்ணாடியில் உஷ்ணம் ஊடுருவிப் பரவாததால் அதனாலாகிய புகைப்போக்கி முதலியவற்றில் சூடாயிருக்குங்கால் தண்ணீர் விழுந்தாலாவது அல்லது பனிக்கட்டி ஸம்பந்தப்பட்டாலாவது அவை வெடித்துப்போகின்றன. தண்ணீர் சூடான கண்ணாடியில் பட்டால் பட்டவிடம் அளவில் திடீரென்று சுருங்குகிறது. குளிர்ச்சி ஊடுருவிப் பரவாததால் மற்றைப் பாகங்கள் உஷ்ணத்தின் சக்தியால் அளவில் அதிகமாகிக்கொண்டேயிருக்கின்றன. ஆதலால் தண்ணீர் விழுந்தவிடத்தில் கண்ணாடியில் விரிசல் காணப்படுகிறது. பனிக்கட்டி பட்டால் பட்டவிடம் திடீரென்று சுருங்க மற்றைப்பாகம் உள்ளபடி இருப்பதால் அங்கும் விரிசல் காணப்படுகிறது.

குறிப்பு (6) நிலமும், நீரும்:—நிலம் சீக்கிரம் உஷ்ணத்தை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வெளி விட்டுவிடும். நீரோ அப்படிச் சீக்கிரம் உஷ்ணத்தை ஏற்று விடுவதில்லை. இதனால்தான் கடற்காற்றும் நிலக்காற்றும் உண்டாகின்றது என்பது காற்றின்கள் என்னும் வியாஸத்தில் (தொகுதி 2 பக்கம் 250 இல்) எடுத்து விஸ்தரித்தாய்விட்டது.

குறிப்பு (7) வெள்ளைத்துணி.— தலைக்கட்டு, கொடைஉறை ஆகிய இவைகளுக்கு வெள்ளைத்துணியையே உபயோகப்படுத்தவேண்டும். இது உஷ்ணத்தை எளிதில் ஏற்று ஊடுருவிப்பரவ விடாது. கருப்புத்துணியும் வஸ்துவும் அவ்வாறல்ல. வெயிலில் அலைந்து நிழலில் வந்ததும் தலைமயிரைத் தொட்டுப் பார்த்தால் அது நன்றாகக் கொதிப்பதே இதற்கு உதாரணம். தேஹத்தின் மற்றையப்பாகங்கள் அவ்வளவு சூடாகவிரா.



## லீலாசுகர் சரித்ரம்

### THE LIFE OF LILASUKA

முன்னொரு காலத்தில் வில்வமங்களன் என்ற ஒரு பணக்காரச் சிறுவன் இருந்தான். அவன் சைவ மார்க்கத்தைச் சேர்ந்து அதற்குரிய சிவதீக்ஷை முதலியவைகளைப் பெற்றிருந்தனன். நல்லகுலத்தில் பிறந்தவன். இப்படி இருந்தும் இளமைமுதல் ஏராளமான செல்வத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்து வந்ததினாலும், எப்பொழுதும் முகஸ்துதி பண்ணுபவரால் சூழப்பட்டிருந்ததினாலும், இவன்குணம் வரவரமழுங்கிக்கொண்டேவர, இவனுக்கு யௌவனவயதில் வேசையர் நேசமும் வந்து சேர்ந்துவிட்டது. கேட்கவேண்டுமோ! நல்ல பணக்காரனுக்கு துஸ்ஸங்கமும், பெண்ணாசையும் வந்துவிட்டால், காற்றும் தீயும் கலந்துவிட்டாற்போல்தானாகும். ஆதலால் வில்வமங்களன் யௌவனகாலமெல்லாம் பரஸ்திரீகமனம், மதுபானம் முதலிய தீயவழிகளில் கழியத் தொடங்கியது.

இப்படி இருக்கையில் இவன் சிந்தாமணி என்ற ஒரு தாஸியைக் காணும்படி நேர்ந்தது. அவள் மிகுந்த அழகு பொருந்தியவளாகவும், யௌவன வயஸுடையவளாகவும், பாட்டு முதலிய ரஸவிஷயங்களில் மிகத் தேர்ச்சி அடைந்தவளாகவும், கூறிய புத்தி முதலிய சிறப்புவாய்ந்தவளாகவும் இருந்தாள். இவளைக் கண்டதும் வில்வமங்களனுக்கு அடங்காக் காதல் உண்டாகிவிட்டது. வெறும் வாயை மென்றவன் அவல் கிடைத்தால் விடுவானா? வில்வமங்களன் சிந்தாமணி பாதங்களில் சரணமாக விழுந்து, அவள் வீட்டிலேயே பழியாகக் கிடந்துவிட்டான். இவன் த்ரவ்யம் எல்லாம் தடையின்றிச் சிந்தாமணிக்கு அர்ப்பிதம் செய்யப்பட்டன. வரவர தன் வீட்டிற்குப் போவதைக்கூட முற்றிலும் இவன் நிறுத்திவிட்டான். இவனுக்கு வயது முதிர்ந்த தாய் தந்தையர் இருவர் இருந்தனர். தாய் ஓயாது அழுது கண் வீங்கி பிள்ளையின் நிலையால் ஏற்பட்ட துக்கம் ஆறாமல் கண்களை இழந்தாள். தகப்பனாரோ தம்பிள்ளையை மீட்க எவ்வளவோ உபாயங்கள் செய்தார். ஒன்றும் பயன்படாமற்போக மனம் சிதைந்து, முடிவில் மரணம் அடைந்தார்.

தகப்பனார் ஈமக்கடன்களைச் செய்துமுடிக்க வில்வமங்களனை அழைக்க அநேகர் முயன்றனர். அவனுக்கோ சிந்தாமணியைத்தவிர வேறு உலகமே இருப்பதாகத் தோற்றாததால், இவர்கள் முயற்சிகள் வீணாயின. அப்பொழுது வேறு ஒருவழியும் இல்லாதது

கண்டு நேரே சிந்தாமணியிடமே சென்று விண்ணப்பம் செய்துகொண்டு முறையிட்டனர். என்ன! தாவியானுல்தான் என்ன! இவ்வளவுபெயர்கள் சேர்ந்து சொல்லும்பொழுது மனம்இளகாமலிருக்குமா! மேலும்அவள் நுட்பபுத்தியுடையவள் அல்லவா? உடனே தன் காதலனைத் தகப்பன் வீடு அனுப்புவதாக வாக்களித்தாள். வில்வமங்களனிடம் வந்து ஸங்கதிகளைச் சொல்லித் தகப்பன் வீடு போகும்படி ஏவினுள். அவன் கேட்கவில்லை. 'இந்தப் பத்தாம் நாள் கடனை முடித்துவிட்டு நாளை இங்கே வந்து விடலாம். இந்தக் கர்மத்தை விட்டுவிடக்கூடாது. போய்வா!' என்று அவள் எவ்வளவோ மன்றாடினுள். காதற்கடலில் மூழ்கிக்கிடந்த அவன் செவியில், தன் காதலியின் அப்ரிய மொழி ஏறவேயில்லை. உடனே அவளுக்குக் கோபம் வர, அவள் அவனை அடித்துத் தன் வீட்டை விட்டுத் துரத்திவிட்டாள்.

பார்த்தான் வில்வமங்களன்! என்ன செய்வான்! வேறுகதியில்லை! தகப்பன் வீடுசென்று அன்று ஈமக் கடன்களை முடித்துவிட்டு வந்தால்தான், தன் காதலி தன்னைச் சேர்த்துக்கொள்ளுவாள் என்று நன்கு அறிந்தான். உடனே ஓடோடியும் தன் வீடுவந்து ஈமக்கடன்களைச் செய்யத் தொடங்கினுன். வாய் மந்திரம் சொன்னபோதிலும், மனம் சிந்தாமணியினிடமே, ஸதா பாய்ந்துகொண்டிருந்தது. எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப் பட்டாலும் முத்தர்மன மிருக்கும் மோனத்தே, என்பதுபோல வில்வமங்களன் மனுேநிலையும் இரண்டுபட் டிருந்தது. இந்தக் கர்மம் எப்பொழுது தொலையும் என்று கர்மத்தில் மனம் செல்ல, அதை வேகமாகவும் நடத்தினுன்; ஒழிந்தால் சிந்தாமணியிடம் போய் ஆநந்திக்கலாமே என்ற எண்ணம் விடாது அவன் மனத்தில் உள்ளூற ஊறிக்கொண்டும் இருந்தது. என்ன வேகமாகக் கார்யங்களை நடத்தியும் மாலைப் பொழுதுவரையில் கார்யங்கள் முடியவில்லை. முடிந்ததும், சட்டிசுட்டது கைவிட்டது என்ற கதையாக, சனி தொலைந்தது என்று வில்வமங்களன் அடங்காக் காதலால் தூண்டப்பட்டு சிந்தாமணி வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அன்று மாலைப்பொழுதிலேயே இருள்வந்து மூடிக்கொண்டது. ஆகாயத்தில் கரிய நீருண்டமேகங்கள்பந்தி பந்தியாய் ஸஞ்சரித்துக் கரிய மலைப்பாம்புகள் ஒன்றை ஒன்று விழுங்குவதுபோல ஒன்றனுள் ஒன்ருகப்பாய்ந்தோடிப்பாந்தன. மின்னல்கள் ஆகாயம் எங்கும்கொஞ்ச நாழிகைக்கு ஒருதரம் பளீர் பளீர் என்று வெட்டிமறைந்தன. அன்று இடித்த இடிக்கோ கணக்கே இல்லை. கூடக் காற்றும் மழையும் சேர்ந்து விட்டது. அப்பு தேஜஸ் வாயு ஆகிய மூன்று பூதங்களும் ஒன்ருகச்சேர்ந்து பேசிக்கொண்டு, பூமியை அழிக்க யத்தனித்துவிட்டனவோ என்று தோற்றியது. இந்த அல்லோலகல்லோலத்தின் இடையில் வில்வமங்களன் பயித்தியம் பிடித்தவன் போலச் சிந்தாமணியை நினைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். அவன் உள்ளே இருந்த காதலும், பிரிவாற்ருமையால் ஏற்பட்ட கொடிய துக்கமும் அவன் உணர்ச்சியை மழுங்கும்படி செய்துவிட்டன. ஒரு விஷயத்தில் ஒருவன் மனம் ஊன்றிப் பாய்ந்துவிட்டால், வேறு எதுவும் அவனுக்குத் தோற்றவே மாட்டாது. ஆதலால், வில்வமங்களனுக்குக் காற்றும் மழையும் கலந்து அடிப்பது தெரியவே இல்லை. வெறி பிடித்தவன்போல ஓடிவந்து ஓர் ஆற்றின் கரை சேர்ந்தான்.

இதற்குள் நன்ருக இருட்டிவிட்டது. அக்கரையில் தான் சிந்தாமணி வீடு. ஆற்றில் பெருவெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதை எப்படிக் கடந்துபோவது என்ற ஏக்கம் வில்வமங்களனுக்கு வந்துவிட்டது. எப்படியாவது போய்த்தான் தீரவேண்டும் என்ற த்ருடசித்தம் அவனைவிட்டு அகலவில்லை. அவன் அதிர்ஷ்டம், எதிரில் ஏதோ தண்ணீரில் மிதந்துபோவதைக் கண்டான். நல்லகாலம் என்று குதித்தான் தண்ணீரில். அதை மிகுந்த ஆவலுடன் பிடித்துக்கொண்டு நீந்தி வெகு சீக்ரத்தில் ஆற்றைக் கடந்தான். அக்கரை சேர்ந்தான். உடனே, சிந்தாமணி வீட்டண்டையும் வந்து விட்டான். இந்தக் கால் வீசிப் பொழியும் கன மழையில் யார்தான் வீட்டைத் திறந்து வைத்துக் கொண்டிருப்பார்கள்? சிந்தாமணிவீடு சாத்தியிருந்தது. சுற்றுமுள்ள சுவர்களோ வெகு உயரமாக இருந்தன! மறுபடியும் வில்வமங்களனுக்கு ஏக்கம் உண்டாகி விட்டது. ஆயினும் அவன் மன உறுதியோ மாறவில்லை 'எப்படியாவது உள்ளேபோய் விடவேண்டும்' என்று ஜபம் பண்ணிக்கொண்டு, சிந்தாமணி வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பிரதக்ஷிணம் செய்தான். இவ்வாறு வரும்பொழுது சுவரிலிருந்து கயிறுஒன்று தொங்கிக்கொண்டிருக்கக்கண்டான். கண்டதும் ஆனந்தக்கூத்தாடி அதைப் பிடித்துக்கொண்டு சுவரில் ஏறி முற்றத்தில் குதித்துச் சிந்தாமணி படுக்கை அறையுள் புகுந்தான். அங்கு அவள் உண்டு வெற்றிலை போட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு 'வந்துவிட்டேன்! நீ சொன்னபடி எல்

லாம் செய்துவிட்டு" என்று கூவிக்கொண்டே அவளை அணுகினான்.

இவன் கிட்டே வருங்காலத்தில் இவன் மேலே இருந்து, ஓர் துர்நாற்றம் வீசியதைக் கண்டு "இந்தக் காற்றுமழையில் எப்படி வந்தாய்? என் உன்னிடம் இந்தத் துர்நாற்றம் உண்டாயிற்று?" என்று கேட்டாள். அப்பொழுதுதான் தன்மேலிருந்த துர்நாற்றம் அவனுக்குத்தெரியவந்தது. அந்த நாற்றத்தை அவனால் கூட ஸஹிக்கமுடியவில்லை. 'என்ன காரணமோ அறியேன். உன்மீது இருந்த காதலினால் ச்ராத்தம் முடிந்ததும் வீட்டைவிட்டுப் புறப்பட்டதுதான் தெரியும். ஆற்றங்கரைவந்து அதைக்கடந்து உன்வீட்டுச் சுவர் ஏறிக் குதித்து இங்குக் கடிதினில் வந்தேன், உன்மேலிருந்த காதலால்' என்றான் வில்வமங்களன். "எப்படி, இந்த உயர்ந்த சுவர் ஏறிக் குதித்தாய்? ஆற்றைக் கடந்தாய்?" என்று மிகுந்த ஆச்சர்யத்துடன் கேட்டாள் சிந்தாமணி. வந்தவழியை ஸாங்கோபாங்கமாய் எடுத்துரைத்தான் வில்வமங்களன். என் வீட்டுச் சுவரில் உனக்கு யார் கயிறுகட்டி யிருந்தார்கள்? அப்படி ஒரு கயிறு இருந்ததாக ஞாபகம் எனக்கு இல்லையே! பார்ப்போம்' என்று புறப்பட்டாள். இதற்குள் மழை சற்று ஓய, வேலைக்காரன் விளக்கெடுத்து முன்னே செல்ல, சிந்தாமணியும் வில்வமங்களனும் வெளியேபோய் வீட்டைச் சுற்றிப்பார்த்தார்கள். அவன் தான் ஏறியவிடத்தைக் காட்டினான். அங்கு ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. அதை உற்றுப்பார்க்கையில் அஃது ஒரு கொடிய க்ருஷ்ண ஸர்ப்பமாக விருந்தது. பதறிவிட்டாள் சிந்தாமணி! என்னகார்யம் செய்தாய். கணம் தப்பினால் மரணம் வந்திருக்குமே! என் இப்படி உயிரை வெறுத்தாய்?' என்று நடுநடுங்கிக் கேட்டாள். ஆறு கடந்து வந்தவழியைப்பார்க்க இவர்கள் ஆற்றங்கரை போனார்கள். அங்கு ஓர் பிணம் ஒதுக்கப்பட்டிருந்தது. அது உருச்சிதைந்து அழுகிக்கிடந்தது. அதன் நாற்றம் வில்வமங்களன் மேல் இருந்தநாற்றம் போலிருந்தது. 'இந்தப்பிணத்தைப் பிடித்துக்கொண்டா வந்தாய்! இப்பொழுது தான் உன் காதலின்பெருமை வெளியாகின்றது. என்னிடத்தில் இவ்வளவு காதலா உனக்கு! பிணம், பாம்பு, காற்றுமழை இவைகள் எல்லாம் உன்காதலின் முன் ஒரு பொருட்டாகத் தோற்றவில்லை. நானோ ஓர் அற்பவேசை! உன் முழு மனக்காதலை என்னால் எப்படித் தாங்கமுடியும்! அதைப் பெற எனக்கு யோக்யதை இல்லையே! இம்மாதிரியான மனப்பற்றுக்குத்தக்க கைம்மாறு என்னால் என்ன செய்யமுடியும்? இந்தக் காதலின் லவலேசத்தை பகவானிடம் வைத்திருந்தால் உனக்கு எவ்வளவு மேன்மை உண்டாயிருக்கும்! உன் முழுமனப்பற்றை வஹித்துத் தக்கபடி உன்னை சிறப்படையும்படி செய்ய அந்த பரம்பொருளுக்கே திறமையுண்டு!' என்று மிகுந்த பரபரப்புடன் மொழிந்தாள்.

இந்த வாக்கு வில்வமங்களன் மனதில் நன்றாகப் பதிந்தது. கொஞ்சநாழிகை அசையாது ஸ்தப்தமாக நின்றான். மனம் மாறியது. 'சிந்தாமணி! நீ சொன்னது முற்றிலும் உண்மை?' என்று மிக உருக்கமாகக் கூறினான். உடனே அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். சிந்தாமணி அவனைத் தடுக்க யத்தனித்தாள். முடியவில்லை. வில்வமங்களன் போயே போய் விட்டான். போனவன் சும்மா போகாமல் ஸோமகிரி என்ற ஞான ஸத்குருவைக்கண்டான். அவர் கிருஷ்ணபக்தியை வில்வமங்களனுக்கு உபதேசித்தார். கிருஷ்ணன் லீலைகளில் அவன் ஈடுபட்டான்; மனம் உருகியது; சிற்றின்ப உணர்ச்சிகள் கழன்றன. இதனால் இவனுக்கு லீலாசுகர் என்ற பெயர் வந்தது.

தமக்கு ஞானம்உண்டாகக் குருவாகஇருந்தவர்களைப் பற்றி லீலாசுகர் பின்வருமாறு எடுத்துப்பாராட்டுகிறார்.

चिन्तामणिर्जयति, सोमगिरिर्गुरुर्मे
शिक्षागुरुश्च भगवान्शिखिपिंछमौलिः।
यत्पादकल्पतरुपल्लवशेखरेषु
लीलास्वयंवररसंलभतेजयश्रीः ॥

சிந்தாமணி ஜயத்தோடு விளங்குகிறார்; எனது குரு ஸோமகிரியும் ஜயத்தோடு விளங்குகிறார்; ஜயலக்ஷ்மி எவரது பதமாம் கல்பகத்தளிர்களின் நுனியில் விளையாட்டாகத்தானேபோய் அமர ஆசைகொள்வாளோ அப்பேர்ப்பட்டவரும், மயில் தோகையைத் தலையில்அணிந்தவருமான சிக்ஷாகுருவாம் ஸ்ரீக்ருஷ்ண பகவானும் ஜயத்தோடுவிளங்குகிறார்(இவர்களுக்குஜே! என்றவாறு,

தாம் முன் சிவதீக்ஷை பெற்றவராய் இருந்தும், தம் மனம் கிருஷ்ணனிடமே ஈடுபட்டு நிற்கின்றது என்பதைப் பின்வருமாறு லீலாசுகர் வெளியிடுகிறார்:—

शैवावयंनखलुतत्रावचारणीयम्
पंचाक्षरीजपपरानितरांतथापि।
चेतोमदीयमतसीकुसुमावभासम्
स्मेराननंस्मरतिगोपवधूकिशोरम् ॥

நாங்கள் சைவர்கள்; அதைக் கேட்கவேண்டியதே இல்லை ; அதிலும் பஞ்சாக்ஷரீயை அதிகமாக ஜபம் செய்கிறவர்கள். ஆகிலும் என் மனம், காசாம்பூவர்ணத்தை உடையவராயும், கோபஸ்திரீகள் குழந்தையாயும் உள்ள மந்தஹாஸமுகம்பொருந்திய க்ருஷ்ணமூர்த்தியை ஸ்மரிக்கிறது.

க்ருஷ்ண லீலைகளில் ஈடுபட்டு இவர் கிருஷ்ண கர்ணாம்ருதம் என்ற ஒரே நூல்தான் செய்திருக்கிறார். இந்த ஒரு நூலும் ஒப்புயர்வற்றது. இதில் சிலவிடங்களில் ஸாதாரணமான பழமொழிகளை பகவத்லீலைகளில் ஸம்பந்தப்படுத்தி அநேக ச்லோகங்கள் எழுதியிருக்கிறார். அவைகளுள் 'பூனை கண்மூடினால் உலகம் அஸ்தமித்துவிடுமோ ? என்னும் பழமொழியைத் தழுவி பகவான் கண்மூடினால் உலகம் அஸ்தமிக்கும் என்னும் கருத்தைக் குறிப்பாகப் பின்வரும் ச்லோகத்தில் வெகு அழகாக லீலாசுகர் காட்டுகிறார்.

मातः ! किं. यदुनाथ? देहिचषकं. किंतेन पातुंपयः
तन्नास्त्यद्यकदास्तिवानिशिनिशाकावान्धकारोदये ।
आमील्याक्षियुगंनिशाप्युपगतादेहीतिमातुर्मुहुः
वक्षोजांशुककर्षणोद्यतकरः कृष्णः सपुष्पातुनः॥

அம்மா ! என்ன யதுநாதா? அந்த பாத்திரத்தைக் கொடு. எதற்காக ? பால் குடிக்க. இப்பொழுது பால் கிடையாது. பின்னே எப்பொழுது கிடைக்கும்! இரவில். அது எப்பொழுது வரும்? இருள் வந்துமூடிக் கொண்டால். கிருஷ்ணன் உடனே தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு, இருள் மூடிவிட்டது பால் கொடு பால் கொடு ! என்று மன்றாடினார். இத்தகைய க்ருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

'ஏனடா தென்னைமரத்தில் ஏறுகிறாய்? புல்லுப்பறிக்க ஏறுகிறேன். அங்கே ஏதடா புல்? அதுதான் இறங்குகிறேன்' என்று தோட்டக்காரனைக்கண்டு தென்னைமரத்திலிருந்து இறங்கும் திருடன் கூறியதாக ஸாதாரண கதை ஒன்று உண்டு. அதைப் பகவான்மேல் ஏற்றிச் சிறுபிள்ளையாக இருக்கையில் அதிக புத்தி சாதுர்யம் காட்டிய பகவானைப் பின்வருமாறு புகழ்ந்துபேசுகிறார்.

कस्त्वं बालबलानुजः किमिहतेमन्मन्दिराशंकया
युक्तंतन्नवनीतपात्रविवरेहस्तं किमर्थंन्यसेः ।
मातः कंचनवत्सकंमृगयितु, मागाविषादंक्षणात्
इत्येवंवरबल्लवीप्रतिवचः कृष्णः सपुष्पातुनः

நீ யார் குழந்தாய் ? பலராமர் தம்பி. உனக்கு இங்கே என்ன வேலை? இது என் வீடென்று எண்ணினேன்.

எதற்காக வெண்ணெய்பாத்ரத்தில் கையிட்டாய்? கோபித்துக்கொள்ளாதே அம்மா ! காணாமல்போன கன்றைத் தேடுகிறேன், என்று இம்மாதிரி தயங்காது கோபிகளுக்கு விடை அளித்த க்ருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

விடர்கள் தமது ஸ்திரீகளைப்பற்றி ஏங்கி 'அவர்கள் ஆபரணமாகவிருக்கமாட்டோமா அவர்கள் கழுத்தைத் தொட்டுக்கொண்டிருக்க'என்றுகூறித் தமதுவிரகதாபத்தைக் காட்டுவது வழக்கம். அம்மாதிரி விசேஷ பக்தியைப் பகவானிடம் செலுத்தி, லீலாசுகர் பகவான் வேணுகான அவஸரத்தைப் பின்வருமாறு எண்ணி ஈடுபடுகிறார்.



अपिजनुषिपरास्मिन् आत्तपुण्योभवेयम्
तटभुवियमुनायाः तादृशोवंशनालः
अनुभवतियएषः श्रीमदाभीरसूनोः
अधरमणिसमीपन्यासधन्यामवस्थाम् ॥

ஆ! யமுனைக்கரையில் ஜன்மாந்தரத்திலாவது அந்த மங்களாகாரமான புல்லாங்குழலாகக் கிடைக்குமா? என்

றைக்கு வருமோ அந்நிலை அந்தப் புல்லாங்குழலின் நிலை! எவ்வளவு சிறந்ததாயும் எல்லோராலும் விரும்பத்தக்கதாயும் இருக்கிறது. பகவானது உதடுகளாகிய மணிகளுக்கு எவ்வளவு அருகாமையில் நிலைபெற்றிருக்கிறது!

பகவான் மண்தின்று விச்வரூபம் காட்டிய லீலையை இவர் பின்வருமாறு எடுத்து விவரிக்கிறார்.



कृष्णेनांबगतेनरंतुमधुनामृद्भक्षितास्वेच्छया
तथ्यंकृष्णकएवमाहमुसलीमिथ्यांबपश्याननम् ।
व्यादेहीतिविदारितेशिशुमुखेदृष्ट्वासमस्तंजगत्
मातायस्यजगामविस्मयपदंपायात् सनः केशवः ॥

'க்ருஷ்ணன் விளையாடிக்கொண்டிருக்கையில் ஏராளமாக மண் தின்றான். அம்மா!' (என்றார் பலராமர்). 'இது உண்மையா?' (என்று கேட்டாள் தாய்) 'இது யார் சொன்னது?' 'முஸலாயுதத்தை உடையவர்.' 'அது முழுப்பொய். என் வாயைப் பார் அம்மா!' என்று க்ருஷ்ணன் திறந்தவாயுள் (மண்ணைக்காண யத்தனித்த) தாய் அண்டங்களை எல்லாம் கண்டு ஆச்சர்யபரவசளாயினள். இப்படிச்செய்த பகவான் நம்மைக் காக்கட்டும்.

பகவான் வேணுகானச்சிறப்பை இவர் பின்வருமாறு எடுத்து விஸ்தரித்து ஆனந்தபரவசராகிறார்.

लोकानुन्मदयन् श्रुतीर्मुखरयन् क्षोणीरुहान्हर्षयन् ,
शैलान्विद्रवयन् मृगान्विवशयन् गोबृन्दमानन्दयन् ।
गोपान्संभ्रमयन् मुनीन्मुकुलयन् सप्तस्वरान् जृंभयन्
आकाराथमुदीरयन् , विजयतेवंशीनिनादः शिशोः ॥

ஆ! அந்தப் பாலகன் ஊதும் வேணுநாதச்சிறப்பை என்னென்று எடுத்துரைப்பேன்! அது உலகங்களை உணர்விழக்கும்படி செய்கின்றது. வேதப்பொருள்

களை விள்ளுகின்றது; அதைக் கேட்டு மரங்கள் ஸந்தோஷிக்கின்றன. மலைகள் உருகுகின்றன, (மான் பசுக்கள் முதலிய) ம்ருகங்கள் ஆனந்தபரவசமாகின்றன; அது முனிகள் மனதைக் குவிக்கின்றது, ஸப்த ஸ்வரங்களையும் பேசுகின்றது, ஓங்காரப்பொருளையும் விளக்குகின்றது.

பகவான்லீலைகள் இவ்வாறிருப்பதால் க்ருஷ்ணனே வேதரஹஸ்யம் என்பதைப பின்வருமாறு வற்புறுத்துகிறார்:

वरमिदमुपदेशमाद्रियध्वम्
निगमवनेषुनितान्तचारखिन्नाः ।
विचिनुतभवनेषुवल्लवीनाम्
उपनिषदर्थमुलूखलेनिबद्धम् ॥

சாஸ்திரங்களாகிற காட்டில் அலைந்து திரிந்து முயற்சி வீணாகித்தவிக்கும் ஜனங்களே! கோபிகைகள் குடிசையில் உரலில் கட்டுப்பட்டிருக்கும் இடத்தில் உபநிஷக் அர்த்தத்தை (கிருஷ்ணனைத்) தேடுங்கள்.

இவ்வாறு சுலோகங்களாலாகிய கிருஷ்ணகர்ணாமிருதத்தைச்செய்து பகவத்லீலைகளில் ஈடுப டு மஹா ஞானிகள் அடையும்படியான ஞான நிஷ்டை நிலையையும் முடிவில் லீலாசுகர் அடைந்தார். அந்த ஸமயத்தில் அவர் மனம் இருந்த நிலைமையைப்பின் வருமாறு தாமே ஆனந்த பரவசமாக எடுத்து உரைக்கிறார்.

सन्ध्यावन्दनभद्रमस्तुभवतेभोः स्नानतुभ्यंनमः
भोदेवाः पितरश्चतर्पणविधौनाहंक्षमः क्षम्यताम्
यत्रक्वापिनिषीद्ययादवकुलोत्तंसस्यकंसद्विषः
स्मारंस्मारमघंहरामितदलंमन्येकिमन्येनमे ॥

ஏ! ஸந்த்யாவந்தனமே! உனக்கு மங்களம் உண்டாகட்டும். ஏ! ஸ்நாநமே உனக்கு வந்தனம். தேவதைகாள்! பிதிர்க்களே! தர்ப்பணம் பண்ணும் முறையில் பழகச்சக்தியில்லை. பொறுத்துக் கொள்ளவேண்டும். எங்கேயாவது உட்கார்ந்து கொண்டு யாதவகுலதிலகராயும், கம்ஸனைக்கொன்றவராயும் உள்ள ஸ்ரீக்ருஷ்ண பகவானை எண்ணி எண்ணி பாபத்தினின்றும் நீங்குவேன். இதுவே போதும், மற்றவையாலாக வேண்டியதென்ன?

இத்தகைய மஹான் முடிவில் ப்ரம்மஸாக்ஷாத்காரம் பெற்றார் என்று கூறவும் வேண்டுமோ? ஓம் தத்ஸத்.

# தென்னைமர வண்டுகள்

## COCOANUT BEETLES

இரண்டுதினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினிசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகிறது. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில் செள்ளுவென்றும் சொல்லப்படுகின்றன. அது தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு பெரிய வண்டு. இது குருத்து ஓலைகளையும் மாத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னைமரங்களை இவ்வண்டுகள் துளைத்து ஜாஸ்தி நாசமாக்குவதைப்போல் முற்றின மாங்களை கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து புழுக்களைப்போல் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரிதாகிறது. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல்சொன்ன வண்டாய் உருமாறுகிறது.

மற்றோர்ஜாதி வண்டு தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன்சொன்ன கருப்பு வண்டைவிட சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய் தென்னம் வண்டாலாவது, அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள்வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் புழுக்கள் உச்சி மாத்தைத் துளைத்து செடிகளைக் கொன்றுவிடும் மற்றோர் ஜாதிப் புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகிறது.

### இவைகளின் கேடுதிகளை மாற்றக்கூடிய பிரயத்தனங்கள்.

தென்னம் வண்டு, தான் ஜாஸ்தி கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னம்வண்டை அனேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல் வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசிகொண்டு எடுத்துவிடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால் தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல் சொன்ன தாரைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும்: இவ்வண்டுகள் முட்டை வைத்தபின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்கமுடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம்வண்டை துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும்பிழைக்கமாட்டாது. ஆகையால் அவைகளைத்தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறி புதுமரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீரியுடைத்து காயப்போடவேண்டும். அப்படிக்கில்லாமல் அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம்வண்டு பல்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எவ்விதமான வஸ்துவும் அழுகிக்குவிய இடங்கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல்தரையிலிருந்து சில அடிகளுக்குமேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம் தப்பானது. மேல்சொன்ன பிரகாரம் மரங்களைத் துளைப்பது அதிகஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படிச் செய்யவேகூடாது.

மேல்சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்று பொருத்ததாயிருக்கிறது. தென்னம்வண்டு நன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளையுண்டாக்கி செவ்வண்டு அதில் வந்து சேர இடத்தை யுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னம் வண்டுகள் பல்கிப் பெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேல்சொன்ன முன் ஜாக்கிரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னம் தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குப் பின் ஒன்றாய் நாசமாவதைத் தடுக்கமுடியாது.

ஸி. ஏ. பார்பர்,
சர்க்கார் தாவர சாஸ்திரி.

# பங்காளிக் காய்ச்சல்

## BROTHERLY JEALOUSY

ஒரு காலத்தில் விஜயநகரம் ராயர் சைநியத்தில் சேர்ந்த ஒரு கவரை வடுகருக்கு நல்ல அதிர்ஷ்டகாலம் பிறந்தது. அதிசூரனாகவும், மலையான ஆபத்துக்கள் வந்தாலும் மனங்கலங்காத தீரனாகவும், ராஜகாரியத்தில் கண்ணும் கருத்துமுள்ள தெள்ளறிவாளியாகவும் இருந்தபடியால், நாளுக்கு நாள் பதவி உயர்ந்து கொண்டே வந்தது ; இப்படிஇருக்கையில் தெற்கே ஒரு சிற்றரசுநாட்டின் குறுநிலமன்னன் போரில் உயிர்துறக்கவே, அந்தப்பாளையப்பட்டுப் பிரதேசத்தை ஒழுங்கு படுத்தி அடக்கி ஆள ஒரு தகுந்த தலைவன் வேண்டியிருந்தது. ராயரோ தன் கவரை சேனாதிபனே அதற்கு ஏற்றவன் என்று நிச்சயித்து, தகுந்த சேனா சமூகங்களுடனே அந்தத் தலைவனை சிற்றரசு நாட்டைக் காக்க அனுப்பினார். அச்சிற்றரசுநாட்டின் தலைநகரில் கவரையார்கள் நூற்றுக்கணக்காக இதற்கு வெகு காலத்திற்கு முந்தியே குடியேறிப் பிழைத்து வந்தார்கள் ; அவர்கள் கவரை சேனாபதிக்கு ஒருவாறு தூரபந்துக்கள் அல்லது சுவஜாதிகள் என்று சொல்லும்படியாக இருந்தது ; தங்கள் இனத்தான் ஒருவன் தங்கள் நகருக்குத் தலைவன் ஆய்விட்டானென்றும், ஆனைமேலே அம்பாரிவைத்து ஊர்கோலமாக நகரின் வழியே செல்லப்போகிறான் என்றும் தெரிந்து கொண்டார்கள் ; இப்படித் தங்கள் ஜாதியானொருவன் அதிகாரத்திற்கு வந்ததை தங்கள் பாக்கியந்தான் என்று ஆநந்தங்கொண்டார்களோ ? இல்லை.

"நம்மைப்போல ஒரு கவரையான் ஆனைமேலேறி ஊர்கோலம் வரும்போது நாம் தரையிலேநின்று வேடிக்கைப்பார்க்கிறது? நாம் அவனைவிட எவ்விதத்தில் தாழ்த்தி?" என்ற அசட்டுக்கருத்து அந்தக் கவரையார் மனதில் குடிகொண்டது. அவர்களுக்குள் ஒரு பிரகஸ்பதி ஒரு யுக்தி சொன்னான். அது என்ன "காலயுக்தியோ" மேலே பார்ப்பீர்கள்: ராஜவீதியில் வீடுள்ள கவரையார்களெல்லாம் கூரைவீடுள்ளவர்கள் தான் ; கூரைகள் மீதில் வலைக்காரர் கம்பளிகளை விரித்துவிட்டார்கள் ; ஏணிவைத்து உயரஏறி கூரை மேடுகளில் இருகால்களையும் விரித்து நீட்டி உட்கார்ந்து கவரைத் தலைவன் ஊர்கோலத்தை மெத்த விருப்பாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். கோபுரங்களில் குரங்குகள் உட்காருவது போன்ற இந்தக் காட்சியைப் பார்த்து ஊரார் நகைத்தார்கள். தலைவன் ஊர்கோலம் வருகையில் ஜனங்கள் பார்த்ததிசையைத் தானும் பார்த்து, ஒன்றும் மனதுக்கு விளங்காமல் தன் மந்திரியாகிய சான்றோர் முதலியார் முகத்தைப் பார்த்தான் : முதலியார், தலைவன் காதோடே "பங்காளிக் காய்ச்சல் ; வறட்டுக்கருவம் ; இதற்கு அப்புறம் மருந்து செய்வோம்" என்று சொன்னார். உடனே நுட்பமறிந்த

தலைவன் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு கூரையிலுள்ள கவரை மகாஜனங்களை கவனிக்காதவர் போல நெடுகச்சென்றார். ஊர்கோல வைபவங்களெல்லாம் நன்றாய் நடந்தேறி அரண்மனையில் பிரவேசித்து அதிகாரத்தைக் கைக்கொண்டபிறகு முதலியாரை நோக்கித் தலைவன் சொன்னான்.

“ஐயா? என் சுய ஜாதியாரின் பேதமைக்கு என்ன செய்வேன்? என்புத்தியும் என் ஜாதியாரின்புத்தி போலிருக்கும் என்று நகரத்தார் என்னைப்பற்றித் தாழ்வான எண்ணங்கொண்டு விடுவார்களே, என் இனத்தவருக்கு எப்படி நல்ல அறிவு பிறப்பிக்கிறது?” என்றான். முதலியார் கவரையாரிடத்திற்கு தகுந்த உத்தியோகஸ்தர்களை அனுப்பி பின்வருமாறு செய்திசொல்லச்சொன்னார். “தலைவன் உங்கள் புத்தித் திறத்தை மெச்சி, ஒவ்வொரு கவரையார் வீட்டாருக்கும் ஒரு யானை தரச்சொன்னார்” என்பதே. இதுவும் நமது கௌரவத்திற்கு ஏற்கும்” என்று எண்ணிக்கொண்டு கவரையார் அப்படியே ஆகட்டும்” என்றார்கள். உடனே யானைப்படையைச்சேர்ந்த ஒவ்வொரு யானையாகக்கொண்டு போய், ஒவ்வொருகவரை இல்லத்திலும் மாவுத்தர் கட்டி விட்டார்கள். சிலதினங்களுக்கு அந்தப் பிராணிகளுக்குத் தினிபோட்டுப்பார்த்தார்கள். “யானையைக் கட்டித்தீனிபோட யாரால் இருக்கிறது”என்கிற பழமொழியின் உண்மையை சீக்கிரத்தில் தெரிந்துகொண்டார்கள். கவரையார் காலாகாலத்தில் தீனிபோடத் தவறியதால், யானைகள் கூரைகளைப் பிரித்துவிட்டன. சில யானைகள் குடிசைகளுக்குள் தும்பிக்கைகளை நீட்டி அரிசிப் பானைகளை வெளியே எடுத்து உருட்டித் தின்றுத் தீர்த்துலூட்டிசெய்து விட்டன. கவரை மகாஜனங்கள் வீட்டில் சந்திராள் சூரியாள் வாசம் செய்தார்கள். இன்னது செய்கிறது என்று அறியாமல் ஏழைக் கவரைமார் முதலியாரிடம் ஒடிக் காலில் விழுந்து” நாயினா? நாங்கள் மதிமோசம் போனோம்; எங்களுக்கு வீறாப்புத் தணிந்தது, எங்கள் கூரைகள் போயின; யானைகட்டி வாழ்ந்த பெருமை போதும். யானைகளை ஓட்டிப்போய் விடும்படி உத்திரவாக வேண்டும்”என்று கெஞ்சினார்கள். அங்ஙனமே மாவுத்தர் கஜங்களை கவரையார் வீடுகளினின்று ஓட்டிப்போகும்படி செய்துவிட்டு, கவரையார்களுக்கு இதமான புத்திமதிகளைச் சொல்லி சரிப்படுத்தி ஓட்டுவில்லை போட்ட செங்கற் கட்டடங்களை அவர்களுக்கு கட்டிக்கொடுத்து அவரவர்கள் சாமார்த்யங்களுக்குத் தகுந்தபடி ராஜரீகத்திலோ அல்லது வேறு வழியிலோ வேலை கொடுத்து உதவி செய்தார். அதற்குப்பிறகு கவரையார் வறட்டுக் கருவத்தையும் சங்கடக் கைவீச்சையும் விட்டொழித்தார்கள்; ராஜவிச்வாசத்துடன் உபயோகமான முயற்சிகளைச் செய்துவாழ்ந்துவந்தார்கள். பொறாமையை ஒழித்தால் சகல பாக்கியங்களும் கிடைக்கும்.

சேத்தாளி.

## நாகாநந்தம்

## NAGANANDAM: A CLASSICAL DRAMA

### ப்ரஸ்தாவனை.

அருளுரு வென்ப வெங்கட்
கனங்கன்செய் யவதிக் கெல்லா
மருளொடு ஞானம் போர்த்த
மாயையை கொடியை நின்கண்
ணுருமலர் மலர்த்திக் காணு
துறங்குவை யெனவக் காம
புரையினர் புகட்ட நீங்கா
நிலையினப் புத்தன் காக்க!

வின்னிலைத் திருந்தம் மாரன்
வீறுசா லவற்சூழ் வீரர்
மன்னிடு கண்சு ழற்று
மங்கையர் வித்தர் வான
மன்னவ னெவருங் காண
மாபெரு மியோகத் தான்றி
தன்னிலை தயங்க லாத
தனிமுதற் றாள்கள் காக்க!!

(நாந்தி முடிவில்)

ஸூத்ரதாரன்.—போதும்! நிறுத்து! இந்த இந்த்ரோத்ஸவகாலத்தில், ராஜாதிராஜன், வீரன், ஸ்ரீஹர்ஷராஜனது பத்மம் போன்ற பாதங்களை வணங்கும் அரசகூட்டத்தாரால் இன்று அழைக்கப்பட்டதாக எனக்கு இப்பொழுதுதான் தெரிந்தது! பல நாட்டரசரும், முடிமன்னர்களும், இங்கு இந்த ஸபையில் கூடி இருக்கிறார்கள். வித்யாதர நாட்டுத் தலைவனைப்பற்றி வ்யவஹரிக்கும் நாடகம் ஒன்று நமது அரசன் செய்ததாகக் கேள்விப்படுகிறோம். அது நவரஸாலங்கார மயமாகி விளங்குகிறது. உயர்ந்த பாவங்கள் நிறைந்தது. தனக்கொத்த வழியையும் சிறந்த நடையும் உடையது. மனதைக் கவரும் விதம் எழுதப்பெற்றது. நமது அரசன் ஸ்ரீ ஹர்ஷதேவரால் இயற்றப்பட்டது. ஆனால் இதுவரையும் ஆடப்படவில்லை. யாராவது அதை ஆடிப் பார்த்ததாகவும் தெரியவில்லை. ஜனங்களின் ஹ்ருதயத்தை ஸந்தோஷிக்கச் செய்யும், நமது மன்னனிடம் இருக்கும் விச்வாஸத்திற்காவது, அல்லது எங்களிடமிருக்கும் மரியாதைக்காவது, அந்நாடகத்தை நீங்கள் ஆடிக் காட்டவேண்டியது. ஆகையால் யான் அதற்குத்

தகுந்த ஏற்பாடுகள் செய்வேன். இவ்வரச ஸபை விரும்பியபடி நடப்பேன். (முன்வந்து உற்றுநோக்கி) யான் நிஸ்சயமாக எல்லோர் மனதையும் கவர்ந்து விட்டேன். ஸ்ரீஹர்ஷரும் கவிச்ரேஷ்டர்; ஸபையோரும் அறிந்து அநுபவிக்கும் தன்மை உடையவர்; மேன்மையை உணர்ந்து பாராட்டத்தகுந்தவர்; ஸித்தராஜனது சரித்திரம் உலகப்ரஸித்தம்; நாமும் ஆடுவதில் பெயர் பெற்றவர். இதில் ஒவ்வொன்றும், நாம் விரும்பியதை அடையச் செய்யும். இவ்விராஜ ஸபையும் கூடினல் என்பாக்யப் பெருக்கிற்கு என்ன குறைவு! நான் சென்று என் காதலியைக் கூவி இனிய கானம் ஆரம்பிப்பேன் (நேபத்யந்தநந்து சென்று பார்த்துக்கொண்டு) இதுவே எமது வீடு. உள்ளேபோவேன் — (போய்க்கொண்டு) ஆர்யே! இங்குவா?

(நடி வருதல்)

நடி.—(அழுதுகொண்டு) தலைவ! இங்கு நான் ஸங்கடத்திற் பட்டிருக்கிறேன். ஆனலும் என் நாதன் ஏவிய வேலையைச்செய்யத் தயாராய் இருக்கிறேன்.

ஸூ—(நடியை நோக்கி) நடி! நாம் நாகாநந்தத்தை ஆடிக்காட்டவேண்டி இருக்க, நீ அழக் காரணமென்ன?

நடி.—ஐய! நான் அழாது எப்படி இருக்கமுடியும்? என் அருமை மாமனர், மாமியாருடன் தவஞ்செய்ய வனத்திற்கு இப்பொழுதுதான் சென்றார். நீங்கள் தகுந்த வயதை அடைந்தீர் என்றும், ஸம்ஸாரபந்தத்தைத் தாங்கத்தகுந்தவர் என்றும், தாங்களும் எத்தனை நாள் வீண் உலகவாழ்க்கையில் உழைப்பது என்றும், வயது முதிர்ந்தது என்றும் நினைந்து தீரயோசித்து தவஞ்செய்ய வனஞ்சென்றார். யான் அழாது—கண்ணில் நீர்விடாமல்—இருக்கமுடியுமா?

ஸூ.—(மதிமயங்கி) என்ன! என்னைத்தனியே விட்டுவிட்டு என் தந்தை தாயர் தவவனம் சென்றார்கள்? யான் இப்பொழுதென்ன செய்வது? (யோசித்து) என் தாய் தந்தையரது சரணாரவிந்தங்களில் பூவிட்டு அர்ச்சித்து அவர்க்குரியதைச் செய்து ஆநந்தமடைவதைவிட்டு, வீட்டில் எவ்வாறு இருப்பேன்? பித்ரார்ஜித ஸம்பத்துக்கள் யாவற்றையும் துறந்து, இந்த ஜீமூதவாஹனன் செய்ததுபோல் யானும் காடுசென்று என் பெற்றோர்க்கு சிச்ருஷை செய்வேன். (யாவரும் போதல்.)

ப்ரஸ்தாவனை முற்றிற்று.

5

காட்சி—1

களம்—1—மலயபர்வதம். ஸித்தராஜ தபோவனத்தில் கௌரி ஆலயம்.

(நாயகனும், விதூஷகனும் வருதல்)

நாயகன்—(வெறுப்போடு) நேசா! ஆத்ரேய! இளமையே காமத்தின் இருப்பிடம் என்று யான் அறிவேன். அது நற்பாவங்களை கெடுக்குந்தன்மையது என்று அறியாதவனல்ல. எது செய்யத்தகுந்தது, எது செய்யத்தகாதது என்று அறியவொட்டாது செய்வது அதுதான் என்று அறியாதவன் உலகத்தில் யார் இருக்கிறார்கள்? இந்த்ரியங்களின் வழிப்பட்ட இளமை இகழ்ச்சிக்குரிய தானலும், தாய் தந்தையர்க்கு சிச்ருஷைசெய்ய அவ்விளமை இருப்பது எவ்வளவு பாராட்டத் தக்கது.

விதூஷகன்.—(கோபத்தோடு) அன்ப! சற்று கவனி! இவ்வுயிர்ப் பிணங்களாகிய இவ்விருவர்களுக்காக இக்கொடியகாட்டில் எப்பொழுதும் அலைந்து வனவாஸகஷ்டத்திற்கு உட்பட்டிருப்பதை நீ இன்னமும் வெறுக்கவில்லையா? இப்பொழும் காட்டைவிட்டு ராஜ்ய ஸுகத்தை அநுபவிக்க, இக்காட்டையும், உன் பெற்றோர்களையும், அவர்களுடன் கஷ்டத்தையும் [illegible]லைத்து விட்டுவர ஸந்தோஷப்படும்.

நாயகன்.—நீ பேசுவது அழகன்று! தன் தந்தையிடம்சிற்பதைக் காட்டிலும் அரசு வீற்றுஇருத்தல் அழகாகுமா? பெற்றோரது பாதாரவிந்தங்களை ஸேவிப்பதைப்போன்ற ஸுகம் ராஜஸபை நடுவில் கிடைக்குமா? தந்தை உண்ட சேஷத்தை உண்பதைப்போன்ற ஸுகாநுபவம் மூன்று உலகங்களை ஆண்டாலும் கிடைக்குமா? தந்தையைவிட்டுத் தனி அரசுகொள்வது மிக்க துன்பமன்றோ? அதிலென்ன குணமுண்டு?

விதூஷகன்.— (தனக்குள்) ஆஹா! பெற்றோர் ஸேவையில் என்ன பக்தி! என்ன ஆநந்தம்! (யோசித்து) ஸரி. இதையும் சொல்லுவேன். (உரக்க) நான் ராஜ்யஸுகங்களைப் பற்றி மாத்ரம் சொல்லவில்லை. யோசிக்கவேண்டிய விஷயங்கள்வேறு சிலவும் உண்டு.

நாயகன்.-(சிந்துக்கொண்டு)நான் செய்யவேண்டியவைகளை செய்யவில்லையா? சற்றுகேள். ப்ரஜைகளை நல்லவழியில் நடக்கச்செய்து இருக்கிறேன். உறவினர் ஸமமாகப் பாராட்டப் படுகின்றனர். பூமி முழுதும் ரக்ஷிக்கப்படுகிறது. திக்கற்றோர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்கும் கல்பகவ்ருக்ஷமும் இருக்கின்றது. நான் செய்யவேண்டியது இன்னமும் என்ன உன் மனத்தில் இருப்பதாகப்படுகிறது, சொல்வாய்.

விதூஷகன்.—என் அன்புக்குறியாய்! உன் எதிரி அக்கொடிய மாதங்கன் மிகவும் தைர்யசாலி; அவன் நல்ல ஸ்திதியில் இருக்கும் வரை ராஜ்யம் ப்ரதானி இடம் இருந்தாலும், நீ இல்லாது தேசம் க்ஷேமமாக இருக்கும் என்று எனக்குப் படவில்லை.

நாயகன்.—சீ! முட்டாள்! என் நாட்டை மாதங்கன் கொள்ளை கொள்வான் என்று எண்ணுகிறாயா?

விதூஷகன்.—ஆம்.

நாயகன்.—ஆனால் அதனால் என்ன? என் உடம்போடு யாவும் பிறர்க்கே உரியதல்லவா? அதுவும் என்னிஷ்டத்தால் செய்ததன்று. தகப்பனார் மொழிப்படி செய்தது. இவ்வல்ப வ்யவஹாரங்களால் மனதிற்கு நாம் என் கவலை உண்டாக்கவேண்டும்? 'தந்தைசொல் மிக்கமந்திர மில்லை.' மூத்தோர் மொழியை ஒட்டி நடப்பது தான் நமதுகடைமை. அவர் மொழிக்கெதிர் இல்லை. என் தகப்பனார் "குழந்தை ஜீமூதவாஹனா! இவ்விடம் பலநாள் வாஸத்தால் கந்தமூலாதிகள், காட்டரிசி, சமித்து, தர்பம், புஷ்பம், கிட்ட இருந்தவை எல்லாம் எடுத்துவிட்ட படியால் வெகுதூரத்திலிருந்து எடுத்து வரவேண்டி யிருக்கிறது. மலையபர்வதம் போய் நாம் வஸிக்க யோக்கியமாகிய ஓர் ஆச்ரமத்தை ஏற்படுத்து" என்று உத்தரவு செய்திருக்கிறார். வா, நாம் இருவரும் மலையபர்வதத்திற்கே போவோம்.

விதூஷகன்.—நீ உத்திரவு செய்தபடியே.

(இருவரும் முன்வர)

விதூஷகன்.—(முன்நோக்கி) நண்ப இந்த இளங்காற்றானது மலைய மலையிலிருந்து வருகின்றது. வாஸனை மிகுந்த அடர்ந்த சந்தனமரக்கூட்டத்திடை உலாவி, அவற்றின் வாஸனையை உண்டு, ஸஞ்சரித்து, தன் ப்ரயாணத்தின் ச்ரமத்தை, கரடுமுரடான பாறைகளின்மீது அடித்து திவலைதிவலையாக கொழித்தெரிக்கும் குளிர்ந்தநீரை அடங்காதவேகத்தோடு படபடத்து நுரைகக்கி, கரையோரங்களை தின்று, எதிர்த்தவைகள் உடையும்படி மோதும் மலையாறுகள் கம்பீரமாகத் தாரை தாரையாக ஜர்ஜரசப்தத்துடன் குளிர்ந்து வெள்ளியுருகி விழுந்தால்போல்விழும் அக்காட்டு ஆறுகள் சேர்க்கையால், பலநாளாகக் காணாது தனது கணவனை முதல்கண்டதும் தன்மனத்துயரம் நீங்கிய காதலியைப்போலநீக்கி, தான் வழிமுழுதும் அரித்துவந்த நீர்த்துளிகளைக் கொழித்து, எங்கும் தெளித்து உன்னுடலும் ஸந்தோஷத்தால் மயிர்க்கூச்சிடச் செய்கிறது!

தலைவன்.—(அஸ்சர்யத்துடன் பார்த்து) அஹா! நாம் மலையமலையை அடைந்து விட்டோம். (சுற்றிப் பார்த்து)

மதஞ்சொரி வேழம் பாய
 மணஞ்சொரிந் தோங்குஞ் சாந்த
சதஞ்சொரிப் பௌவக் கார்த்து
 விடைசொரி தழீஇக் குகைய
இதஞ்சொரிச் சித்தர் காற்றாள்
 இசைஞ்சுறுஅய்ப் பவள வாரப்
பதிஞ்சொரீஇ வரைம னத்துக்
 கிரண்டொறுங் களிப்ப லம்மா!

நண்ப! வா. நாம் மேல் ஏறி வஸ்லயோக்யமான ஓர் ஆச்ரமம் பார்ப்போம்.

விதூஷகன்.—அப்படியே ஆகட்டும் (முன்நின்று) தாங்கள் வாரணும். (இருவரும் மலை ஏறுகிறார்கள்)

நாயகன்.—(வலதுகண் துடித்தாற்போல் பாவித்து, யோசனையுடன்) நண்ப! எனது வலக்கண் துடிக்கின்றது. நான் ஒரு பலனையும் அபேக்ஷித்தவன் அல்லன். ஆனால் முனிவர்கள் கூறுவதும் பொய்க்காது; ஆகையால் இது என்ன குறிப்பிக்கும்?

விதூஷகன்.—ஓஹோ! அன்பா! உனக்கு அது சீக்ரத்தில் ஏதோ நன்மை உண்டாகப் போகிறதாக முன்னதாகக் காட்டுகிறது.

நாயகன்.—ஆமாம். நீசொன்ன விதம்தான்.

விதூஷகன்.—(பார்த்துக்கொண்டு) ஹா! மித்ரா! இது ஓர் தவவனமாகக் காணுகிறது. இலையடர்ந்த மரங்கள் நெருங்கி, ஹோமத்தீயின் வாஸனை மிகுந்த புகைத்திரள் கமழ்ந்து, வாஸனைமிகுந்து இருக்கின்றது. பயமில்லாமல் மான்கூட்டங்கள் ஸ்வாதந்த்ரியமாகத் திரிகின்றது. இது நிச்சயமாகத் தவவனம்தான்.

நாயகன்.—நண்ப! நீ மிகவும் அழகாகத்தான் சொன்னாய். இது வாஸ்தவமாகத் தவவனம்தான். இம்மரங்களின் பட்டைகள் மிருதுவாக வெட்டப்பட்டிருக்கிறது; அது வெட்டினவரது அநுதாபத்தைக் காட்டுகிறது. ஆகாயம்போலத் துல்யமான நீரை உடைய இச்சிறு ஓடைகள் எல்லாம் உடைந்த பழைய கமண்டலங்கள் நிறைந்திருக்கின்றன. இங்குமங்கும் சிறுவர் கட்டிய முஞ்சிகள் விழுந்து கிடக்கின்றன. அவை அவர் கட்டி மழுங்கி எறிந்தவைகளே. நாள்தோறுங் கேட்டிருந்த இக்கிளிகள் ஸாமகானம் செய்கின்றன.

(இருவரும் உள்நுழைதல்)

நாயகன்.—வயது முதிர்ந்த முனி ஜனங்களால் விசாரம் செய்யப்பட்டு ஸந்தேஹத்திற் கிடந்தரும் வேதவாக்கியங்களின் விரிவு நிறைந்தும், படிக்கும் சிறுவர் வேதமந்த்ரங்கள் கூறிக்கொண்டு இளம்பச்சை பசும் ஸமித்துகள் ஒடித்தல் பொருந்தியும், முனிவர் பெண்கள் தமது தளிர்போன்ற கைகளில் வரும் நீரையுண்டுவளர்ந்த இளம்பயிர் நிறைந்த பாத்திகள் நிறைந்தும், சாந்தம் நிறைந்து அழகு மிகுந்து ரமணீயமாக விளங்கும்? அஹா! என்ன தபோவனமிது! இனி இங்கோ.—

முகம னியம்பி முழுவுளத் தினிய
வகையின் வண்டினம் வாவென் றழைப்பவும்,
கனியுடைக் கிளைகள் மனக்கனி வதனொடு
நனிவணங்கிடவும் நவமது பொழியும்
பூமழை பொழிந்து போற்றி செய்யவும்
மாமன மூட்டின மரங்களு மீண்டே.

வாஸ்தவமாக இவ்வனம், தெய்வத்தன்மை யுடையது நாம் வஸிக்க யோச்யமானது. நாமிங்கிருந்து ஸந்தோஷ மடையலாம் என்று எண்ணுகிறேன்.

(இருவரும் ஆச்ரமத்துள் போகிறார்கள்.)

# எச்சரிக்கைத்திரயம்

## THREE WARNINGS

காப்பு

ஞான நனிவளர்க்கு நல்லபொருட் காதையினை
யூனம் பொருந்தா துரைத்தற்கு—வானமுதிற்
றெள்ளு தமிழூட்டித் தேர்ந்துரைக்கச் செய்யுமா
லுள்ளும் புறம்பா மொளி.

வரலாறு

மேனாட்டுக் கல்வியின் மேம்பட்ட தேல்ஸம்மை *
பானாட் டுரையிற் பகர்ந்தனளாற்—றேனாட்டு
மன்ன முறையை யறிந்தென்றன் சிற்றறிவாற்
பன்னினேன் பாரிற் பரிந்து.

அவையடக்கம்

எழுதாத கேள்வியுங் கேள்வியா மேனைப்
பழுதமர்ந்த கேள்வியும் பார—முழுதுணரேன்
மூட மதியின் மொழிந்திட்ட விந்நூலுந்
தேடி யுணர்த்துமென் றீது.

நூல்

பாதல முருவக் கீண்ட பாரைவேர்ப் பாதபங்கள்
பூதல நீங்கு மாசை பொருந்துதல் சிறிது மின்றா
லாதலி னண்டி னேடு மாசையு மோங்கு மென்றே
யோதினர் பெரியோ ரஃதை யுணர்ந்திடார் பலருங்
[கொள்வர்.

வேறு

நரைதிரை மூப்பு நலிதொழிற் பிணியு
நண்ணிகை யற்றபண் பினரா
யிரையெனச் சேனங் கழுகொடு குக்க
வீர்த்திடு நிலையினை யடைய

வரைநொடிப் போதே யுள்ளதா மெனினு
மாசையி னீங்கல தலகென்
றுரைதரு மாற்ற முணர்கலா ருக்கிங்
குரைப்பனோர் புதியநற் கதையே

மலைபடு வளனுங் கடல்படு வளனு
மாபயின் முல்லையின் வளனுந்
தலைசிறந் தெனினுஞ் சாலியுங் கன்னற்
கலசமு மோங்கிய பணையான்

மலிவளங் கெழுமு மாவுறை நாட்டின்
மன்னிய வளநக ரதனி
லொலிகட லோக்க முடைவுற வார்த்தே
யுவகைகொ ளுட்களி னோர்நாள்

உலக மெங்கணு மோங்கிய களிக்கட லமிழ்ந்த
விலகு மென்னய லகத்துவாழ் தாதசே னென்போ
னலகிலாக்கடி யணிமணம் பொருந்திய நாளி
னலகுபோன்றகு லாயுதங் கொண்டதென் றிசை
[யோன்.

வெய்ய தன்கடு முகத்தினில் வெயர்வுமீத் தோன்றப்.
பைய வென்னொடும் வருகெனப் பணித்திடப் பதறி
யைய யாதுகொ லழைத்ததென் றன்புட னறைந்தே
செய்ய னேடுமொண் டிருந்தவோ ருறையுளுட்
[சேர்ந்தான்.

அன்ன மென்னடை யணங்கினை யவ்வயி னகற்றித்
துன்னு வாயெனத் தூயவன் சொற்றன னதுகேட்
டுன்னி னுமொரு வகையினுந் தேர்ச்சியை யோரான்
பின்னி யீர்த்துக்கொண் டேகுமந் நடுவனைப்
[பணிந்தே.

ஐய கேளினு மாருயி ரிளமைநீங் காதாற்
றுய்யநின்மொழி மனங்கொளத் துணிவிலை யன்றிச்
செய்ய நின்னுடன் சேர்வதற் காமுறை முயற்சி (ய்.
பொய்யெ னச்செய லுறுத்துதற் கியலுமோ வுரையா
அன்ன தன்றியா னணிமண மாற்றுதற் கான
பன்னி காந்தளம் பாணியைக் கரங்கொடு பற்றிச்
சொன்ன நான்மறைத் துறைவழி யொழுகிய காலத்
தென்னை நோக்கிநீ யிவ்வகை யியம்புத னெறித்தோ.

என்ற வாதியா வெழில்பெறு மொழிபல வியம்பக்
குன்ற வில்லித னூர்தியா வயங்கிய கூற்று
மன்ற வனெதிர் பேசிலன் வலியிலா வழக்கோ
நின்ற வன்றனை நேர்முக நோக்கியீ தறைவான்.

அன்ப வேகுவ லணிமண மாற்றிய நின்னை
யின்ப மில்லவ னேகினன் கொண்டுவிண் ணென்ற
துன்ப மாவலர் தூற்றநா னுற்றலே னுறய
வின்ப மிவ்வயி னியைந்திட விருத்தியா லன்றே

தெற் கிடங்கொளுந் திணியிரு ளென்னுல கத்தே
கொற்ப நட்டினிற் குறுகியான் கொண்டுபோ முன்ன
மற்ப நின்னையு மடையுமுன் றறிகுறி தாமு
நிற்பவற்றை நீரேடி யிங்கியற்றுதனெறியே.

இத்த கைச்செய வியற்றுதற் கியலுமே னீங்கி
யத்த கைக்குறை யாற்றுவா னழயமு மீவ
னெத்த கைத்தொழி லுண்டெனு மெதிர்மறு தேகச்
சித்த மாதிநீ யென்றுளோர் துரைத்தனன் செல்ல.

வேறு

அறநெறி யொழுகு மரச ணுணைக்கி ழமர்ந்தவெம் மன
முள கொடியோர்
செறிவிலங் கேகச் செம்மைபொன் றிலராய்த் தீக்
கொலை களவொடு பிறவு
அறைதரு செயல்கள் புரிவதற் கெண்ணி யாவன
கருதிடா ரதுபோ
லறநெறிக் கடவுளை றந்தன வறிந்து மடைந்திலன்
வேண்டிய செயற்கே

* Mrs. Thrales

# கல்யாணி

*** KALYANI**

## 1-ம் அதிகாரம்

திருப்புனம் என்ற செழிப்புள்ள ஒரு ஜமீன் மேற்கு மலைச்சாரலிலிருந்தது. அது நீர்வளம் நிலவளம் மலைவளம் பொருந்தியதாய், ஸமபூமியிலிருந்து மலையைக் கடக்கும் வழிகளில் ஒன்றிலிருந்ததால், அயல் தேசத்தவர் படையெடுத்துச் செல்லுங்காலங்களிலும், உள்நாட்டில் குழப்பங்கள் நேரிடும் சமயங்களிலும், அது மிகுந்த முக்கியமான இடமாயிருந்தது. அந்த ஜமீன்தாருக்கு "புனபதி" என்று பெயர். அதில் பரம்பரையாகத் தைர்யமும், வீரமும், கீர்த்தியும் பெற்ற புனபதிகள் வெகுகாலமாக இருந்தார்கள். பலமுறை அனேக அரசர்கள் அதிலுள்ளகோட்டையை வளைந்து ச்ரத்தையோடு முற்றுகை போட்டும், அதிலுள்ளோர் ஊக்கத்தோடு எதிர்த்ததால் தோல்வி அடைந்திருக்கின்றனர். அக்காலங்களில் எல்லாம் அதன் அதிபதிகள் மிகச்சிறந்த வீரச்செயல்கள் செய்திருக்கின்றனர். ஆனால் இகலோகத்திலுள்ள ஸகல பொருள்களுக்கும் போலவே இந்த ஆதிபத்யத்திற்கும் கலக்கங்கள் நேரிட்டு குறைவு உண்டாயிற்று. நாளடைவில் அதன் மஹிமைகுன்றி, கிராமங்கள், பூமிகள் எல்லாம் ஒன்றின் பின் ஒன்றாய் தொலைந்து, கடைசியில் அந்தப்புனபதி புல்காடுசூழ்ந்த ஒரு சிறு ஊரில் அலங்காரமற்ற ஒரு வீட்டிலிருக்க நேர்ந்தது. அதுவே அவனுடைய உடைமையில் மிகுந்ததாயிருந்தது.

அந்த நிலைகுலைந்த வம்சத்தில் இந்தக்கதை நடக்கும்பொழுது இருந்த புனபதி, தன்னுடைய தற்கால நிலைமைக்கு வளைந்துகொடுக்கும் மனமுடையவன் அல்லன். அக்காலத்திலுண்டாகிய குழப்பத்தில் அவன் சேர்ந்து சஹாயஞ்செய்த கட்சி தோற்றுப்போகவே, அரசன் அவன் உடலையும் பொருளையும் கவராவிட்டாலும், அவனை ராஜத்ரோஹியாக்கி அவனுடைய பிரபு பட்டத்தைப் பிடுங்கிக்கொண்டான். அவனைப் "புனபதி"என்று பிறர்சொல்வது வெறும்உபசாரவார்த்தையாக மாத்திரம் இருந்தது.

இந்தத் தண்டனைக்குள்ளாகிய கனவான், தனது பரம்பரையான ஸம்பத்தைப் பெருவிட்டாலும், தனது குலத்தினரின் பெருமையையும், கீழடங்காமையையும் தனது உரிமையாக அடைந்திருந்தான். தன்னுடைய குடும்பம் கடைசியில் நசிக்க முக்கிய காரணமாயிருந்தவன் ஒருத்தன் என்று வைத்து அவனிடத்தில் பூர்ணமான விரோதத்தை காட்டினான். அந்த மனிதனே அப்பொழுது அந்த ஜமீனை விலைக்கு வாங்கி, அதற்கு யஜமானனாகி இருந்தவன். அவன் புனபதிகளைப் போலப் பழங்குடிப்பிறப்பில்லாதவன்; சில வருஷங்களுக்குமுன் உண்டானஇராஜ்ஜியகுழப்பத்தில், செல்வமும் இராஜதந்திரப் பிராதான்யமும் பெற்றவன்; ஒரு வைக்கீல் வேலையில் அப்பியசித்தவன்; அரசாங்கத்தில் பல உயர்தர உத்தியோகங்களில் இருந்தவன்; பற்பல கக்ஷிகளாகப் பிரிந்து, பிரதிநிதிகளால் இராஜாங்கம் நடத்தப்பட்ட கலக்கம் நிறைந்த தனது ஜீவகாலத்தில், சாமர்த்தியமாய் நடந்து தன்னுடைய காரிய சித்திகளைப் பெற்றவன்; ஒன்றும் கிடையாத தேசத்தில் தந்திரமாய் அதிகப்பொருள் தேடி, அதன்யோக்கியதையையும், அதனைச் சேர்க்கும் பல வழிகளையும், தன்னுடைய அதிகாரத்தையும் சொல்சத்தியையும் விருத்திசெய்ய அதை உபயோகிக்கவேண்டிய முறையையும் நன்றாய் அறிந்தவன்.

இவ்வித இயற்கையான நன்மைகளும் செயற்கை அநுகூலங்களுமுடைய இவன், கொடுங்கோபமும் அவிவேகமு முடைய "புனபதி"க்கு ஒரு அபாயமான எதிரியாயிருந்தான். இவர்களுடைய விரோதத்திற்குக் காரணம் பலர் பலவிதம் கூறினர். நியாயமும் சரியுமான வழியில் அந்தப் புதுப்பிரபு, புனபதியின் முன்னோர்களின் உடைமையை அடைந்திருந்த போதிலும், அதைக்கண்டு சகியாத புனபதியின் பழிவாங்கும் குணத்தாலும் பொறாமையாலும் சண்டை உண்டாயிற்று என்று சிலர் சொன்னர். செல்வவான்களின் எதிரில் அவர்களை எவ்வளவு புகழுகிறார்களோ அவ்வளவு பின்னால் இகழும் இயல்புடைய அனேகர், "இந்த ஜமீனை விலைக்கு வாங்குவதற்கு முன்னே இருவருக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் அதிகமிருந்தது; ஒருவன் பதபாகமுடைய வைக்கீல், சமர்த்தன இராஜதந்திரி. மற்றொருவன் படபடப்பும் கோபமுமுடைய அவிவேகி. இவர்களுக்குள் வியாச்சியச் சண்டைகளும், பொருள் சம்பந்தமான சிக்குகளும், உண்டானால் தன்வழக்கைப் பேசி பாத்தியதையை ஸ்தாபிப்பதில் யாருக்கு அநுகூலமிருக்கும் என்பது தெரியாதா" என்று வாய்விட்டுச் சொல்லாமல் ஸூசனையாகக் காட்டினார்கள். அந்தப் புதுப்பிரபு

* An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore.

வின் பெயர் வீரசேனன். அவன் அரசனுடைய மந்திரிகளில் ஒருவன்.

ஜனங்களுக்கு இவ்வித ஸந்தேகம் உண்டாவதற்கு அந்தக் காலமும் ஒத்திருந்தது. ஏனென்றால் அரசன் அந்தத் தேசத்திலில்லை; தூரதேசத்தி லிருந்தான். கீழுத்தியோகஸ்தர் கொடுங்கோல் செலுத்தினால், துன்பமடைந்தவர் தங்களுடைய குறைகளைச் சொல்லி முறையிட்டு, தங்களுக்கு ந்யாயமோ அல்லது கிருபையோ செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறதற்கு, பொது ஜனங்களின் ஸாதாரண நன்மையைக் கருதிச் செய்யக்கூடிய ப்ரதான அதிகாரி அங்கே இல்லை. எவ்வளவு அசமந்தனும், ஸ்வயகாரிய துரந்தனும், மனம்போல் ஸ்வாதீனமாய் அரசுசெலுத்துகிறவனும் ஒரு சக்ரவர்த்தியிருந்தாலும், ஸ்வாதந்த்ரியமுள்ள ஒரு தேசத்தில் அவனுடைய யோகக்ஷேமம் பொது ஜனங்களின் நன்மை தீமைகளோடு இன்றியமையாமல் சேர்ந்திருப்பதனாலும், அவன் வேறுவிதமாக நடந்தால் அவனுடைய அதிகாரத்திற்குக் கெடுதி திட்டமாயும் திடீரென்றும் உண்டாகக்கூடியதனாலும், எல்லாப்பிரஜைகளுக்கும் பக்ஷபாதமில்லாமல் வழக்குத் தீர்க்கவும், ஸத்யமார்க்கத்தால் ராஜ்ஜியத்தை நிலைநிறுத்தவும், ராஜதந்திரங்களும் பொது அபிப்பிராயங்களும் ஏற்படும். இவ்விதமாக இராஜ்யாபகாரிகளாயும் கொடுங்கோல் மன்னராயும் இருந்தவரும்கூட, தங்களுடைய அதிகாரத்திற்கும் ஸ்வபாங்களுக்கும் ஒத்திராவிட்டாலும், தங்களுடைய குடிகளுக்கு நீதி செலுத்துவதில் கண்டிதமாயிருந்திருக்கிறார்கள்.

அப்படிக்கில்லாமல் ராஜப்பிரதிநிதியாகிய பிரபுக்களின் அரசாங்கம் ஆனாலோ, ஒவ்வொருவரும் தான் வேலையிலிருக்கும் காலத்தின் முடிவு எப்பொழுது நேரிடும் என்று அறியானாதலால், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும்' என்ற பழமொழிப்படி, தான் உத்தியோகத்தில் இருக்கும்வரை தனக்கு வேண்டிய பொருள்தேடுவதிலும், சொல் சத்தியை விருத்தி செய்வதிலும், தன் பந்துமித்ரர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுத்து உதவுவதிலும், தனது எதிரிகளுக்குத்தன்னால் எவ்வளவுதுன்பமும், தொந்தரையும் செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்வதிலும், தவறுகிறதில்லை.

விசேஷமாக வழக்குத் தீர்ப்பதில் பக்ஷபாதமே குடிகொண்டிருந்தது. ஆளுக்குத் தகுந்த ந்யாயம் என்பதை ந்யாயாதிபதிகள் கைக்கொண்டார்கள். பிறர் தூஷிக்கத்தக்கதானாலும் அதுவே வழக்கமாயிருந்தது. ஒருதலை முன் துணிபோ, பக்ஷபாதமோ இல்லாமல் முக்யமான ஒருவழக்கம் தீர்க்கப் படுகிறதில்லை. ஒரு சீர்கேடான நடக்கை மற்றநேக நாணயக்குறைவான செய்கைகளுக்கு வழிகாட்டியாயிருந்தது. ஒரு மித்ருவைக் காப்பாற்றவோ, ஒரு சத்ருவை நசுக்கவோ ந்யாயாதிபதியின் பரிசுத்தமான அதிகாரத்தைக் கறைப்படுத்துகிறவர்களும், தங்களுடைய குடும்பத்தினருக்கும், சம்பந்திகளுக்கும், ராஜ்ய கக்ஷிக்காரருக்கும் அனுகூலமாக வழக்குத் தீர்க்கிறவர்களுமாகியவர்கள், தங்கள் ஸ்வயநலத்திற்காக எதுதான் செய்யமாட்டார். ஐச்வரியவான்களின் பணப்பை அவர்களின் எதிரிகளாகிய ஏழைகளின் வழக்குத்தீர்க்கும் தராசுத்தட்டைத் தன் கனத்தால் தரைதட்டச் செய்வதாக ஜனங்கள் நம்பினார்கள். நியாயஸ்தலங்களில் கீழுத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்க அஞ்சுவதில்லை. அரசனுக்காகஏற்படுத்தப்பட்டவைக்கீலுகளும் 'உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்து' எதிர்க்கக்ஷியில் அதிகப் பணம் இனாமாகப்பெற்று அழிவழக்குக்கு அநுகூலமாக நாணமற்று வெளிப்படையாகவே நடந்துவந்தார்கள். ஐயோ! இவர்கள் பள்ளிக்கூடத்தில் ஆதியிலபடித்த "ஓரஞ்சொல்லேல்" என்பதனையும்,

"இருவர்தஞ் சொல்லையும் எழுதாம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே"

என்பதனையும் முழுவதும் மறந்த பாவிகள்; அவற்றிற்கு மாறாகச் செய்யும் மஹாபாவிகள்.

இந்நாட்களில் வியாஜ்யங்களில் பழகி, கைவிஞ்சிக் கொண்டிருக்கிற ஆலோசன ஸபையின் அங்கத்தினனாகிய ஒரு ராஜ தந்த்ரி, தன்னை எதிர்க்கும் திராணியும் செயலும் அற்ற சத்ருவை வெல்ல வழிகள் கண்டுபிடித்து உபயோகியாமலிருக்க மாட்டான் என்று நினைப்பது அதர்மம் அல்ல. வீரசேனனுடைய மனச்சாக்ஷிக்கு இவ்வனுகூலம் பெற ஸம்மதம் இல்லாவிட்டாலும், செல்வமும் கீர்த்தியும் அடைய அவனுக்குள்ள ஆசையை அவன் மனைவியின் வேண்டுகோள்கள் விருத்திசெய்யாமல் இருக்கமாட்டா என்று ஜனங்கள் நம்பினார்கள்.

அவன் குடும்பத்திலும் அதிகக் கீர்த்தியுள்ள வமிசத்தில் பிறந்தவள் அவன் பத்னி. தன் புருஷன் செல்வாக்கு நிலைத்துப்பரவுவதில் அவள் அனந்தவரு

மல் உபயோகித்தாள். அது தன்கணவன்மேல் தன் அதிகாரத்தைச் செலுத்தவும் காரணமாயிருந்தது அவள் அழகும் கம்பீரமான காக்ஷியுமுடையவள். அவளுக்கு வன்மையான மனச்சக்தியும் கொடுங்கோபமும் இயற்கையிலுண்டு. ஆனால் அனுபோகத்தால் முன்னதை உபயோகித்து, பின்னதை அடக்கி மறைக்கக் கற்றிருந்தாள். தன் கணவனுக்குரிய கடமைகளை அதிகச் சிரத்தையோடு செய்வாள். விருந்தினரை முகமலர்ச்சியோடுஉபசரிப்பாள். நடவடிக்கைகளிலும் ஆசாரங்களிலும் அக்காலமுறைகளை இம்மியும் பிசகாமல் அனுசரிப்பாள். ஆனால் இவைகளெல்லாம் வெளிவேஷமே. அதனால் அவளிடத்தில் ஜனங்களுக்கு கவுரவபுத்தி யில்லை. தன்குடும்ப இலாபமே அவளுடைய முழுநோக்கம். அதிருந்தால் உலகம் வெளித்தோற்றத்தால் ஏமாந்து போகிறதில்லை. உயரப் பறக்கும்பொழுதும் தன் இரைமேலேயே கண்ணாயிருக்கும் கழுகுபோல், அவளும் தான் கவுரவத்தோடு செய்யும் ஆசார உபசாரங்களிலும் தன் காரியமே குறியாயிருப்பாள். ஆகையால் அவளுடைய அந்தஸ்திற்குச் ஸமமானவர்கள் அவள் செய்கிற உபசாரங்களை ஸந்தேஹித்து வந்தார்கள். தாழ்ந்தவர் அவளிடத்தில் ஸந்தேஹமும் பயமுமுடையவரா யிருந்தனர். தன் சொல்படி அவர் கேட்க அவளுக்கு அது அனுகூலமாயிருந்தாலும், கவுரவமும் ஸ்நேஹமுமில்லாததால், ப்ரதிகூலமாயிருந்தது.

அவள் புருஷனும், தன் பிரபுத்வத்திற்கு அவளுடைய ஸாமர்த்யமும் சாதுர்யமும் முக்கிய காரணங்களாக இருந்தமையால் அவளைப் பயந்து கவுரவித்து வந்தானே ஒழிய, அவனுக்கு அவளிடத்தில் நம்பிக்கையும் பற்றும் இல்லை. தனக்கு வெளியிலுள்ள பெருமை தன் வீட்டில் அடிமைத்தனத்தாலுண்டாகிய தென்று அவன் சில காலங்களில் நினைத்து வருந்தியதாக உலகவதந்தி யுண்டு. அவள் அவனுடைய கீர்த்தியைத் தன்னுடையதாகப் பாவித்ததனால், “அவன் தன் பெண்சாதிக்கு அடங்கினவன்” என்று பெயருண்டானால் அதுகீர்த்தி பங்கம் என்று நன்றாய் அறிந்திருந்தாள். தான் பேசும்பொழுதெல்லாம் தன் பர்த்தாவின் அபிப்ராயம் பிசகாதென்று வற்புறுத்துவாள். மனோபாவத்தை அனுசரித்துப் ப்ரியத்திற்கு இணங்கி நடப்பாள். ஆனால் இவையெல்லாம் மனப்பூர்வமாயும் உண்மையாயும் அல்ல. தன் உயர் குடிப்பிறப்பையும், ஸ்வயாஸலத்தேட்டத்தில் தனக்குள்ள தீர்ந்த கொள்கைகளையும், ஒன்றிற்கும் சலிக்காத தன் குணங்களையும் நினைத்து அஹங்கரித்துத் தன் புருஷனிடத்தில் மதிப்பற்றிருந்தாள். அவனுக்கும் அவளிடத்தில்பொறுமையும் பயமும் இருந்தனவே அல்லாமல் உண்மையான அன்பும் வியப்புமில்லை. ஆனாலும் இருவருடைய முக்கியமான நோக்கங்கள் ஒத்திருந்தனவாதலால், அவர்களுக்குள் ஒற்றுமையில்லா விட்டாலும், இருவரும் சேர்ந்து காரியங்கள் நடத்தி, ஒருவரை ஒருவர் வெளிக்குக் கண்ணியப்படுத்தி வந்தார்கள். அவர்களுக்கு அனேக குழந்தைகள் பிறந்தாலும் மூன்று தான்பிழைத்திருந்தன. மூத்த குமாரன் தேசயாத்ரை போயிருந்தான். இரண்டாவது குமாரத்திக்கு பதினேழு வயது. மூன்றாம் பையன் அவளுக்கு மூன்று வயதுக்கு இளையவன். அவர்கள் தங்கள் பெற்றோருடன் இருந்தார்கள்.

கடைசிலிருந்த ஜமீன்தார், தங்களுக்குள் முன்னிருந்த இலாவாதேவியில் உண்டான அனேக அமிசங்களைக்குறித்து எதிரியுடன் வழக்குகளிட்டு ஒவ்வொரு தடவையும், எதிரிபொருளுள்ளவன் ஆகையால், அபஜயப்பட்டான். அவன் உயிரோடுதான் வியாச்சியமும் முடிந்தது. வெகுநாளாக நூலிழைந்து கொண்டிருந்த அவன் தேகம் கடைசிவழக்குத் தோற்றதோடு அவனுக்குண்டாகிய கடுங்கோபத்தால் இற்று ஒழிந்தது. அக்காலத்தில் அவனுக்கு உண்டான மரணவேதனைகளைக்கண்டும், அவனிட்ட வன்சாபங்களைக் கேட்டும் கொண்டிருந்த, இருபது வயதுள்ள அவன் புத்திரன் மாதவன், பழிவாங்குகையையே தன்பிராயச்சித்தமாக அடைந்தான். மரித்தவனுக்குச் சாமகிரியை நடக்கும் பொழுதுநேரிட்ட காரியங்களும் இந்த எண்ணத்தைத் திடப்படுத்தின.

அவனுடைய வாழ்நாட்களின் முடிவில் அவனுக்கில்லாதிருந்த ஆடம்பரங்களெல்லாம், இறந்த பிறகு அவனுக்கு உண்டாயின. பிரேதத்தைப்புதைக்க எடுத்துச்செல்லும்பொழுது அவன் குலவிருதுகளும், கொடிகளும், தோரணங்களும் அனேகம் கூடக்கொண்டு போகப்பட்டன. காளங்களும், எக்காளங்களும், பறைகளும், வாத்தியங்களும் முழங்கின. பிரபுக்களும் நாட்டாரும் பாடைக்குப்பின் சென்றனர். அரண்மனைமுதல் கல்லறைவரை எள்ளுவிழ இடமில்லாமல் ஒரே கூட்டமாயிருந்தது. இறந்து போனவன் தனது அந்தியகாலத்தில் விரும்பியபடி அவனுக்குப் பிரேதக்கிரியை துடங்கினவுடன்; அது வழக்கத்திற்கும் சட்டத்திற்கும் விரோதமாயிருந்ததால் பக்கத்திலிருந்த அதிகாரியாகிய வீரசேனன் இடத்தில் உத்திரவு பெற்றுச் சில சேவகருடன் ஒரு குருக்கள் வந்து அதை நிறுத்தச்சொன்னான். அது மாதவனுக்கு அடங்காக் கோபத்தை உண்டாக்கத் தன் கத்தியில் அவன் கைவைத்துத் தடைசெய்யாமலிருக்கச்சொன்னான். அவனைச் சேர்ந்த அனேகரும் தங்கள் கத்திகளை உருவினர். அந்தக்குருக்கள் பயந்து “நீங்கள்

இவ்விதம் ராஜாதிகாரத்தை உல்லங்கனம் செய்த பலனை அனுபவிப்பீர்கள்" என்று முணுமுணுத்துக் கொண்டு சென்றான். பிறகு "மண் மண்ணோடும், சாம்பல் சாம்பலோடும்" என்று குரு சொல்லிக் கடைசிக் கிரியையை முடித்தான். பந்துக்களும் சிநேகிதர்களும் மற்றுமுள்ளவரும் துக்கக்கடலில் ஆழ்ந்திருக்க, மாதவன் ஒன்றும் உரையாடாமல் முகம் வெளுத்துக் கண்ணீர் சிந்தாமல் பிரேதத்தைப் புதைத்தான்.

எல்லாம் முடிந்து புறப்படும் சமயத்தில் மாதவன் அங்கிருந்தவர்களை நோக்கி "கனவான்களே! ச்நேகிதர்களே! இறந்த என் பிதாவுக்கு நீங்கள் செய்த மரியாதை அற்பமல்ல. கேவலமான மனிதனுக்குக்கூட நடக்கிற சடங்குகள் இன்று உங்கள் உதவி இல்லாவிட்டால் உயர்ந்த குலத்தில் ஜனித்த என் பிதாவுக்கு இல்லாமல் போயிருக்கும். துக்கத்தோடும், அழுகையோடும், மௌனமாயும், மரியாதையாயும் மற்றவர்கள் மரித்தவர்களை அடக்கம் செய்கிறார்கள். போக்கிரிகளும் துன்மார்க்கரும் செய்த செய்கைகளால், நமக்குத் துக்கம் ஓடிப்போய், கோபம் பிறந்தது. இதன் உற்பத்தியும் எனக்குத் தெரியும். எனக்கும் என்குடும்பத்திற்கும் உண்டான அழிவுக்கும் அவமானத்திற்கும் தக்க அளவு அவனுக்கும் அவன் குடும்பத்திற்கும் நான் பதில் செய்யாமல் போனால் தெய்வம் என்னைக் கேட்பதாக" என்று சொன்னான்.

அங்கிருந்த அனேகர் அந்த வார்த்தைகளை நியாயமான கோபத்தாலுண்டானவை என்று சிலாகித்தார். ஆழ்ந்து யோசிக்கும் சிலர், அவைகளால் விளையும் மிகுந்த விரோதத்தை எதிர்க்கப் போதுமான செல்வாக்கு அவனுக்கில்லாததால் மனம் நொந்தார்கள்.

துக்கம் கொண்டாடுகிறவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்து, அக்கால வழக்கப்படி, கோலாகலமாய் விருந்து சாப்பிட்டு, மிதமில்லாமல்குடித்து வீரசேனனை வைது, சபித்து, மாதவனுக்கு அனுகூலம் செய்வதாக ஆயிரம் தடவை கத்தினார்கள். அவனுக்கு அவை ருசிக்கவில்லை. குடிவெறி தீர்ந்தால் சொன்ன சொல் மறந்துபோம் என்று அவனுக்கு நன்றாய்த்தெரியும். வீட்டிலுள்ளவைகளையெல்லாம் தின்றழித்துக் குடிவெறியுடன் எல்லாரும் சென்றார்கள். தன் குடும்ப தனநாசமும், கீர்த்தி பங்கமும், தன் நம்பிக்கைகளுக்குக் கெடுதியும், தங்களை நசிப்பித்த குடும்பத்தின் அபிவிருத்தியும் ஆகிய இவைகளைப்பற்றிய எண்ணங்களே தனக்குத்துணையாக மாதவன் தனித்து அங்கே இருந்தான்.

துணை ஒருவருமில்லாமல் துக்கத்தில் முழுகிக் கிடந்த அந்த இராத்திரி ஒருதேவதை அவன் நிலைமையைக்கண்டு இரங்கியதாயும், அதனால் மேல் நடந்த காரியங்கள் சம்பவித்தன என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். ஆனால் ஐயோ! மனிதனுக்குண்டாகும் அடங்காத குரூரகுணங்களால் தோன்றுகிற ஆலோசனைகளைவிட, அதிகப் பயமற்ற துணிந்த செய்கைகளை எந்தப் பேய்தான் செய்விக்க வல்லது:

## மாணவர் பக்கம்
## STUDENTS' PAGES
### வியாஸ விதானம்
### Essay writing
### 2. கதா வியாஸங்கள்
### NARRATIVE ESSAYS
### (4) நம்நாட்டு ஸம்பவங்கள்:—சிவாஜியும் அப்ஸுல்கானும்
### Indian Incidents—Sivaji & Afzul Khan

குறிப்பு.—முகவுரை—காரணங்கள்—கதை— முடிவுரை, அபிப்ராயங்கள் கருத்து முதலியன.

சிவாஜி மஹாராஜாவின் பெயரைக் கேட்டிராதவர் ஒருவருமில்லை. மஹம்மதியர்களால் நம்நாடு மிக வருந்திய காலத்தில் ஹிந்துக்களை ஒன்றுசேர்த்து அஷ்டாதசபுராணங்களில் கூறியபடி தர்மபரிபாலனம் செய்யத்தக்க ஒரு ராஜ்யம் ஸ்தாபிக்கவேண்டும் என்பதே அவர் நோக்கம். அவரை நமது தேசத்துச் சரித்திரங்களில் கள்வர்தலைவன் என்றும், நம்பிக்கைத்ரோகி என்றும், மலை எலி என்றும் பலவாறாக அவதூறாக வெளிநாட்டார் நாக்கில் நரம்பின்றி வைதிருக்கின்றனர். அவர் சரித்திரத்தில் அவரது கொடிய குணங்கள் வெளிப்படையாகக் காணப்படும் பாகம் என்று எல்லோராலும் மதிக்கப்படும் அப்ஸுல்கான் விஷயமான நடவடிக்கைகள் என்ற இந்தக் கதை இங்கு எடுத்துக் கூறுவோம். இதில் அவர் நடந்துகொண்ட மாதிரியைப் பார்த்தாவது நமது நண்பர்கள் அவர் விஷயமாகக் கொண்டிருக்கும் கெட்ட அபிப்ராயம் தவறானது, தீரவிசாரிக்காமல் ஆத்திரப்பட்டுக் கொண்ட கெடுமதி என்று எண்ணாமல் போகமாட்டார்கள்.

சிவாஜியின் தாய்தந்தையர்களுக்கு ஜீஜீபாய்,ஷாஜி என்று பெயர். ஷாஜி பீஜபூர் தேசத்து ஸுல்தான் கைவசமிருந்த காவிரிக்கரையிலிருந்த ஒரு மாகாணத்திற்கு அதிபதியாக விருந்தான். அவன் தாயார் ஜீஜீயோ முற்காலத்தில் மஹாராஷ்ட்ர தேசத்தில் அரசாண்டுவந்த ஓர் மராட்டிய குலத்தைச் சேர்ந்தவள். சிவாஜி பிறந்ததுமுதல் அவளிடம் அவருக்கு மிகுந்த பக்தி. அவளுக்குக் குலதெய்வமாகிய பவானி ஆவேசம் அடிக்கடி வந்து கொண்டிருந்ததால், அவளை சிவாஜி ஒருதேவதை என்றே மதித்திருந்தார். ராஜவம்சத்தில் பிறந்தும் தன்கணவன் ஓர் அரசன்

கீழ்க் கார்யஸ்தானாகும்படியாயிற்றே என்ற துக்கம் அவள் மனத்தைவிட்டு மாறவில்லை. கணவனை எவ்வளவு தூண்டியும் அவனால் ஸரிவர காரியங்களைக் கொண்டு செலுத்த முடியவில்லை. ஆகவே பிள்ளையாகிய சிவாஜிதான் தகுந்தவன் என்று அவனை அடிமுதல் தன் இஷ்ட பூர்த்திக்காக நன்றாகப் பழக்கி வந்தார். அவர் ராஜ்யதந்தரத்தில் மிகத்தேர்ந்தார். கதை என்ற வ்யாஜத்தைக்கொண்டு ஜனங்களை ஓரிடத்தில் சேர்த்து, அங்கு ராமாயண மஹாபாரத வீரச்செயல்களை நாடகமாகவாவது கதையாகவாவது நிருபணம் செய்யும் ஏற்பாடுசெய்து ஜனங்களுக்கு தைர்யத்தை ஊட்டிப் பின்னர் அவர்களை நடத்திச்சென்று மேற்குத்தொடர்ச்சிமலைகளில் மகம்மதியர்கள் கைவசமிருந்த கோட்டைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகப் பிடித்துவந்தார். இதைத்தடுக்க சிவாஜிதகப்பனைதெற்கே இருந்து ஏதோகார்யமாக அழைப்பதுபோல அழைத்து பீஜபூர் ஸுல்தான்கள் அவனைத் திடீரென்று சிறைப்படுத்திப் பார்த்தனர். ராஜதந்திரத்தில் தேர்ந்த சிவாஜி உடனே அவர்களுக்கு விரோதமாக டில்லி சக்ரவர்த்தியோடு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள, பீஜபூர் ஸுல்தான் பயந்து ஷாஜியை விட்டுவிடவேண்டிவந்தது. மலைக்கோட்டைகளைப் பிடிப்பதைமாத்ரம் சிவாஜி நிறுத்தாது முடிவில் மஹம்மதியருக்கு முக்யமாகிய கலியான் என்னும் கோட்டையையும் பிடித்துவிட்டுப் ப்ரதாப்கர் என்னும் கோட்டைக்கு வந்துதண்டிரங்கினான். இனிச்சும்மாவிருந்தால் முடியாதென்று பீஜபூர்ஸுல்தான் தன்னிடம் மிகச்சிறப்புற்று விளங்கிய பீமன் போன்ற அப்ஸுல்கான் என்பவனைப் பெரும்படையுடன் சிவாஜியை அடக்க அனுப்புவித்தான்.

அப்ஸுல்கான் பீஜபூரைவிட்டுப்புறப்படும்பொழுது கூடிய தர்பாரில் 'அந்த மலைஎலியை எவ்விதத்திலாவது பிடித்து விடுகிறேன். உயிரோடு கிடைத்தால் போச்சு! இல்லாவிட்டால் அதை நசுக்கியாவது கொண்டுவந்துவிடுகிறேன்' என்று மஹாகம்பீரமாகப் பெருமை பாராட்டினான். சிவாஜி மஹாராஜாவை அடக்கவந்த கான் நேரிடத்தன் கார்யத்தின்மேல் கண்ணாக வந்திருந்தால் நலமாக இருக்கும். வரும்வழியில் துல்ஜபுரி, பண்டாபுர் என்ற இரண்டு திவ்யஸ்தலங்களிருந்தன. அங்கு வந்ததும் சிவாஜி மஹாராஜாவிடம் கானுக்குஇருந்தகோபம் அடக்கமுடியாமல்போக, அந்தவூர்கள் கோயில்களில் பலாத்காரமாகப் புகுந்து விக்ரஹங்களை உடைத்துக்கோயில் முழுவதும் பசுரக்தத்தை வாரி இறைக்கும்படி செய்தான். இந்த ஸங்கதியைத் தன்னாஜிமாலுச்ரே என்ற மஹாராஷ்டிர அதிபதி ஒருவன் சிவாஜிமஹாராஜாவுக்குத் தெரிவித்தான். உடனேஎல்லோரும் அப்ஸுல்கானை எதிர்த்துப் போர் செய்வதற்குத் தயாராயினர். தன் தகப்பன் ஷாஜியைச் சிறையிலிட்ட காலத்தில் தெற்கேசென்று தன் தமயனைக்கொன்றவர்களுடன் அப்ஸுல் ஸம்பந்தப்பட்டிருக்கவேண்டும் என்று தமக்கு இருந்த ஸந்தேஹம் அப்பொழுது ஞாபகம் வந்துவிட்டது. மாலுச்ரே மஹாராஷ்டிரஸேனையின் கோலாஹலத்தை அடக்கி மஹாராஜாவை நோக்கி 'அப்ஸுல்கானைப்போரில் எதிர்க்கமுடியாது. அவனோடு வரும்ஸேனை ஏராளம். அவனை எப்படியாவது மலைப்ரதேசத்துள் வரவழைத்துப்பிடித்துவிட்டால், அவன் ஸேனைமுழுவதையும் இங்குநாம் சின்னாபின்னப்படுத்திவிடலாம். ஸமவெளியிலிருக்கிறவரையில், அவனை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது' என்றான். மந்த்ரிகளுக்கு இப்பொழுது அணுகும் ஆபத்துநன்றாகதெரிந்துவிட்டது. எல்லோரும்அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டனர். சிவாஜி மஹாராஜா தாயிடம்சென்று அனுமதி கேட்டார். அவளுக்கு ஆவேசம்வர 'நீ தைர்யமாகப்போ, ஸமய உசிதமாக உன்மனதில் தோன்றியவைகளைச் செய். என் கிருபையால் நீ மஹம்மதியர்களை வெல்லுவாய்'என்று திருவாய்மலர்ந்தருளினாள். பின்னர் தாயின் ஆசீர்வாதம், தம்ஸேனையின் ஒற்றுமை, பவானியின் அனுக்ரஹம் ஆகிய இவைகளுடன் அப்ஸுல்கான் வரவை அவர் எதிர்பார்த்திருந்தார். அப்ஸுல்கானோ தன் ஸேனைப் பெருக்கைக்கண்டு மகிழ்ந்து, 'சிவாஜி என்னோடு சண்டைசெய்து தரிக்கான். அவனை அவனிருக்கு காவல் நிறைந்த இடத்திலிருந்து எப்படியாவது அப்புறப்படுத்திப் பிடித்துப் பீஜபூர் கொண்டுபோய் விட்டால் நலமாகவிருக்கும். சண்டைசெய்து வீணாக ஆள்களை மடிய வைப்பானேன்' என்று எண்ணமிட்டுக்கொண்டு இறுமாந்து வந்தான். அலக்ஷ்யமாய் அவன் தன் ஸேனையை நடத்திவந்ததால், மலைப்ரதேசத்துள் வந்ததும் பக்கத்திலிருந்து வரக்கூடிய அபாயங்களைத் தடுக்க வேண்டிய முயற்சியை அவன் செய்யவே இல்லை. இருவருக்கும் ஒருவரைஒருவர் பிடித்துக் கட்டிவிட வேண்டும் என்ற ஆவலே மேலிட்டிருந்தது. அக்காலத்திய யுத்தத்தில் தலைவன் பிடிபட்டுவிட்டால் அவன் ஸேனை சிதறி ஓடிவிடும் என்பது அவர்களுக்குத் தெரிந்த விஷயம். இந்த ஸமயத்தில் சிவாஜி மஹாராஜா தூதர்கள் கானை

அணுகித் தமது பிரபு பணிந்து ஸமர்தானம் செய்து கொள்ள தயாராயிருக்கின்றனர் என்று மொழிந்தனர். தன் எண்ணப்படி எல்லாம் முடியுமென்று பேராசை கொண்டு அப்ஸுல்கான் பண்டோஜி கோபிநாத் என்ற ப்ராஹ்மணரை உண்மையை உணர்ந்து வரும்படி அனுப்பினன். அவரது மதஸம்ப்ரதாயம், தேசாபிமானம் முதலியவைகளைக் கிளப்பி மித்ரபேதம் செய்துவிட அவர் சிவாஜி மஹாராஜாவுக்கு அனுகூலரானர்.

சிவாஜி மஹாராஜா பர்தப்கருக்கு அருகாமையில் மலை இடுக்கிலுள்ள ஒரு ஸமபாகத்தை இருவரும் தனிமையாக ஸந்திக்கத்தகுந்த இடமாகக் குறிப்பிட, ஏற்பாட்டின்படி மஹாராஜாவும் கானும் அங்கு ஒவ்வொரு தேஹரக்ஷகனேடு வந்து சேர்ந்தனர். வரும்பொழுது இருவரும் ஒருவரை ஒருவர் எப்படியாவது பிடித்துக்கட்டிவிட வேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தபோதிலும், சிவாஜி கானைக் கட்டிய பின்னர் நடக்கவேண்டிய யுத்தத்திற்கு வேண்டியவேற்பாடுகள் முன்னரே செய்துவிட்டுவந்திருந்தான். அப்ஸுல்கானே தான் நினைத்தபடி எல்லாம் அனுகூலமாகவே நடந்துவந்தபடியால் சிவாஜியைக்கட்டி ஊருக்குப்போனிலடைத்த புலிபோலக் கொண்டுபோய் விடலாமென்று வந்தானே ஒழிய தனக்குக்கஷ்டம்வந்துவிட்டால்மேல்என்னசெய்வது என்று சற்றேனும் யோசிக்காது வந்துவிட்டான். ஆகவே அன்றுகாலை மஹம்மதியப்படைகள் ஆயுதங்களை எறிந்துவிட்டு சாப்பாட்டிற்கு ஏற்பாடு பண்ணிக்கொண்டு ஆடிப்பாடிக் கொண்டிருக்க, அவர்கள் அருகாமையிலேயே புதர்களுள் மஹாராஷ்டிரப்படைகள் யுத்தஸந்நாஹராகச் சிவாஜிமஹாராஜா ஏற்படுத்தியிருந்த அடையாளமான தாரை ஓசையையும் வெடி சப்தத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. வந்ததும் கான்மஹாராஜாவின்கழுத்தைஇடதுகையால் பிடித்து அவரைதன்னிடம் இழுத்து இடதுகக்ஷத்தில் இடுக்கிப்பிடிக்க முயன்றான். ஓஹோ மோசம்வந்துவிட்டதே! என்று எண்ணிக்கொண்டு சிவாஜி மஹாராஜா தமது கையிலிருந்த வாகநகப் (புலிநகம்போன்ற ஆயுதம்) என்பதால்தாக்கி பவானிஎன்றகத்தியால்கான் இடதுபுறத்தைக்குத்தி அவனைக் கொன்றார். உடனே இரண்டு தேஹரக்ஷர்களுக்கும் சண்டை உண்டாயிற்று. மஹாராஜா தாரை ஊதச்செய்ய வெடிகள் போடப்பட்டன. கொஞ்ச நாழிகைக்கெல்லாம் மஹம்மதியர்கள் எல்லோரும் அலங்கோலமடைய நடந்த ஸங்கதியைப் பீஜபூர்கொண்டு சேர்க்கத் தப்பி ஓடினவர் சிலர் தான் மிஞ்சினர்.

இதுதான் சிவாஜி மஹாராஜாவின் நடவடிக்கை சிவாஜி மஹாராஜாவுக்கு அப்ஸுல்கானிடம் விரோதம் அதிக ஏற்படக் காரணமிருந்ததனாலும், அவனோடு நேரிட சண்டை செய்யும் நிலையில் அவர் இல்லாமலிருந்தாலும், கானைக்கொல்வது அவர் ஏற்பாட்டிற்கு ஸஹாயமாயிருந்ததாலும், மஹம்மதியர், வெளிநாட்டுச் சரித்திரகர்த்தர்கள் ஆகிய இவர்கள் சிவாஜி மஹாராஜா ஒன்றும் அறியாது நம்பிவந்தகானை த்ரோஹமாகக் கொன்றார் என்று பழி சுமத்துகின்றனர். இதற்கு இணங்க கதாபாகங்களில் சிலவற்றை மறைத்தும் சிலவற்றை இடம்மாற்றியும் கூறி நகாசுவேலை செய்கின்றனர். உண்மையை ஆராயப்புகின், அக்காலத்தில் இம்மாதிரி ஒருவரை மோசம் செய்து பிடிப்பது ஸஹஜமே. இது கானுக்கும் சிவாஜிக்கும் தெரிந்திருக்கும். இருவருக்கும் இம்மாதிரி மோசம் செய்துவிடவேண்டும் என்பது உட்கருத்தாகவிருக்கும். ஆனல் கான் தனது ஸேனைப்பெருக்கையும் எதிரியின் பலக்குறைவையும் கண்டு இறுமாந்து கஷ்ட காலத்தை எதிர்பாராது அஜாக்ரதையாக இருந்துவிட்டான். சிவாஜி, நல்ல காலம்! அவர் எல்லாவிதத்திலும் ஜாக்ரதையாக விருந்ததால் முடிவில் அவர் ஜயம் பெற்றார். இந்தக்கார்யத்தில் யாதொரு நம்பிக்கை த்ரோஹமும் இல்லை. சரித்திரம் எழுதுவோர் தம் பக்ஷபாத நோக்கத்திற்கேற்பப் பெரியோர்களை அவர்கள் நூல்களில் குற்றங்கூறுவது எக்காலத்திலும் இயற்கையே. இந்தக் கெட்ட குணத்தால்தான் சிவாஜி மஹாராஜாவும் இவ்வாறு மதிக்கப்பட்டார்.

### இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1 அபிமன்யூ வதம் | 6 ஆர்க்காடு முற்றுகை |
| 2 கர்ண வதம் | 7 விக்ஜாதியார் உற்பவம் |
| 3 ராம ராவண யுத்தம் | 8 கல்கத்தா இருட்டுஅறை |
| 4 மாடுபிடிசண்டை | 9 நந்தகுமாரர் சிரச்சேதம் |
| 5 வாலி ஸுக்ரீவ யுத்தம் | 10 சிபாய்கலகம் |

### பொதுக்குறிப்புகள்

1. முகவுரை.
2. காரணம்.
3. கதை.
4. முடிவுரை அபிப்ராயம் கருத்து முதலியன.

## ✓ மொழிபெயர்ப்பு விளக்கம்

## TRANSLATION MODELS

### 5. KINGLY DUTIES AND RENUNCIATION.

William felt his temporal affairs and the state and splendour of his rank so great a

temptation that had one day come to the Abbot, and entreated to be allowed to lay them aside, and become a brother of the order. But the abbot had refused to receive his vows. He had told him that he had no right to neglect or forsake the duties of the station, to which God had appointed him ; that it would be a sin to leave the post which had been given him to defend ; and that the way marked out for him to serve God, was by doing justice among his people, and using his power to defend the right. Not till he had done his allotted work, and his son was old enough to take his place as ruler of the Normans, might he cease from his active duties, quit the turmoil of world and seek the repose of the cloister. It was in the hope of peaceful retirement that William had delighted to treasure up the humble garments that he hoped one day to wear in peace and holiness.

### ராஜதர்மமும் துறவும்

லௌகிக விஷயங்களும் அவன் நிலைமைக்குரிய சீரும் சிறப்பும் வில்லியம் (நார்மன் ராஜன்) என்பவனுக்கு ஒரு பெரிய மருட்சியாகத் தோன்ற, அவன் ஒருநாள் தன் புரோஹிதரான மடாதிபதியிடம் வந்து, அவர்கள் ஸங்கத்தின் அங்கத்தினனாக அனுமதி கொடுக்கவேண்டுமென்று மிக நயந்து கேட்டுக்கொண்டான். ஆனால் அந்த மடாதிபதி மாத்ரம் அவன் ப்ரதிக்ஞைகளை ஒப்புக்கொள்ளாது மறுத்துவிட்டார். 'கடவுள் உன் நிலைமைக்கு அமைத்திருக்கும் கடமைகளைக்கவனியாது இருப்பதற்காவது முற்றிலும் விட்டுவிடுவதற்காவது உனக்குயாதொரு அதிகாரமும் இல்லை. விடாது காத்தது நிலைபெறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட உன் நிலையை விட்டுவிடுவது பெரிய பாபமே ஆகும். கடவுளை வழிபடுவதற்கு உனக்கென்று குறிக்கப்பட்டுள்ள வழிகளாவன: ஜனங்களை ந்யாயமாய் நடத்துவதும், தர்மத்தைக் காக்க முயலுதலுமாகிய இவைகளே. உனதென்றுவிடப்பட்ட கடமைகளை ஸரிவரமுடித்து, உனக்குப்பின் உன்பிள்ளைக்கு நார்மன் ஜாதியார் ராஜாவாகத் தகுந்த வயது வருமளவும், உன் ப்ரவ்ருத்தி ரூபமான கடமைகளை விட்டு, உலகக்கவலைகள் நீங்கி மடத்தில் ஏற்படக்கூடிய சாந்தத்தை நீ விரும்பி வந்து விடக்கூடாது.' என்று புத்திமதி கூறினார் அந்த மடாதிபதி. இம்மாதிரி சாந்தமாக ஒதுங்கிப் பரிசுத்தமாகத் தரித்துக் கொள்ளலாம் என்னும் ஆவலால் தூண்டப்பட்டே தனது ஆடம்பரமற்ற உடைகளைச் சேமித்துவைப்பதில் வில்லியம் மிகுந்த மனக்கிளர்ச்சி உடையவனாக விருந்தான்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

**CHILDREN'S PAGES**

TRUE GREATNESS

OR

VASUDEVA SASTRI

### உண்மை உயர்வு

### அல்லது

### வாஸுதேவ சாஸ்திரி

அத்யாயம்-1

### பட்டப்பெயரால் தட்டழிந்தது

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையும் சஞ்சலமே தான்.

' அடே மொட்டே ! ராமஸ்வாமி அய்யர், முத்துஸ்வாமி அய்யர், ஸுப்பையா, வேங்கடேச்வர அய்யர், இவர்கள் எல்லோரும் இன்னும் வந்து சேரவில்லையா! அடே மடப்பயலே ! ஏன்டா இன்னும் அவர்களைப் போய் அழைத்துவரவில்லை ? உன்னைவிட வச்சிர சும்பன் நான் கண்டதே இல்லை ! ஓடிப்போய் சீக்கிரம் அவர்களை அழைத்துவாடா, போ!' என்று ஓர் உத்தரவு பிறந்தது. இவர் கூறிய மாதிரியைப் பார்த்தால் அதிகாரதோரணையிலிருந்து அநேகரால் மரியாதைசெய்யப் பட்டவர் என்று தோன்றியது. ' ந—ந—ந—நான், போ—போ—போ—போய், அ, அ, அ, அவர், அவர்—அவர்களை, கூ—கூ—கூப்பிட்டேன். அ, அ, அ, அவர் – – –' ' திக்கிக்காலங்கழி ! திக்கி ஒழிந்துபோய்விடு! படவாப் பயலே ! ஓடிப்போய் அவர்களை அழைத்துவா, பின்னர் நாள் முழுவதும் திக்கிக்கொண்டு கிடக்கலாம்,' என்று கடுகடுப்பாய் முன்னவர் கூறினர். உடனே மொட்டை என்று அழைக்கப்பட்ட மூந்து என்பவன் திக்கிக்கொண்டே ஓட்டம் பிடித்தான்.

இவ்வாறு உத்தரவு செய்தது மதுரை டிப்டி கலெக்டராயும் அன்றுதான் வி ஐ. இ. என்ற பட்டம் பெற்றவராயும் உள்ள திவான் பஹதூர் நாராயண **ஐயர் அவர்கள்**. கொஞ்சநாளைக்கு முன்னர் ஏற்பட்ட பஞ்சத்தில் இவர்செய்த அருமையான உதவிகளுக்காக இவருக்கு இப்பெயர்கள் கொடுக்கப்பட்டன என்று சிலர் கூறியபோதிலும், பொதுவாக ராஜாங்கத்தார் தயவாலே இவருக்கு இப்பதவி கிடைத்தது என்பதே லோகவதந்தியாக விருந்தது. நீங்கள் அவசியம் திவான்

பஹதூர் நாராயண அய்யர் அவர்கள் வி. ஐ. இ. யைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கவேண்டும். (இல்லாவிடில் யாதொரு ப்ராயச்சித்தமும் உங்களுக்கில்லை; அவரைத் தெரியாதென்றால் உங்களையே உங்களுக்குத் தெரியாதென்று கூறவேண்டிவரும்). இவரை மாற்றின காலத்திலாவது அல்லது இவர்க்கு விடுமுறை நாள்கள் கொடுத்த காலத்திலாவது இவர் பெயர் போர்ட் ஸென்ட் ஜார்ஜ் பத்திரிகையில் அச்சிடப்படாமல் போகாது. ஒவ்வொரு வருஷமும் இவர் பெயர் ரெவினியூ பட்டியில் புதிதாகப் பிரசுரம் செய்யப்பட்டு வெளிவரும். இவர் இவரிடம் கொடுக்கப்பட்ட ஜமீன்களை வெகு திறமாக நடத்தி வந்தார் என்று இளவரசு ஜமீன்களை மேல்பார்வை பார்க்கும் கச்சேரிக்காரர்கள் அநேகம் தரம் தமது நன்றி அறிதலை மிகச் சிறப்பான வந்தனங்கள் மூலமாக வெளியிட்டிருக்கின்றனர். தனக்குத் தெரிந்தவரையில் தன் கீழிருக்கு நாராயண அய்யர் மிகப்புத்திமான் என்று கலக்டராகிய ஆஸ்புட் என்பவர் இவரது ஸமய உசித புத்தியை மிக வியந்து பேசியிருக்கிறார். முன் ஏற்பாட்டின்படி இவர் வைபவங்கள் குறைந்தபக்ஷம் மாதம் ஒருமுறை உள்ளூர் பத்திரிகைகளில் நன்கு வரையப்பட்டு வெளியாகும். அநேகம் தரம் இவர் பட்டண பரிபாலன ஸபை அக்கிராசனாதிபதிப் பதவியை அடைந்திருக்கிறார். இவரது குணாதிசயங்களைப்பற்றி இப்பொழுது இவைபோன்ற இன்னும் பல உள என்று தான் கூறி முடிக்கவேண்டி வருகிறது. இப்படி இருந்தும் ஒன்றுமாத்திரம் கூறாமல் விட்டால் அவருக்கே மனஸ்தாபம் வரலாம். ஆங்கில தேசத்திற்கு முழு ந்யாயம் பிறக்கச்செய்த ஒரு வழக்கில் இவரது தீர்ப்பைப்பற்றிக் கூறுங்கால் பெரிய கச்சேரி ந்யாயாதிபதிகள் இவர் பெயரை வெகு சிறப்பாகக் கூறியிருக்கின்றனர்; ஆதலால் இவர் பெயர் சீமை அதிகாரிகளுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. முற்கூறியபடி தமது பெயர் மிகச் சிறப்பாக மதிக்கப்பட்டு சீமை சென்றது என்று கேள்விப்பட்டதும் அவ்வாறு செய்யக் கருணை கூர்ந்த ந்யாயாதிபதிகளுக்குத் தமது மனப்பூர்வமான வந்தனை வழிபாடுகளை இவர் முறைப்படி நடத்தினர் என்பது எங்கும் ஓர் வதந்தியாகப் பரவியிருந்தது. இவைகள் எல்லாம் உத்தியோக விஷயங்கள், நல்லகாலம் இவைகளைப்பற்றி இனிமேல் கதையில் எடுத்துரைக்க வேண்டி வாராது. உத்யோக ஸம்பந்தமில்லாத இரண்டொரு விஷயங்கள் அவர் கீர்த்திக்குக் காரணமாக விருந்தன. இவைகளை நாம் முக்யமாகக் கவனிக்கவேண்டும். முதலாவது இவர் பணக்காரர். இரண்டாவது இவர் பிராஹ்மணர் விஷயத்தில் ஏராளமாகத் தானம் செய்யும் கொடையாளி. பொதுவாகப் பணம் சேர்த்துச் சத்திரம் சாவடிகள் கட்டிவைத்தவர். இவைகளால் இவருக்கு ஒருவிதச் சிறப்பு ஏற்பட்டது. இதவும் அல்லாமல் பொதுவாக நல்ல எண்ணங்கள் தகுந்த விஷயங்களை நன்கு மதிக்கும் குணம் ஆகிய இவைகள் இவரிடம் குடிகொண்டிருந்தன. ஆதலால் அநேகர் கண்டு வியந்து விரும்பத்தக்க பதவிகள் இவருக்குப் பின்னர் வித்திக்க இவைகளே தகுந்த முகாந்திரங்களாயின.

முற்கூறியபடி மொட்டையை இவர் வெளியே அனுப்பிவிட்டு, வீட்டுள்ளே புகுந்தார். அங்கு வாஸுதேவசாஸ்திரி வழக்கப்படி மிகுந்த ஆடம்பரமாகவும் கம்பீரமாகவும் வீட்டு தெய்வபூஜை செய்துகொண்டிருந்தார். இதைக் கண்டதும் 'வாஸு! உன் கடையைக் கட்டு, சீக்கிரம்! சீக்கிரம்!! ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். என்றைக்கும் போலவா இன்றைக்கும், நடத்து, சீக்கிரம் முடி, எங்கே பார்ப்போம், துறையில் நடத்து' என்று அவஸரப்படுத்தினார். என்ன இவ்வளவு அவஸரம்? இன்றைக்கு என்ன விசேஷம்? ஸ்வாமிகளைக்கூட அவஸரமாக ஒதுக்கும்படியான அவஸரம் என்ன வந்து விட்டது? வேறொன்றுமில்லை, அன்று தமக்கு வந்த மூன்றெழுத்துப் பட்டப்பெயர் விஷயமாக நாராயணஅய்யர் தமது தோழர்களுக்கு ஒரு விருந்து அளித்தார். அன்று கல்யாணம் பட்டபாடுபட்டது. விசித்திர உணவுகள், பாட்டுகள் இன்னும் மற்றைய வைபவங்களுக்கும் குறைவே இல்லை. யஜமானர் இந்தப் பெரிய விஷயத்தால், ஏற்பட்ட ஸந்தோஷக்கடலில் கால் தலை தெரியாது மூழ்கி இருந்தார். தமக்கு இப்பதவி கிடைப்பதற்குக் காரணமாக விருந்த விஷயங்களைப்பற்றி வெகு உத்ஸாஹத்தோடு தமது தோழர்களிடம் வார்த்தையாடினர். தனது கீர்த்தியும் திறமும் மாட்சிமைதங்கிய கவர்னர் அவர்களுக்கு எட்டி அவர் எண்ணத்தைக் கவர்ந்து, ஆவலுடன் தன்னை அவர் அழைத்தது, மதிப்பாயும், அன்பாயும் அவர் தம்முடன் ஸம்பாஷித்தது, ஸாமர்த்தியமாய்த் தாம் நடந்துகொண்டது, தமது குண விசேஷத்தில் அவர் ஈடுபட்டவிதம், தமது புத்திநுட்பம், வாக்சாதுர்யம், ராஜ்யதந்திரம், ஆகிய இவைபோன்ற அறிய விஷயங்களைப்பற்றி ஓயாது நாராயண அய்யர் அவர்கள் உபந்யஸித்தார். மிகச்சிறந்தவர் என்று மதிக்கப்படுபவருள் தாம் ஒருவர் என்றே அவர் எண்ணியிருந்தார், அவர் தோழர்களும் இதற்கு இசைப் பல்லவி பாடினர்.

திவான் பஹதூர் வி. ஐ. இ. என்ற பதவியைவிட்டு அணுவேனும் குறைவாகத் தம்மை மதிக்க அவருக்கு மனம் வரவில்லை. ஸ்நானம் செய்யப் போனவிடத்துத் தாம் வி. ஐ. இ. என்று பாவித்து மகிழ்ந்தார். உண்ணும் பொழுதும் வி. ஐ. இ. தான். இடைவிடாது எப்பொழுதும் அவர் வி. ஐ. இ. ஆகாரமாகவே யிருந்தார். ஸ்வதேச டிப்டிகலெக்டருள் எவனுக்கும் இவ் வழிகிய விருதி பொருத்தப்படவில்லை. வெகுவாகக் கூறப்பட்டுள்ள பிரணவத்துள் அடங்கியிருக்கும் மூன்றெழுத்தைவிட இம் மூன்றும் மிகச் சிறந்ததாக அவருக்குப்பட்டது. இதுவும் அல்லாமல் கவர்னர் நேரிட இவரை அழைத்தாரே! —இத்தகைய சிறப்பை யாரால் அமைதியாய் வஹிக்க முடியும்!

விஷயங்கள் இவ்வாறு நடந்தேறிய போதிலும் வீட்டில் ஒரு ஆளுக்குமாத்திரம் அன்று ஏற்பட்ட கோலாஹலங்கள்பிடிக்கவில்லைபோலக் காணப்பட்டது. அத்யாச்சர்யம்! அந்த ஆள் நாராயணஅய்யர் ஸம்ஸாரமாக ஏற்பட்டாள். அவள் முகத்தில் காணப்பட்ட வெறுப்பைக் கண்ணுற்றார் திவான் பஹதூர். அவள் தம்மைக்கண்டு மெச்சிக்கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ பாடுபட்டார். முயற்சிகள் வீணாயின. தமக்கு வந்திருக்கும் சீர் சிறப்பு முதலியவைகளை அவளோடும் சேர்ந்து பகிர்ந்து அனுபவிக்க அவர் தயாராயிருப்பதாக அநேகக் குறிகளாலும் வெளியிட்டார். இரவில் படுக்கைஅறையில் அவளைத் திவான் பஹதூர் ஸீதாலக்ஷ்மி அம்மாள் வி. ஐ. இ. என்றும் அழைத்துப்பார்த்தார். என்ன செய்தென்ன! "தூக்கம் வருகிறது படுத்துக்கொள்வோம்' என்று மறுமொழி பிறந்ததே ஒழிய வேறு ஒருவித ஸந்தோஷக்குறியும் அவளிடம் காணப்படவில்லை. பார்த்தார் நாராயண அய்யர்! என்ன செய்வார் பாபம்! மிகவும் நொந்துகொண்டார். மனதை ஒருவாறு ஸரிப்படுத்திக்கொண்டு, "ஹூம்! எழுதப்படிக்கத் தெரியாத முழு மூடங்களான பெண்களைக்கட்டி அழுவதன் பயன் இதுதான்! என்ன அநியாயம்! எனக்குத் திவான் பஹதூர் வி. ஐ. இ. என்ற இரண்டு அரிய பட்டங்கள் கிடைத்திருக்கின்றன! ஏ மூடமே! இவைகளின் சிறப்பு உனக்கு விளங்கவேயில்லைபோலும். ஸரிதான், 'கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாஸனை' வேறு எந்த டிப்டி கலெக்டர் பயலுக்குஇம்மாதிரி பட்டப்பெயர்கள் கிடைத்திருக்கிறது சொல்லேன் பார்ப்போம்? டிப்டி கலெக்டர்களுள் மருந்துக்கு ஒரு திவான் பஹதூர்கூடக் கிடையாது. மேலும் யாருக்குக் கவர்னரோடு நேரிடப் பேசும் பாக்கியம் கிடைத்தது. மூடமே! உனக்குப் படிப்பும் இல்லை. புத்தியும் இல்லை. உன்னுடன் இவை இடித்து இடித்துக் கூறுவதால் என்ன உபயோகம். மூடப் பெண்சாதிகளைக் கட்டிக்கொண்டவர் கதி இதுவே. நமது பெண்களை நாம் படிப்பிக்கவேண்டும். தாமதிக்கலாகாது!' என்று மிகுந்த படபடப்புடன்பிரஸங்கித்தார். 'இன்றிரவே அவசியம் செய்துவிடவேண்டும்!' என்று கூறினன் ஸீதை. இவ்வாறு நிஸ்ஸாரமான அற்பவிஷயங்களை எண்ணி எண்ணிப் புண்ணுவதே படிப்பானால், கடவுள் கருணையால் எங்களுக்கு அது வாராமல்தடைபட்டு நிற்கட்டும். ஆ தெய்வமே! என்ன வீண்கர்வம்! என்ன ஆத்மஸ்துதி! அற்ப விஷயங்கள், வெறும் பட்டம் இவைகளைக்கண்டு என்ன ஆனந்தப்பெருக்கு! ஐ.இவி.யாம்;இம்மூன்றெழுத்தில் என்னரஸம் நாதா! நாம் கா, கி, கூ என்று பட்டம் வைத்துக்கொண்டு அதை எண்ணி எண்ணி மகிழ்ந்து பித்தராகலாமே! இம்மாதிரியான அற்பவிளையாட்டு அற்ப ஸந்தோஷம் இவைகளுக்காகவா மனித ஜன்மம் வந்தது; இல்லவே இல்லை! இன்று தேன் குடித்த நரிபோலத் திருதிரு என்று அலைவோமாகில் நாளை அனுதைச்சிசுபோலப் பரிதவிக்கவேண்டியதுதான். இதுதானு வாழ்க்கையின் முடிவு? என்று தீட்டினள் ஸீதாலக்ஷ்மி.

'எனக்குத் தெரியும்! எனக்குத் தெரியுமே! அந்தப் பாபி வாஸு அன்றே உன்னை இவ்வாறு கெடுத்துவிட்டான். சாஸ்திரியாம் அவன்! துஷ்டப்பயல்! அவன்தான் உன்னைப் பைத்யமாக்கிவிட்டான். வரட்டும் நாளைக்கு அவன் இங்கே! அவன் மண்டையை உடைத்து மாவிளக்கு இடுகிறேன். எக்கேடேன் கெட்டு ஒழிந்து போ! சனியனே!; என்று மிகுந்த கோபத்துடன் அவளை உதறி எறிந்துவிட்டு வெளியே புறப்பட்டார். ஸீதாலக்ஷ்மி அவரைப் பின் தொடர்ந்தாள்; அவர் கையைப் பிடித்துத் தடுத்தாள்; காலில் விழுந்தாள்; கண்ணீர் ததும்ப, 'நாதா! நான் கொஞ்ச அவஸரப்பட்டுவிட்டேன். மன்னிக்கவேண்டும். 'சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே.' உம்மேல் குவிந்து கிடக்கும் சிறப்புகள் எல்லாம் எனக்குத் தெரியாமல் இல்லை. அவைகள் என்னைச் சேர்ந்தவைகள் அல்லவா? ஆராயுங்கள் அவைகள் என்னதே ஒழியத் தங்களதல்ல. உங்களுக்கு எவ்வளவோ வேலைகள் உண்டு. இவைகளைப்பற்றி நினைக்கக்கூட காலமிராது. கணவன்சிறப்பைவிட மிகச் சிறந்தது மனைவிக்கு வேறுஎன்னஇருக்கிறது. 'குலமகட்குத் தெய்வம் கொழுநனே.' அவனே மனைவியின் ஆனந்தம், செல்வம் இன்னும் மற்ற சிறந்த வஸ்துக்களும். நாதா என்னிடம் உங்களுக்குக் கோபமே வாராதே. என்மேல் உமக்கு உள்ள காதலுக்குக் கங்கு கரையில்லையே. இம்மாதிரியான காதல் இருக்க என்னைவிட்டுப் பிரிய——' என்று பலவாறுகக் கெஞ்சிக் கேட்டாள். பெண்களுக்கே சிறப்பாய் அமைந்துள்ள சொன்னயம் வாய்ந்த அவள் வாக்சத்தியைத் திவான் பஹதூர் வி.ஐ.இ. என்று இரண்டு பட்டப்பெயரையும் பெற்ற மஹானுபாவனும் தடுக்க முடியவில்லை. பின்னர் அன்பார்ந்த மொழிகள், வெற்றிலைபோடல் சந்தனக்காப்பு முதலியவைகளால் அன்றிரவு வெகு ஸுகமாகக் கழிந்தது.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## ருக்மணி அல்லது பக்திநிலை

எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்.

—பெருந்தேவனார் பாரதம்.

தமது கணவரது ஸுகதுக்கங்களை எண்ணாது தமது ஸுகங்கள் ஒன்றையே நாடுதல் நாயகத்ரோஹம். காலை முதல் மாலைவரை உழைத்து கொண்டுவந்து கொடுக்கும் பொருளைத் தனது பெரியோரோடு உண்டு களிக்காது தனக்கு முதல் பின் எல்லார்க்கும் என்று எண்ணுதல் தன்னயம்மாத்ரமன்று; செய்த நன்றியை மறத்தலாகும். வந்த கணவனை எதிர்கொள்ளாது அவனிடம் அன்போடுபேசாது நெருப்புப்போல்எறித்துக்கொண்டு இருப்பவள் அவனது உயிரைக்கவரவரும் யமன். காலையில் அவன் வேலைகளைப் பார்க்கவிடாது தனது கார்யங்களையே பார்த்திருப்பவள், அவனது ஸுகத்தைக் கெடுக்க வரும் நோயாகிறாள். சமைத்தவற்றைக் கணவனுக்குக் கொடுக்காமல் வாழ்பவள், வீட்டிலேயே வசிக்கும் பேய். இவற்றில் ஏதேனும் ஒன்று இருந்தாலும் கணவன் உயிருக்கு ஹானி என்பது நிஸ்சயம். மூன்றும் கலந்தால் சொல்ல வேண்டியதில்லை. இதையே நாலடியாரில்,

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றம் ; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி ;—அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் ; இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

என்று சொல்லப்படுகிறது. இத்தகைய மனைவிகளை உலகில் அநேகம் வீடுகளில் காணுமவிருப்பது அஸாத்யம்.

அவ்வாறு இல்லாமல் தமது கணவர்க்கு வேண்டியது வேண்டியவாறு செய்தல்; அவர்க்கு மனத்தில் ஸந்தோஷம் உதிக்குமாறு நடத்தல்; அவர்க்கு எது வேண்டுமோ, அவற்றைக் கேட்பதற்குமுன் அறிந்து செய்தல்; அவர் காலால் இட்ட வேலையைத் தலையாலே செய்து தாம் உழைத்தல்; அவன் மனது கோணாது, இரண்டு கண்களும் ஒரே பொருளை நாடுதல்போல் தன் கணவன் மனத்திற்கு ஹிதமானதைத் தனக்கும் ஹிதமாக ஒப்பி நடந்து அவன் அன்பை ஸம்பாதித்தல், ஸம்பாதித்தபின் அது நீங்காது இருக்கும்படி நடந்து கொள்ளுதல், இவ்வகையாக அன்பின் கிளர்ச்சியால் இருவரும் மகிழ்ந்து வாழல், வாழ்ந்து பேரின்ப வீட்டில் வழிகாட்டிக் கொள்வதாகிய குணங்கள் நற்குலத்தில் பிறந்து, நல்லொழுக்கத்தில் பழகி, நல்ல சேர்க்கை இருப்பவர்க்கும் கிடைத்தலரிது.

இத்தகைய குணங்களெல்லாம் அமைந்து, தன்னுடல், உயிர் ஆவியாவும் ஸ்ரீக்ருஷ்ணார்ப்பணஞ் செய்த ஸ்ரீருக்மணிப் பிராட்டியாரின் வைபவம் இங்கு கூறப்படும் :—

### க—தூதுவிடுத்த காதை

உருப்பிணி நங்கையை தேரேற்றிக்கொண்டு
விருப்புற்றங்கேக விரைந் தெதிர்வந்து
செருக்குற்றான் வீரஞ்சிதைய தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற
தேவகி சிங்கத்தைப் பாடிப்பற.

—பெரியாழ்வார் திருமொழி

விதர்ப்பநாட்டிற்கரசன் ; அவன் பெருமன்னன் : அவன் பெயர் பீஷ்மகன். அவனுக்கு ஐந்து ஆண்மக்களும் ஓர் பெண்மகவும் உண்டு. மூத்த குமாரன் பெயர் ருக்மன். மற்ற ஆண்மக்கள் பெயர்—ருக்மார்த்தன், ருக்மவாஹு, ருக்மிகேசன், ருக்மமாலி. இவர்கள் தங்கையின் பெயர் ருக்மணி. இவள் அழகிற் சிறந்தது போல் குணத்திலும் உயர்ந்தவள். சிறுவயது முதல் வடமதுரையில் வாழும் ஸ்ரீமுகுந்தனுடைய குணம், அழகு, வீரம், சமத்காரம் முதலியவைகளைக் கேட்டு அவன்பால் மனம் பதிந்தது. வருவார்கள் பரந்தாமனது புகழைப் பாடக்கேட்டுக்கேட்டு அவள் மனம் முகுந்தன் மேல் திடமாக ஆசைகொள்ளச் செய்தது. அவ்வாஸுதேவனே தனக்கு உவந்த தலைவன் என்றும் நிச்சயித்தாள். கண்ணனும் ருக்மணியின் புத்தி, ஸாமுத்ரிகா லக்ஷணம், பெருந்தன்மை, அழகு, நாகரிகம், நடத்தை முதலியவைகளைக் கேட்டு, அவள்தான் தனக்கு உவந்த பத்னியென்று தீர்மானித்து, அவளை மணக்க மனோதிடமடைந்தார்.

இது நிற்க, தன்னுடன் பிறந்தாளின் உள்ளக் கருத்தைத் தெரியாது, நற்குணங்களைக் கெடுக்க வரும்

கீழ்மை ஸ்வபாவம்போல ருக்மி நடக்கலானான். கண்ணனிடம் பகைகொண்டவனாகையால், அவளை ஸ்ரீ பரந்தாமனுக்களிக்க வேண்டுமென்று சொல்லிய அன்பரது மொழிகளைத் தடுத்துச் சேதி நாட்டரசனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்தான். இதைக் கேள்வியுற்ற வைதர்பி* மிகவும் துஃகாக்ராந்தையாகி வேகமாக ஒருவரு மறியாத வண்ணம் பரந்தாமனிடம் நம்பிக்கையுள்ள ப்ராஹ்மணனொருவனைத் தூதாக அனுப்பினாள். த்வாரகையை அடைந்து, ஐயனது அரண்மனையுள் புகுந்து பரம புருஷன் ஓர் பொன்னாஸநத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டான். ப்ராஹ்மணன் உள்சென்றதும் தனது பீடத்தைவிட்டிறங்கி ப்ரஹ்மண்ணிய தேவனாகிய வாஸுதேவன் வந்தவற்கு ஆஸநம் அளித்துத் தேவர்கள் பூஜை செய்வதுபோல் அவரை பூஜித்தார். அவர்க்கு உண்டி முதலிய யாவும் கொடுத்து விடாய் ஆற்றினார். பின் பக்தரக்ஷகராகிய பரமன் அவரைமிகு வணக்கமாக கீழ்வருமாறு கேட்டார் 'ப்ராஹ்மணர் தலைவா! தமது பூஜை தவம் முதலிய யாவும் இடையூறு இல்லாமல் நடக்கின்றனவா? தாங்கள் எப்பொழுதும் ஸௌக்கியமா? தனது தர்மத்தை நடத்திக்கொண்டு ப்ராஹ்மணன் எவனும் அமைதியோடு இருக்கவேண்டும். தனது தர்மத்தை நடத்திய ஸந்தோஷமே எல்லாவற்றையும் கொடுக்கும். அடங்காத அமைதியுடையவன் பொருள் அனைத்தும் பெற்றாலும் ஸுகமடையான். அமைதியுடையவன், எளியவனானாலும், தனது சிறு குடிசையுள் ஸுகமாக வாழ்வான். ஹே விப்ரா! அகந்தை அடக்கி, மமதை யொழிந்து, காருண்ய மூர்த்திகளாய்த் தம்மைத்தாமறிந்து, தர்மத்தை நடத்துகின்ற விப்ரர் அனைவர்க்கும் நமஸ்காரம். உமது க்ஷேமம் நன்றே அல்லவா? ப்ராஹ்மணா! எந்த அரசன் தனது குடிகளின் ஸுகத்தை நாடி ஸுகத்தைச் செய்கிறானோ அவன்தான் எனது நண்பன். ரஹஸ்யம் ஒன்றும் இல்லாவிட்டால் தாங்களுக்கு நான் என்ன செய்யக்கூடும், சொல்லும். எதற்காக, எவ்விடத்திருந்து தாங்கள் கடலைத் தாண்டி இங்கு வந்தீர்கள்.'

இவ்வாறு மாந்தரைக்காக்க மானிடவுருவங் கொண்டு வந்த பரமேஷ்டி வினவியதற்கு ப்ராஹ்மணன் தான் வந்ததின் விவரமனைத்தும் விரிவாகக் கூறினார்.

பின் அவர் கண்ணன் இடம் ஒரு கடிதம் கொடுத்தார். அதில் ருக்மணி எழுதிய விவரம்:

"ஹே அச்யுதா! ஜகந்மோஹநா! தமது குணாதிசயங்கள் என் காதுள் புகுந்து என் உடம்பிலிருந்த வ்யாதி அனைத்தையும் போக்கிற்று. பார்வையில் உருவம் பிண்டமாக ப்ரதிபலிக்கும் உனது பேரழகைக் கேட்டு, என் மனம் கூச்சங்கடந்து உன்பால் ஆசை கொண்டது. ஹே முகுந்தா! நரச்ரேஷ்டா! வம்சப்ரம்பரை, நற்குலம், நன்னடக்கை, அழகு, அமைதி, கல்வி, இளம் வயது, செல்வம், நாடு, வீரம் இவை அனைத்திலும் உனக்கிணையின்றி வாழும் உம்மிடம், புத்தி விசாலித்து நாகரிகத்திற் சிறந்த பெண் எவள்தான் ஆசை கொள்ளாள்? என் மனத்தை உனக்கே அர்ப்பணம்செய்தேன். உன்னையே கணவனாக வரித்தேன். இங்கு வந்தென்னை ஒப்பிக்கொள்ளும். செந்தாமரைக்கண்ணா! சிம்ஹத்திற்கு உவந்த உணவை ஒருநாய் தீண்டப் பார்த்தலழகோ? வீரச்ரேஷ்டராகிய உமக்கே உரிய என்னைச் சேதிநாட்டரசன் கவரவும் நீர் பார்த்திருப்பீரா? நான் என்றும் பரம புருஷனாகிய தெய்விகப் பொருளைத் தடாகங்கட்டியும், அக்நிஹோத்ரம்செய்வித்தும், வேறு யாகங்களைமுடிப்பித்தும், வ்ரதங்களைச்செய்தும், தேவர்களை பூஜித்தும், ப்ராஹ்மணர்களையும் பெரியோர்களையும் வந்தனை வழிபாடு செய்தும், இவற்றின் மூலமாக வழிபட்டிருந்தால், கண்ணன், என் இருகண் போன்றவர் இங்கு வந்து, தானே என்னை மணக்கட்டும். தாமகோஷன் மகனாவது வேறு யாராவது என்னை அடையா திருக்கும்படிக் காக்கட்டும். தனக்குவமை யில்லாத தனியாகிய பொருளே! நாளைதான் என் மணநாள். யாவருமறியாது விதர்ப்பம் புகுந்து சேதியரசனுடையசேனையையும்மகதநாட்டரசனது பரிவாரங்களையும் வேரறுத்து வீழ்த்தி உனது வீரத்தைக் கன்யசுல்கமாகத் தந்து என்னை ராக்ஷஸ வழியில் மணந்துகொள்ளும். ஆனால் தாங்கள் 'நீ அந்தஃபுரத்திலிருக்க நான் எவ்விதம் வந்து உன் உறவினரைக் கொல்லாது உன்னை மணப்பது' என்பீராகில் நான் வழிசொல்லுகிறேன் கேளும். கல்யாண நாளுக்கு முன்னாள் ஒரு பெரும் பவனிவரும். அதில் கல்யாணப்பெண் தேவியின்கோயில் போவது வழக்கம். இதுதான். இனி உமது பாதாரவிந்தங்களின் தூளியை அநுதினமும் தமது ஞானங்கிளம்ப உமைத்தலைவன் முதல் யாவரும் துதிக்கு நிலைமையிலிருக்கும் தாங்கள் என்னிடம் அருள் புரியாவிட்டால், காயசோஷணஞ் செய்து, அநேக ஜன்மங்கள் கடந்தேனும் அடைவேன்."

* வைதர்பி = விதர்ப்பநாட்டரசன் மகள், ருக்மணி.

# விசேஷ வர்த்தமானங்கள்

## INTERESTING NEWS

"விவேக போதினி":—இம்மாதத்தியசஞ்சிகைக்கு அனுபந்தமாக நமது சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினியின் உருவப்படங்கள், அனுபந்தமாக அச்சிட்டு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

* * *

மதுரைச் செந்தமிழ்ச்சங்கத்திற்கோர் நன்கொடை.—ஆனரபில் மிஸ்டர் எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்திற்கு 1000-ரூ நன்கொடையாக வளித்து, மாதந்தோறும் 50 ரூபாயளிப்பதாக வாக்களித்திருக்கின்றார்காம். கல்வியபிவிர்த்தியின் பொருட்டுதவுவது எவ்வாற்றானும் சிறந்த கொடையாகும்.

* * *

மகமதிய மதத்தினர்.—உலகத்திலுள்ள மகமதிய மதத்தினரின் தொகை 222,966,170. இவர்களில் கிறிஸ்தவர் ஆளுகைக்குட்பட்டவர்கள் 161,070,870. கிறிஸ்தவரும் மகமதியருமல்லாத புறமதத்தினருக்குட்பட்டோர் 23,976,500. மகமதிய ஆளுகைக்குட்பட்டோர் 22,400,000. துருக்கிக் குட்பட்டோர் 15,528,800.

* * *

படிப்புக்காக 1909-10-ம் வருஷத்தில் இந்திய கவர்ன்மெண்டார் செலவழித்தது :— சென்னை, ரூபாய் 37,90,000; பம்பாய் ரூ. 43,53,000; வங்காளம் ரூ. 55,69,000; ஐக்கிய மாகாணங்கள் ரூ. 28,59,000; பஞ்சாப் ரூ. 22,61,000; கீழ்வங்காளம் ரூ. 23,38,000; பர்மா ரூ. 19,00,000; மத்திய மாகாணங்கள் ரூ 16,55,000; அதே வருஷத்தில் போலிஸுக்காக செலவழித்தது:— சென்னை ரூபாய் 74,13,000; பம்பாய் ரூ. 93,10,000; வங்காளம் ரூ. 81,68,000; ஐக்கிய மாகாணங்கள் ரூ. 102,13,000; பஞ்சாப் ரூ. 53,51,000; கீழ்வங்காளம் ரூ. 50,82,000; பர்மா . 117,84,000; மத்திய மாகாணங்கள் ரூ. 31,05,000. அதாவது மொத்தம் வருஷம் ஒன்றுக்கு ½ கோடிரூபாய் போலிஸுக்காகச் செலவாகிறது. படிப்புக்காகச் செலவாவது 2½ கோடி மாத்திரந்தான்.

10-ரூபாய் தங்க நாணயம்.—சக்கரவர்த்தியாகிய ஜார்ஜ் அவர்கள் இந்தியாவிற்கு வருவதற்கறி குறியாகப் 10-ரூபாய் தங்கநாணயம் வெளியிடப்படுமென்று தெரியவருகிறது.

* * *

சிவாஜியின் சமாதி.—சிவாஜி மகாராஜாவின் சமாதியைப் பண்டைக்காலத்து ஞாபகச் சின்னஙகளுள் ஒன்றாகக்கருத வேண்டுமென்று பம்பாய்க் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கின்றார்கள்.

* * *

அஸ்டிரேலியா தேசத்தின் ஜனத்தொகை.—ஆஸ்டிரேலியா தேசமுழுமையும் எடுத்த குடிகணக்கின் தொகை 4,449,495 பேராம். இக்குடிக்கணக்கானது பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. புதுதெந்வேல்ஸில் 1648,212; விக்டோரியாவில் 1,315000; குவின்ஸ்லாண்டில் 603,908 ; தென் ஆஸ்டிரேலியாவில் 411161 ; மேற்கு ஆஸ்டிரேலியாவில் 280416 டாஸ்மானியா 190,898.

* * *

ரயில்வே வருமானம்.—ஸ்டேட் அன்ட் காரண்டீட் ரயில்வேயிற்கு 1911ஞ எப்ரல்மீ முதல் தேதியிலிருந்து ஜூன் மாதம் 10 உவரைக்கும் வந்திருக்கும் லாபம் 53,61,434 ரூபாயாம்.

* * *

சக்கரவர்த்தியின் குடும்பச் செலவு.—காலஞ்சென்ற எட்வர்ட் சக்கரவர்த்தியவர்களின் குடும்பச் செலவிற்காக வருஷமொன்றுக்கு 9828,500 ரூபாய் பார்லிமெண்டார் கொடுத்து வந்தார்கள். இப்போது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியவர்களுக்கு 95,10,000. ரூபாய் கொடுக்கிறார்கள். இதில் 10,50, 090 ரூபாய் ஜார்ஜ் சக்கரவர்த்தி யவர்களின் தாயாராகிய அலெக்ஸாண்டிராவுக்குக் கொடுத்துவிட வேண்டுமாம்.

* * *

தொண்டைமண்டலம் வேளாள அபிவிர்த்தி சங்கம்:—இச் சங்கத்தின் ஐந்தாவது வருட கான்பரன்ஸ் திருநேல்வேலி ஹிந்து காலேஜில் சென்ற

## இளமையும் ஒழுக்கமும்
அல்லது
## இரண்டு பிள்ளைகள்

(வி. பி. வேங்கடராம ஐயர், எம். ஏ. எழுதியது)

இது ஆங்கிலப்பாஷையில் உள்ளதொரு சிறந்த கதையைப்போலத் தமிழில் நூதனமாக எழுதப் பெற்றது. ஒரு தனவானுடைய குமாரனும் ஓர் குடியானவன் மகனும் நல்லாசிரியரை யடுத்துப் படித்து நல்லொழுக்கமுற்று மேன்மையடைந்த வரலாற்றைத் தெரிவிப்பது. பிரதானமான கதையின் இடையே பதினெட்டுச் சிறுகதைகள் உள்ளன. அவையாவும் பழைய தமிழ் நூல்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றவை. அவற்றால் உண்மை, உபகாரம், நன்றியறிதல், பெற்றோரைப் பேணல், பெரியோரை வணங்கல், பக்தி, ஜீவகாருண்யம், நட்பு முதலிய பலசிறந்த ஒழுக்கங்கள் தெளிவாகச் சொல்லப்படுகின்றன. சிறந்த பழைய செய்யுட்களின் கருத்துக்களை யனுஸரித்து இது முழுமையும் எழுதப் பெற்றுள்ளது. ஆண் பாலாரும் பெண் பாலாரும் பயன்பெற வாசிக்கத்தக்கது. யாவரும் வாசித்துணரும்படி இது ஸுலபமான நடையில் எழுதப்பெற்று நல்ல கடிதத்தில் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளது.

கிரவுன் ஸைஸில் 196-பக்கம் உள்ளது.

விலை அணா 8. வி. பி. மூலம் அணா 10.

### சில முக்கிய அபிப்பிராயங்கள்

மஹாமஹோபாத்தியாய பிரஹ்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள்.—வி. பி. வேங்கடராம ஐயர் எம். ஏ. தமிழில் எழுதியுள்ள "இளமையும் ஒழுக்கமும்" என்னும் புஸ்தகத்தைப் படித்துப் பார்த்தேன். யாவரும் படித்துத் தெரிந்துகொள்ளும்படி இஃது எளிய நடையிற் பிழையின்றி எழுதப் பெற்றிருக்கிறது. குழந்தைகளுடைய தேக ஆரோக்கியத்துக்காக மருந்துகளைச் சர்க்கரை முதலியவற்றிற் கலந்து கொடுப்பதுபோல நல்லொழுக்கங்களைக் கதைகள் வடிவமாக இப்புஸ்தகத்தில் தெரிவித்திருப்பது மிகப் பாராட்டத்தக்கது.

*
* *

*The Madras Standard.*—This is the first publication of its kind in excellent Tamil prose written solely for the edification of the young. * * It is just the book which should be read by every young boy and girl in the Tamil country. The style is at once simple and elegant. The free flew of excellent Tamil prose is really inviting to the general reader.* * We can confidently state that on its merits, this book is sure to become the boy's own favourite story book.* In schools it may serve the double purpose of a good text-book in prose and a classic intended for the moral instruction of youths. As a guide for Tamil composition also it should be really useful. We recommend the book to the notice of students and parents of children as well as to the general public.

## காதம்பரீ

### வெகு பிரசித்தமான ஸம்ஸ்கிருத காதம்பரியின் தமிழ் மொழிபெயர்ப்பு

பண்டித எம். துரைசாமி ஐயங்கார் இயற்றியது.

பிரஸித்திபெற்ற ஸ்ரீ பட்டபாணன் என்னும் மகாகவி 1400 வருஷங்களுக்கு முன் ஸம்ஸ்கிருதத்தில் இயற்றிய இக்காவியத்தின் அருமை பெருமைகள் சிறிதும் குறைபடாவண்ணம் இனிய, எளிய தமிழ்நடையில் மொழி பெயர்க்கப்பட் டிருக்கின்றது.

### அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.—"இம்மொழி பெயர்ப்பு சுயமாயெழுதிய நூலைப்போலவே அழகாய் அமைந்திருக்கின்றது. வாக்கியங்களின் நடைஇனிதாகவும் எளியதாகவும் ஏற்பட்டு, ஸம்ஸ்கிருத "காதம்பரீ" யின் சுவையை ஒத்திருக்கின்றது. இக்காலத்தில் நாவல்கள் அநேகம் வெளிவருகின்றன. ஆகிலும், நமது தேசத்தில் பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த கவிச்ரேஷ்டர்கள் வடமொழியில் இயற்றியிருக்கும் இத்தகைய நாவல்கள் வெகு அபூர்வமானவையானதால், இவை நமது தேசபாஷையில் வெளிவருவது அவசியம். பண்டைக் காலத்திலிருந்த பண்டிதர்கள் ஸம்ஸ்கிருதத்தில் எழுதிய வசனகாவியங்கள் வெகு குறைவு. அவைகளுள் 'காதம்பரீ' வெகு சிறந்ததென்று எவர் தான் அறியார்? ஸம்ஸ்கிருதத்திலிருந்து 'காதம்பரீ' யைத் தமிழில் மொழிபெயர்த்தது இதுவே முதல் தடவை."

இந்து நேசன்.—இப்பொழுது எமதிடம் கிடைக்கிருக்கும் தமிழ்மொழிபெயர்ப்பான இக்காதம்பரியானது சகலவிதத்திலும் ஸம்ஸ்கிருத காதம்பரிக்கு மிகவும் பொருந்தியதென்பதில் ஐயமில்லை. ஸம்ஸ்கிருத "காதம்பரீ"யைப் படிப்பவர் தமது மனதில் எவ்வித ரஸத்தை அனுபவிப்பாரோ அதே ரஸத்தை இத்தமிழ் மொழிபெயர்ப்பான "காதம்பரீ"யைப் படிப்பவரும் அநுபவிப்பரென்று நிச்சயமாய்க்கூறுவோம்......ஸம்ஸ்கிருத காதம்பரீயின் விஷயங்களையும், சுவையையும், அழகிய கதையின் வரலாற்றையும் அறிய விரும்பும் தமிழருக்கும், ஸம்ஸ்கிருதம் கற்கும்மாணுக்கருக்கும் இப்புத்தகம் மிக உபயோகமுள்ளது.

1-ம் பாகம் சுமார் 200 பக்கம்; விலை ரூபா 1.

(2-ம் பாகம் சீக்கிரம் வெளிவரும்)

வீ. கல்யாணராம ஐயர் அண்ட் கோ. புக்ஸெல்லெர்ஸ், எஸ்ப்ளனேட், மதராஸ்

**JUST PUBLISHED.**

## A COMPLETE COURSE
IN
BLACKBOARD DRAWING
**(IN TAMIL).**
BY
A. SUBRAHMANI AIYAR,
*Asst. and Drawing Master, Govt. Training School, Saidapet.*

**Very Useful for Elementary and Training Schools.**

THE BOOK IS DEDICATED TO
THE HON'BLE MR. J. H. STONE,
*Ag. Director of Public Instruction.*

Contains about 500 illustrations with instructions suitable for *Free Arm Drawing, Free Drawing* &c. Prepared on the new lines suggested in the scheme of studies for Elementary and Training Schools.

**Price As. 12. Postage extra.**

ONLY A FEW COPIES REMAINING

## TAMIL
### Short-hand Instructor

**A practical guide to the rapid acquisition of Tamil Short-hand**
BY
***M. SREENIVASA ROW, F. I. P. S.***
**Provincial Police Training School VELLORE.**

**Tested and approved by the Madras Government**

A Monthly allowance of Rs. 5 has been sanctioned by the Government to the Police Officers who pass at 80 words a minute

**PRICE Rs. 4 (Postage extra).**

***Address :—***

**The General Supplies Co.,
Mylapore, Madras, S.**

---

**புதிய கம்பெனி !!   புதுச்சரக்குகள் !!   புது ஏற்பாடு !!**

**பழைய ஸ்டாக்கு கிடையாது.**

திருப்தியில்லாத சாமான்களை, திருப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**குழந்தைகள் !**

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ... ரூபா 2 0 0 பெரிய செட்டு 1-க்கு ... ரூபா 4 0 0

**உருத்ராக்ஷங்கள் !! ஜபமாலைகள் !!**

**பரிசுத்தமானது.**

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது. கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக் கண்டி 32 உள்ளது. கண்டி 1-க்கு அணா 10 முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரியதாக இருக்கும்.

**வெண்பட்டு வேஷ்டிகள்**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | முழம் | 2½ | அகலம் | 1–க்கு | ரூ | 6–முதல் | 8–வரை | 7 | முழம் | 3 | அகலம் | 1–க்கு | ரூ | 10–முதல் | 13–வரை |
| 5 | ,, | 3 | ,, | ,, | ,, | 7 ,, | 9 ,, | 8 | ,, | 3 | ,, | ,, | ,, | 12 ,, | 15 ,, |
| 6 | ,, | 2½ | ,, | ,, | ,, | 8 ,, | 9 ,, | 9 | ,, | 3 | ,, | ,, | ,, | 14 ,, | 16 ,, |
| 6 | ,, | 3 | ,, | ,, | ,, | 9 ,, | 12 ,, | 10 | ,, | 3 | ,, | ,, | ,, | 15 ,, | 18 ,, |

**காசி பட்டுப் பீதாம்பரங்கள்**

பட்டுப் பீதாம்பரங்கள் சகல தினுஸுகளும் விலை சாசமாக அனுப்பப்படும். விலை ஜாப்தா இனாம்.

உடனே எழுதவும்   விலாசம் : மானேஜர்.—

**பட்டுப் பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.**

Manager, SILK PITAMBER CO., BENARES CITY.

# ஆண் பெண் யாவரும் படிக்கத் தக்கவை

## ப. சம்பந்த முதலியார் இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| லீலாவதி ஸுலோசனா | 0 | 12 |
| இரண்டு நண்பர்கள் | 0 | 12 |
| சத்ருஜித் | 0 | 12 |
| மனோஹரன் | 0 | 12 |
| கள்வர் தலைவன் | 0 | 12 |
| அமலாதித்யன் | 1 | 0 |
| யயாதி | 0 | 8 |
| காலவரிஷி | 0 | 8 |
| ரத்னாவளி | 0 | 12 |
| வேதாள உலகம் | 0 | 8 |
| சாரங்கதரன் | 0 | 8 |
| காதலர் கண்கள் | 0 | 12 |
| பேயல்ல பெண்மணியே | 0 | 8 |
| மார்க்கண்டேயர் | 0 | 8 |

## ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயா இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| வாஸந்திகை | 0 | 8 |
| சபலை | 0 | 8 |

## பங்கிம் சந்த்ர சடர்ஜி நாவல்களின் மொழிபெயர்ப்பு

| | ரூ. | அ. |
|---|---|---|
| சந்த்ரசேகரன் | 0 | 8 |
| ஆனந்தமடம் | 0 | 8 |
| லீதாராம் | 1 | 0 |

## ஏ. மாதவய்யா இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| பத்மாவதி சரித்ரம் (2 பாகமும்) | 1 | 0 |
| முத்து மீனாக்ஷி | 0 | 8 |
| விஜயமார்த்தாண்டம் | 0 | 12 |
| ஒதெல்லோ | 0 | 12 |
| திருமலை சேதுபதி | 0 | 8 |

## ஜே. ஆர். ரங்கராஜு இயற்றியவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| ராஜாம்பாள் | 0 | 12 |
| சந்திரகாந்தா | 0 | 12 |
| மோஹனசுந்தரம் | 0 | 12 |

## விவசாயிகளுக்கு மிகவும் அவசியமானவை

| | ரூ. | அ. |
|---|---|---|
| நெல் | 1 | 0 |
| கரும்பு | 1 | 0 |
| தென்னை | 1 | 0 |
| மாம்பழம் | 0 | 7 |
| விவஸாயபோதினி | 1 | 4 |
| விவஸாய விளக்கம் | 1 | 4 |

## இதர தமிழ்ப் புத்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| பெரிய புராணம், மூலமும் அரும்பத வுரையும், வசனமும் | 3 | 0 |
| திருமூலர் திருமந்திரம், மூவாயிரம் பாக்கள் அடங்கியது | 1 | 8 |
| இங்கிலீஷ் வைத்ய சங்க்ரஹம் | 3 | 8 |
| அனுமான்விங் | 0 | 12 |
| காமாக்ஷி | 0 | 8 |
| பிரேமகலாவதீயம் | 0 | 12 |
| வத்ஸலா | 0 | 8 |
| கண்மணி | 0 | 3 |
| சின்னத்தம்பி | 0 | 4 |
| லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் | 0 | 12 |
| சாரதாம்பாள் | 0 | 8 |
| புருஷோத்தமன் | 0 | 10 |
| மாலிகாபூஷணி | 0 | 10 |
| ஆங்கில சிரோமணிகள் | 0 | 12 |
| போஜசரித்திரம், 16 மிகவும் அழகிய படங்களுடன் | 1 | 8 |
| மோஹனாங்கி | 1 | 4 |
| ஸ்ரீ விவேகானந்த விஜயம் | 1 | 4 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸ விஜயம் | 1 | 4 |
| தாயுமானவர் பாடல் உயர்ந்த பதிப்பு | 1 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் | 2 | 0 |
| விநோதரஸ மஞ்சரி | 1 | 2 |
| அராபிநைட் கதை படங்களுடன் | 2 | 8 |
| விக்ரமாதித்யன்கதை | 1 | 8 |
| தேசபக்தர்கள் சரித்ரம் | 0 | 12 |
| நாலடியார் உரையுடன் | 1 | 2 |
| அம்பாலிகை | 0 | 12 |
| தாமோதரன் | 0 | 12 |
| இளமையும் ஒழுக்கமும் | 0 | 8 |
| மானிட மர்ம சாஸ்த்ரம் | 5 | 0 |
| மானஸமர்ம சாஸ்த்ரம் | 2 | 0 |
| பீமலா | 0 | 6 |
| யெலேன் | 0 | 6 |
| கற்பகவல்லி | 0 | 8 |
| திருமாளிகை | 0 | 6 |
| சத்தியவல்லி | 0 | 12 |
| குணசீலன் | 0 | 10 |
| அக்ஞாத வாஸம் அல்லது மாண்டவன் மீண்டமாயம் | 0 | 8 |

இப்பத்திரிகை சந்தாதாரர்களுக்கு மாத்ரமே, ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

விலாஸம்.—மானேஜர், "விவேகபோதினி" மயிலாப்பூர், மதராஸ்

# Some Interesting Tamil Publications

## VERY USEFUL TO MEMBERS OF BOTH SEXES.

**Ramayana Catechism.**—New Edition, completly revised and greatly improved. With beautiful half-tone illustrations. Contains all the 7 Cantos and also extracts from Ananda and Adyatma Ramayana. **Price Re. 1.**

**Mahabharata Catechism.**—Part I, contains Adi, Sabha, Aranya, Virata and Udyoga Parvas. Written in lucid Tamil. **Price As. 12.**

**Mahabharata Catechism.**—Part II, contains Bhishma, Drona, Karna, Salya, Sauptika and Stri Parvas. Sri Krishna is teaching of Bagavad Gita to Arjuna is beautifully told. **Price As 12.**

**Mahabharata Catechism.**—Part III, contains Santi, Anusasana, Aswameda, Asramavasa, Mousala, Mahaprasthana and Swargarohana Parvas. **Price As. 12.**

**Srimad Baghavatha Catechism**—Part I contains the Ist nine skandas. Writen in simple Tamil. Tastefully illustrated. **Price Re. 1.**

**Aryamatha Upakynam**, 4th Edition, completely revised and enlarged. Beautifully illustrated with 12 choice plates. Has an appreciative introduction by the Hon'ble the Advocate General, Madras. **Price As. 4.**

**Nalopakyanam.**—By the late Pandit S. M. Natesa Sastri, B. A. Excellenty written in simple and chaste Tamil. With illustrations. **Price As 12.**

**Wonders in Nature.**—Some of the greatest Wonders of Nature, have been described in chaste and popular Tamil. Each lesson is neatly illustrated. The book has an introduction by Mr. L. C. Williams Pillai, Rao Bahadur, Retired Inspector of Schools. **Price As. 8.**

**Sathiavalli.**—A high Class Tamil Novel. Very interesting and instructive. This has been prescribed as a text-book for Government Training Schools. Mr. T. Ramakrishna Pillai, B. A., F. M. U., Chief Examiner in Tamil has written an appreciative introduction to the same. **Price As. 12.**

**Life of Rajam Aiyar.**—Author of Kamalambal Charitram and Editor of Prabhudha Bharata. Several of his writings have been translated. With illustrations **Price As. 8.**

**Griselda or Patient Wife.**—Highly interesting and instructive story. **Price As. 3.**

**Prabavathi**—An interesting Tamil Novel.—neatly printted. **Price As. 4.**

**Lessons from Geology.**—Specially adapted for Elementary and Training Schools, Very useful for boys and girls. It treats of Rocks and Minerals, their action and uses. Has more than 30 fine illustrations. **Price As. 8.**

*Note*:—**To subscribers of the "Viveka Bodhini" the above books are supplied for Rs. 5 or if any of those books are required separately a commission of 20% vill be allowed on the above prices Postage extra.**

---

**Approved by the text-book Committee.**

ARYAMATA UPAKYANAM

**A Collection of moral stories in Tamil**

Fourth Edition, Completely Revised, greatly improved and tastefully illustrated with 12 Half-tone plates.

The Hon' ble the Advocate General, Madras has written an appreciative introduction to this Book.

**Price As. 4**

Introduced in almost all schools for the IV class.

Sample copy free to Heads and Managers of Schools.

**Matriculation & School final**

**Examinations, 1912.**

**NOTES ON**

THE POETICAL SELECTIONS FOR 1912

BY

***A. M. S. RAGHAVAN, B. A. L. T.***

*Sometime Lecturer, Kallikota College,*

*Berhampur and Wesley College, Madras.*

**Price As. 10.**

*Address* :—

**THE GENERAL SUPPLIES CO., MYLAPORE, MADRAS S.**